விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 19 ஞாயிற்றுக்கிழமை (02.05.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 134

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து
RAMCO

## ★ இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியா அக்கறை ★

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் மன்மோகன் சிங் விரைவில் சந்திப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்து வரும் இந்திய மத்திய அரசு விரைவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை இந்தியாவுக்கு அழைத்து பேசவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழர் விவகாரம் குறித்து சோனியாவுடன் கலைஞர் சந்திப்பு

(சென்னை)

ஈழத் தமிழர்களின் விவகாரம் குறித்து இன்று இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தியுடன் தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி கலந்துரையாடவுள்ளார்.

இந்தியச் செய்திச் சேவை ஒன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது. முதல்வர் கருணாநிதி இன்று புதுடில்லிக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ள நிலையில் இக் கலந்துரையாடல் இடம்பெறவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விஜயத்தின் போது காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி மற்றும் மன்மோகன் சிங் ஆகி

(20 ஆம் பக்கம் பார்க்க)

## கோதுமை மாவின் விலை 3 ரூபாயால் அதிகரிப்பு

(கொழும்பு)

ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 3 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகக் கோதுமை மா இறக்குமதியாளர் நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

இத்தகவலை அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத் தலைவர் என்.கே. ஜெயவர்த்தன வெளியிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கோதுமை மா ஒரு கிலோவின் விலை 3 ரூபாயால் அதிகரித்துள்ளதாகக் கோதுமை மா இறக்குமதி

(20 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவை அரசாங்கம் பெறும் சாத்தியம் உண்டு

## ★ சிங்கள ஊடகங்கள் ஆரூடம் ★

(கொழும்பு)

அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெறும் சாத்தியங்கள் அதிகமாகக் காணப்படுவதாகச் சிங்கள ஊடகங்கள் சில செய்தி வெளியிட்டுள்ளன.

தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வை அண்மித்த அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்று முன்வைக்கப்படும் பட்சத்தில் இது சாத்தியப்படும் என அந்த ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைத் தமிழர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அண்மைய முக்கிய கோரிக்கையாக இருந்து வருகின்றது. இது எதிர்வரும் காலங்களில் சாத்தியப்படும் நிலைப்பாடு காணப்படுவதாகச் சிங்கள ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் சில நம்பகத்தன்மை வாய்ந்த தரப்

(20 ஆம் பக்கம் பார்க்க)

## நாவலப்பிட்டித் தேர்தல் வன்முறை ஜனாதிபதியிடம் அறிக்கை கையளிப்பு

(கொழும்பு)

நாவலப்பிட்டித் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான விசாரணை அறிக்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது நாவலப்பிட்டிப் பிரதேசத்தில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் தேர்தல் முறைகேடுகளில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவங்களின் காரணமாக நாவலப்பிட்டியில் 37 வாக்களிப்பு நிலையங்களில் மீள்வாக்

(20 ஆம் பக்கம் பார்க்க)

## நாமல் ராஜபக்ஷவுக்கு அமைச்சு பதவி வழங்கப்பட வேண்டும்

### சப்ரகமுவ மாகாண சபை கோரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதியின் புதல்வர் நாமல் ராஜபக்ஷவுக்கு அமைச்சுப் பொறுப்பு வழங்கப்பட வேண்டும் என சப்ரகமுவ மாகாண சபை மாதாந்த அமர்வுகளில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தாருண்யட ஹெடக் அமைப்பின் தலைவரான நாமல் ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமைச்சுப் பொறுப்பினை வழங்க வேண்டும்

(20 ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டின் பல பாகங்களிலும் மழை வீழ்ச்சி

(கொழும்பு)

நாட்டின் பல பாகங்களில் மழை வெள்ளம் ஏற்பட்டுள்ளது. அத்தனகல்ல, ராஜகிரிய, மகரகம மற்றும் புறக்கோட்டை ஆகிய பகுதிகளில் மழை வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு முதல் நாட்டில் பல பகுதிகளில் மழை பெய்து வருகின்றது. அங்கொடப் பிரதேசத்தில் 148.1 மில்லிமீற்றர் மழை பெய்துள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம்

(20 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்த வெற்றியின் ஓராண்டு பூர்த்தியை காலி முகத்திடலில் கொண்டாட ஏற்பாடு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான போர் வெற்றியின் ஓராண்டு பூர்த்தியின் பிரதான வைபவத்தினை இம் மாதம் 20 ஆம் திகதி காலி முகத்திடலில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜி-15 நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாடு திரும்பியதும் இந்த நிகழ்வில் கலந்து கொள்வார் என்றும் தெரிவித்த பாதுகாப்புச் செயலாளர் இம் மாதம் 12 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரையிலான ஒரு வார காலப் பகுதியினைப் போர் வீரர் வாரமாகப் பிரகடனப்படுத்தியிருப்பதாகவும் கூறினார்.

முப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபர் சகிதம் வன்னிக்கான விஜயத்தினை மேற்

(20 ஆம் பக்கம் பார்க்க)

வீட்டிலும் வேலைத்தலத்திலும் இதமான காற்றை இனிதே அனுபவிக்க ...

சிங்கர் எயார்கண்டிஷனர்கள்

• உத்தரவாதம் • விற்பனைக்குப் பிந்திய சேவை • இலகு தவணைக் கொடுப்பனவு



SINGER
யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

யாழ்ப்பாணம்-ஸ்டான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, மானிப்பாய்

# இளைஞர்களை அணிதிரட்டி அரசியல் நீரோட்டத்தில் இணைக்கப்பட வேண்டும்

## மேதினக் கூட்டத்தில் மாவை சேனாதிராசா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எமது அரசியல் இலக்கு அடையப்படுவதற்கும் எமது எதிர்கால சந்ததியினர் சுதந்திரமாக வாழ்வதற்காக இளைஞர்களை அணிதிரட்டி அரசியல் நீரோட்டத்தில் இணைக்க வேண்டும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

நேற்று தமிழரசுக்கட்சி அலுவலகத்தில் இடம் பெற்ற மேதினக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழ் தொழிலாளர் வர்க்கம் அடிமைப்பட்டுள்ளது. இன்று எல்லா விதத்திலும் தாயக நிலங்கள் சுரண்டப்படுகின்றது.

இராணுவமயம், சிங்களமயம், நவீனவர்த்தகம் என்ற ரீதியில் எங்களுடைய நிலம் விலைபோய்க்கொண்டிருக்கிறது.

இதை அறியாமல் தொலைக்காட்சி பெட்டிக்கு முன்னால் அமர்ந்து கொண்டிருக்கின்ற இனமாக மாறிக்கொள்ள முடியாது.

ஏ 9 பாதை திறந்ததன் பின்னர் யாழ்.குடாநாட்டு வீதிகளில் சிங்களவர்களின் கடைகள் உருவாக்கப்பட்டு தென்பகுதி உற்பத்திகள் இங்கு குவிக்கப்படுகின்றன.

எமது உற்பத்திகள் அநியாயமாக்கப்படுகின்றது. உற்பத்திக்காக எவ்வளவு செலவு செய்கிறமோ அந்த செலவைக்கூட மீட்கமுடியாமல் உள்ளது.

எங்களுடைய நிலங்கள் மட்டுமல்ல எங்களுடைய பாரம்பரிய உற்பத்தியை வெளிப்படுத்துகின்ற பனைவளம் சிதைக்கப்பட்டுள்ளது.

எமது தொழிலாளர் சங்கங்கள் இன்று அரசாங்கத்துக்கு விலைபோகிறார்கள்.

இந்த வகையில் எமது மூல வளங்கள் சுரண்டப்பட்டு அழிக்கப்பட்டு எதிர்காலத்தில் இல்லாமல் செய்யப்படுகின்ற அளவிற்கு நிலைமையுள்ளது.

எமது விவசாய நிலங்கள் உயர்பாதுகாப்பு வலயங்களுள் முடக்கப்பட்டுள்ளன. இதனால் எமது பொருளாதாரம் வீழ்ச்சி கண்டுள்ளது. இவை மீட்கப்படுகின்றபோது எமது பொருளாதாரம் மீட்சிபெறும்.

இவ் மேதினக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிறிதரன், ஈ.சரவணபவன் உட்பட தமிழரசுக்கட்சியின் ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர். (ந-7)

## ஆலயத்திற்குச் செல்ல படையினர் அனுமதி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கொட்டடி சித்தி விநாயகர் (பெரிய பிள்ளையார்) ஆலயத்திற்கு எதுவித பாதுகாப்புக் கெடுபிடிகளுமின்றி செல்ல இராணுவத்தினர் நேற்று அனுமதி வழங்கியுள்ளனர்.

ஆலயத்தின் மகா கும்பாபிஷேக கிரிகைகள் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில் ஆலய பரிபாலன சபையினர் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி உறுப்பினர் சிறிபதி ஊடாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவரின் நடவடிக்கையினால் இராணுவத்தினர் அனுமதியளித்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

இதுவரை காலமும் ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்கள் இராணுவத்தினரிடம் அடையாள அட்டையை வழங்கி பாஸ் பெற்றுச் செல்ல வேண்டிய நடைமுறையிலிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## ஜனாதிபதி கோரிக்கை

திரைப்பட விழாவை இலங்கையில் நடத்தக் கூடாது என தமிழகத்திலிருந்து எதிர்ப்பு கிளம்பிய நிலையில், இவ் விழாத்தூதராக நியமிக்கப்பட்ட அமிதாப்பச்சனை அதில்கலந்துகொள்ள வேண்டாம் என்று திரைப்பட இயக் குநர் சீமான், மதிமுக பொதுச் செயலாளர் வைகோ மற்றும் தொல். திருமாவளவன் உள்ளிட்டோர் வலியுறுத்தியிருந்தார். இந்நிலையில் திட்டமிட்டபடி திரைப்பட விழாவை வெற்றிகரமாக நடத்துவதற்கு ஒத் துழைப்பு வழங்க வேண்டுமென இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவிடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார். (ந-5)

## இணையவழி கணனி கற்கை அனுமதிப் பரீட்சை இன்று

(யாழ்ப்பாணம்)

மொரட்டுவ பல்கலைக்கழக இணைய வழி கணனி இளமாணி கற்கை நெறிக்கான அனுமதிப் பரீட்சை இன்று யாழ்ப்பாண பல்கலைக்கழக வெளிவாரி அலகின் பரீட்சை மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே குறித்த பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் இன்று காலை 9.30 மணிக்கு பரீட்சை அனுமதி அட்டையுடன் வருகை தந்து யாழ். பல்கலைக்கழக வெளிவாரி பரீட்சை அலகு இணைப்பாளர் சிவராஜாவுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் அறிவித்துள்ளார். (ந-5)

## கிளிநொச்சியில் ஆயுதங்கள் மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மற்றும் இரணைமடுப் பகுதியில் நேற்று பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது பெருந்தொகையான ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மோட்டார் குண்டுகள் 7000, ஆர்.பி.ஜி. குண்டுகள் 7, பராகுண்டுகள் 26 உட்பட மேலும் பல ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (ந-9)

## மலேசியாவில் அரசியல் தஞ்சம் இலங்கையர் மீது விசாரணை

(கொழும்பு)

அரசியல் தஞ்சம் கோரிய 75 இலங்கையர்கள் தொடர்பாக விசாரணை நடத்தும் பொருட்டு அவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ள பகுதிக்கு மலேசியாவுக்கான பிரதி இலங்கை உயர்ஸ்தானிகர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

அரசியல் தஞ்சம் கோரி அவுஸ்திரேலியாவுக்குப் படகில் சென்று கொண்டிருந்த போது மலேசியப் பொலிஸாரால் இவர்கள் அண்மையில் கைது செய்யப்பட்டு முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களில் 6 பெண்களும் 8 சிறுவர்களும் உள்ளனர்.

இவர்கள் சில தினங்களுக்கு முன்னர் மலேசியக் கடற்பகுதியில் சேதமடைந்த படகொன்றில் தத்தளித்துக் கொண்டிருந்த போது அந்நாட்டுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்ததாக ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

அவுஸ்திரலியாவில் அரசியல் தஞ்சம் கோரி பயணித்ததாக மலேசிய பொலிஸாரிடம் அவர்கள்கூறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## ஐ.தே.கட்சி எம்.பி. தயாசிறி அரசுடன் சேரும் வாய்ப்பு!

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் குருநாகலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர். தயாசிறி ஜெயசேகர அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளும் சாத்தியம் இருப்பதாக கூறப்படுகிறது.

அவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவான சில கருத்துக்களை வெளியிட்டு வருவதாகவும் அத்துடன் அரசாங்கத்துடன் சில இரகசிய சந்திப்புக்களை நடத்திவருவதாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் தயாசிறி ஜெயசேகரவுக்கு ஐக்கிய தேசியக் கட்சியில் முக்கிய பதவி ஒன்று வழங்குவதற்கான நடவடிக்கைகள்மேற்கொள்ளப்படுவதாக கட்சித்தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஐக்கிய தேசிய கட்சியைகட்டி யெழுப்ப ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போன்ற ஒரு அரசியல்வாதி தேவை என தயா சிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

கட்சியில் எந்த ஒரு பிரதான பதவியினையும் வகிக்காமல் கட்சியை வழிநடத்திச் செல்லக் கூடிய ஒருவரே தற்போது ஐக்கிய தேசிய கட்சிக்கு தேவை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமது கட்சியில் எந்த ஒரு சிரேஷ்ட பதவியையும் வகிக்காமல் கட்சியை வழிநடத்திச் செல்வதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-5)




மைசூர் சாமுண்டீஸ்வரி ஜோதிட நிலையம்

இந்தியாவில் மந்திராலயத்திலிருந்து வருகை தந்துள்ள பிரபல கைரேகை ஜோதிட வல்லுனர்

லட்சுமி சாஸ்திரி

077 0712537

கைரேகை மூலம் துல்லியமாக நடப்பவை மற்றும் நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களை, பலன்களை குறைந்த செலவில் கூறுவார்.

துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்

கை ரேகை, நாம நட்சத்திரம், ஜாதகம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், லட்சுமி வசீகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வீட்டில் வதிவிடப்பிரச்சினை, விஷேட பயணம், எதிரிகள் கண் திருஷ்டி, கஷ்ட நஷ்டங்கள், கோர்ட் வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண் பிள்ளைகள் பெற்றோருடன் ஒற்றுமையாக நிலைத்திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல் இவைகள் அனைத்தும் 11 நாட்களுக்குள் செய்து தரப்படும்.

இவற்றினைத் தெரிந்து கொள்ள ஒருமுறை எங்களைச் சந்தித்து பயன் பெறுங்கள்

121 A, கஸ்தூரியார்வீதி,
யாழ்ப்பாணம்.
(லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகாமையில்)

(1308)

கைரேகை பார்க்கும் நேரம்:
காலை 7.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை பார்க்கப்படும்.

**சேவை முகவர்**

விற்பனைக்கு

கந்தர்மடம், கோண்டாவில், உரும்பிராய் பலாலி வீதி, 150 மீற்றர் தூரம் 9 பரப்பு பொற்பதி வீதி, இருபாலை கிழக்கு ஆகிய இடங்களில், காணிகள், வீடு விற்பனைக்குண்டு. விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ள லாம்.

தொடர்பு : சுந்தரம்
222 9177, 071 462 4830 (1262)

**காணி விற்பனைக்கு**

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி றோட்டில் நல்ல தண்ணீர்த் தோட்டக் காணி விற்பனைக்குண்டு. (19 பரப்பு)

தொடர்பு இல: 0777565826
0112945474
(1265)

**விற்பனைக்கு**

சேர்டனைப் பந்தல் மணவறையுடன் விற்பனைக்குண்டு. விலை நேரில்.

தொடர்புக்கு:
021 3737968
077 9789467 (1299)

**காணி விற்பனைக்கு**

இல.43 அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, சுண்ணாகம் 8 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ள பின்வரும் தொலைபேசி இலக்கத்தில் கதைக்கலாம்.

Dr.R.கனகலிங்கம் 0779522105
Mr.சி.தனஞ்சயன் 0714102174
Mrs.ச.ஜெயபாலன் 0771622770 (1212)

**ஸ்ரீராம ஜெயம்**

இந்தியாவின் எட்டயபுரத்தைச் சேர்ந்த புகழ் பெற்ற ஜோதிடர் S.சந்திரபோஸ் ஜாதகம், கைரேகை, எண் கணிதம், திருமணப் பொருத்தம் மிகத்துல்லியமாகப்பார்க்கப்படும். T.P.:0778752163
414, சன்ஜெயா உணவகம்,
மேல்மாடி அறை இல.02
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (1249)

**விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள ஒக்ஸ்பொட் கார் மற்றும் சாலி மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

நேரில் பார்வையிடலாம்.

தொடர்புக்கு:
0213737968 (1300)

**காணி விற்பனைக்கு**

சுதுமலை மாவடி வீதியில் (சுதுமலை தாவடி வீதியிலிருந்து 100 M தூரத்தில்) 4 1/4 பரப்பு, தனிக் கிணறு, வான் பயிர்கள் உள்ள காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 078 7841771 (1305)

**உடன் விற்பனைக்கு**

காணி
பொன்னாலை, வலிமேற்கில், பொன்னாலை பருத்தித்துறை வீதிக்கு அருகில், 10 பரப்பு.

வயல்
நெல்லியான், வலி மேற்கில், பொன்னாலை பருத்தித்துறை வீதிக்கு அருகில், 45 நெற்பரப்பு.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் :
077 6110763 (1287)

# கத்தோலிக்க மாணவர்களின் சமய அப்பியாசத்திற்கு நேரம் ஒதுக்க நடவடிக்கை

(அல்வாய்)

25 இற்குக் குறையாத கத்தோலிக்க மாணவர்களைக் கொண்ட சகல பாடசாலைகளிலும் மாதத்தில் முதலாவது வெள்ளிக்கிழமைகளில் அம்மாணவர்களின் சமய பக்தி அப்பியாசத்திற்காக ஒரு மணித்தியாலத்திற்கு மேற்படாத நேரத்தை ஒதுக்க நடவடிக்கை எடுக்குமாறு மத்திய கல்வியமைச்சின் கல்விச் செயலாளர் எம்.எம். எஸ். இ. பண்டார சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

இவ் ஒரு மணித்தியாலத்திற்குள் பாடசாலைக்குள் அல்லது பாடசாலைக்கு அருகாமையிலுள்ள கத்தோலிக்க வணக்கஸ்தலத்தில் கத்தோலிக்க மாணவர்கள் ஆராதனை பூசையில் கலந்து கொள்ள வேண்டும் எனவும் அதிபரினால் கத்தோலிக்க ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் இவ்வேலைத்திட்டத்தை அமுல்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து கத்தோலிக்க சபையினால் கல்வியமைச்சுக்கு யோசனை முன் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6-19)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த 24 25 ஆம் திகதிகளில் நடைபெற்ற அனி மேசன் கற்கை நெறிக்கான கருத்தரங்கிலும் பயிற்சிப்பட்டறையிலும் பங்கு பற்றிய அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும் இந் நிகழ்வில் பயிற்சிப்பட்டடையில் பங்கு பற்றிய அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறுசியாட்டணிப்பாள்ஃபைகேட்டுள்ளது. (2-6)

# கிளி- முல்லைத்தீவு மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட வர்த்தர்களுக்கானது

(சாவகச்சேரி)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கான விண்ணப்பங்களை திறைசேரி அவசரமாக கோரியுள்ளது.

இதற்கமைய மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் அனைவரும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட வணிக கைத்தொழில் ஒன்றிய அலுவலகங்களுக்கு நேரில் வருகை தந்து விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு ஒன்றியத்தின் தகவல் முகாமையாளர் கே. கோகுலன் அறிவித்துள்ளார்.

மேற்படி கிளிநொச்சி காரியாலயம் இல.13, 2 ஆம் பண்ணை , கனகபுரம் எனும் முகவரியிலும் முல்லைத்தீவு காரியாலயம் முதலாம் யுனிற் , யோகபுரம், மல்லாவி எனும் முகவரியிலும் அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (2-29)

## "நிலாக்காலம்" நாடக அரங்கு

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி மகாஜனாசபை கலைஞர் வட்டம் நடத்தும் "நிலாக்காலம்" கலை நிகழ்வில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு கலாபூஷணம் செல்லையா மெற்றாஸ் மெயில் ஞாபகார்த்த நாடக அரங்கு மகாஜனசபை ஆலோசகர் க.நாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

தொடர்ந்து கலை நிகழ்வுகளாக "ஆறுமுகன் அருள்" நாட்டிய நாடகம், " மகுட பங்கம் " வரலாற்று நாடகம், " வட்டிக்கடை வடிவாம்பிகை" நகைச்சுவை கலந்த நாடகம், " காத்தவராயன் " "சிந்து நடைக் கூத்து ஆகியன இடம் பெறவுள்ளன. (6)

## கலந்துரையாடல்

(அல்வாய்)

பருத்தித்துறை பிரதேச அபிவிருத்தி தொடர்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்று ஞாயிற் றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு யா/வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் கலந் துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளனர்.

மேற்படி கலந்துரையாடலில் கலந்து கொண்டு தமிழ் தேசிய கூட்டமைப்பு அங்கத்தவராகி பருத்தித்துறை பிரதேசத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்தி தமிழ் தேசியத்தை வலுப்படுத்துமாறு பருத்தித்துறை பிரதேச மக்களை தமிழ் தேசிய ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (6-19)

## இராசி பலன்

*02-05-2010*
*(சித்திரை 19, ஞாயிற்றுக்கிழமை)*
*சதுர்த்தி பிற்பகல் 5.31 மணிவரை*
*கேட்டை காலை 6.06 மணிவரை*
*இராகுகாலம் 4.27-5.57 மணிவரை*
*சுபநேரம் 8.57-10.27மணிவரை*
*சங்கடஹர சதுர்த்தி விரதம்*

| | |
|---|---|
| மேடம் | எதிர்பாராத செலவு, ஆன்றோர் சந்திப்பு, அதிக பிரயாசை, உஷ்ண வியாதி. |
| இடபம் | திருடர் பயம்,காரிய தாமதம், போசனசுகம், ஆரோக்கியக் குறைவு. |
| மிதுனம் | தேகநலன், களஸ்திர நன்மை, மனோ தைரியம், காரிய அனுகூலம். |
| கடகம் | மனமகிழ்ச்சி, தடைப்பட்ட காரியம் கைகூடும், போசன சுகம், உடல் நலம். |
| சிங்கம் | பணக்குறைவு, அஜீரண ரோகம், குடும்பக் கவலை, காரிய இடையூறு. |
| கன்னி | சுபகாரியம், மனச்சஞ்சலம், பெரியோர் வெறுப்பு, சுபசெலவு. |
| துலாம் | காரிய அனுகூலம், கலந்துரையாடல், விருந்துபசாரம், பெருமையடைதல். |
| விருச்சிகம் | போசன சுகக் குறைவு, தொழில் சிந்தை, விவாதம், ஆரோக்கிய நிலை,அதிகசெலவு. |
| தனுசு | வெகுமானம், தெய்வசிந்தை, சயனசுகம், நல்ல முயற்சி. |
| மகரம் | காரிய அலைச்சல், சயனசுகக் குறைவு, பிறருக்கு உதவுதல், சுபசெலவு. |
| கும்பம் | தனதானிய சேர்க்கை, குடும்பச் சுகம்,காரிய நன்மை, விருந்துபசாரம். |
| மீனம் | எடுத்த காரியம் கைகூடும், சுப செய்தி, ஆரோக்கியமான நிலை, நல்ல வரவேற்பு. |

வளவன்

# வாரம் ஒரு தகவல்

## அடையாளம்

"சேர்...என்னை அடையாளம் தெரியுதா உங்களுக்கு?"

"என்னப்பா இப்படிக் கேட்கிறாய்... என்னிடம் படித்த பையன் தானே நீ...?"

ஆமாம் சேர். அ..அது... வந்து... ஒ... ஒரு விடயம் சொல்ல வேண்டும்"

"என்னப்பா... இது... வார்த்தை திக்கித் திக்கி வருகுது... உடம்பு நடுங்குது... நீ என்னமோ தப்புப் பண்ணியிருக்கிறாய்"

"எப்படிச் சொல்லுறீங்க?"

நான் சொல்லவில்லை... பஞ்ச தந்திரம் சொல்லுது."

"என்ன சொல்லுது?"

"ஒரு குற்றவாளி எப்படி இருப்பான் என்பதற்கு சில அடையாளம் உண்டு என்று சொல்லுது"

"அப்படியா?"

"ஆமாம்... குற்றம் செய்து விட்டுப் பயந்து போன ஒருத்தனுக்கு முகம் வெளிறியிருக்குமாம். பேச்சுக் குளறுமாம். மிரண்ட பார்வை...ஒடுங்கிய கர்வம்... தள்ளாடித் தள்ளாடி நடப்பான். முகம் வெளுத்துப் போகும். நெற்றியில் வியர்த்துக் கொட்டும். வார்த்தை திக்கித் திக்கி வரும். உடல் நடுங்கிக் கொண்டிருக்கும். பார்வை கீழ் நோக்கிச் செல்லும். இந்த வெளிப்படை யான அடையாளங்களைக் கொண்டு குற்றவாளியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று சொல்கிறது பஞ்ச தந்திரம்! இந்த அறிகுறி அத்தனையும் இப்ப உன்னிடம் இருக்கு. என்ன விடயம் சொல்லு. எதற்காக இந்த நேரத்தில் என்னைத் தேடி வந்தாய்?"

"பத்திரிகை கொடுப்பதற்காக..."

"என்ன பத்திரிகை?"

"கல்யாணப் பத்திரிகை"

"யாருக்குக் கல்யாணம்?"

"எனக்குத்தான் சேர்"

"அடப்பாவி... அதற்காகவா இப்படி நடுங்குகிறாய். சந்தோஷப் படவேண்டிய விடயமில்லையா இது? கொண்டா இப்படி... பொண்ணு யாரு?"

"உங்க மகள் தான் சேர்"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 70 | 90 | 70 |
| தக்காளி | 100 | 120 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 40 |
| கோவா | 40 | 50 | 50 |
| கரட் | 100 | 120 | 90 |
| பூசணி | 40 | 50 | 30 |
| புடோல் | 50 | 60 | 40 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 50 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 50 |
| பாகற்காய் | 110 | 120 | 50 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 40 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 120 | 130 | 60 |
| லீக்ஸ் | 100 | 120 | 90 |
| பீற்றூட் | 50 | 60 | 40 |
| கறிமிளகாய் | 80 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 120 | 140 | 200 |
| போஞ்சி | 150 | 160 | 120 |
| கத்தரி தம்புள்ள | 40 | 50 | 30 |
| கீரை - 1 பிடி | 30 | 35 | 25 |
| தேசிக்காய் | 80 | 90 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 35 | 30 |

## ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை மாற்றுவது தொடர்பில் உடன்பாடில்லை

### ருவன் விஜேவர்தன

(கொழும்பு)

அரசியல்வாதிகள் மீது மக்கள் நம்பிக்கை இழந்து விட்டார்கள். அதன் வெளிப்பாடே மக்கள் தேர்தலில் வாக்களிப்பது தொடர்பில் அக்கறை காட்டுவதில்லையென ஐ.தே.கட்சியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.

இந்த அரசாங்கம் 6 வருடங்களுக்கு ஆட்சியிலிருக்கப் போவதில்லை . அதற்கு முன்பதாக பொதுத் தேர்தல் நடத்த வேண்டிய நிலை உருவாகுமென்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றுகையிலேயே ருவன் விஜேவர்தன இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் இந்த அரசாங்கம் 6 வருடங்கள் ஆட்சியில் இருக்கப் போவதில்லை. அதற்கு முன்பு மக்கள் வீதியில் இறங்கி வீட்டுக்கு அனுப்பி வைத்து விடுவார்கள்.

எனவே எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க கட்சியில் மறுசீரமைப்புகளை மேற்கொள்ளவுள்ளதோடு கிராம ரீதியாக அடிமட்டத்து அங்கத்தினர்கள் மத்தியிலும் சென்று கட்சி நடவடிக்கைகளை தெளிவுபடுத்துமாறு அறிவுரை வழங்கியுள்ளார்.

அதுமட்டுமன்றி அரசியல்வாதிகள் மீதான நம்பிக்கையும் மக்கள் மத்தியில் குறைய ஆரம்பித்தது.


இவ்வாறான காரணங் களினாலேயே கடந்த தேர்தலில் மக்கள் வாக்களிப்பதில் அக்கறை காட்டவில்லை.

இந்நிலைமையை மாற்றியமைக்க எமது கட்சி திட்டங்களை முன்னெடுக்கும். கட்சியின் தலைமைத்துவத்தை மாற்றுவதா? இல்லையா? என்பதை செயற்குழுவே தீர்மானிக்க வேண்டும். பல வருட காலமாக எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க கட்சியை பாதுகாத்துள்ளார்.

எனவே தலைமைத்துவம் மாற வேண்டும் என்பதில் எனக்கு உடன்பாடில்லை. 17 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தி சுயாதீன ஆணைக் குழுக்களை நியமிக்க வேண்டுமென்ற நிலைப்பாடு எம்மிடம் இன்றும் உள்ளது. அதற்காக பாராளுமன்றத்திற்குள்ளும் வெளியேயும் போராட்டங்களைத் தொடருவோமென்றும் ருவன் விஜேவர்தன எம்.பி . தெரிவித்தார். (6)

## பார்வதியம்மாள் விடயத்தில் மக்களை குழப்ப முதல்வர் கருணாநிதி முயற்சி

### பழ.நெடுமாறன் கண்டனம்



(கொழும்பு)

முறையான அனுமதி பெற்று சென்னை வந்த பார்வதி அம்மையாரை அதேவிமானத்தில் திருப்பி அனுப்பியது குறித்து எதிர்க் கட்சிகள் தமிழக சட்டமன்றத்தில் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

அதைப்போல தமிழ்நாட்டிலும் உலகத் தமிழர் நடுவிலும் இந்நிகழ்ச்சி கொதிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. இதைக் கண்டு முதலமைச்சர் கருணாநிதி தவறான தகவல்களை வெளியிட்டு மக்களைக் குழப்புவதற்கு முயற்சி செய்கிறார்.

இவ்வாறு பழ.நெடுமாறன் கண்டனம் தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் மேலும் கூறுகையில்,

பார்வதி அம்மையார் வருவது குறித்து தனக்கோ தமிழக அரசுக்கோ எத்தகைய தகவலும் இல்லை என்று முதலமைச்சர் பொறுப்பில் இருக்கக்கூடிய ஒருவர் சொல்லுவது வேடிக்கையானது. வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் அந்த நாட்டில் உள்ள இந்தியத் தூதுவர் அலுவலகத்தில் விசா பெற்று வருவதுதான் வழக்கம். அப்படி வருபவர்கள் தமிழக அரசுக்கும் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை.

மறுநாள் காலை பத்திரிகைகளைப் படித்த பிற்பாடுதான் தனக்கு விபரம் தெரியும் என்று முதலமைச்சர் முதலில் கூறிவிட்டு பிறகு இரவு 12 மணிக்கு தனக்கு தகவல் கிடைத்து விமான நிலையத்துடன் தொடர்புகொண்ட போது பார்வதி அம்மையார் திரும்ப அனுப்பப்பட்டதை தெரிந்து கொண்டதாக முன்னுக்குப் பின் முரணாகக் கூறியிருக்கிறார்.

மலேசியாவிலிருந்து வந்த விமானம் இரவு 10.45 மணிக்குத்தான் வந்தது. ஆனால் அதற்கு முன்னாலேயே சென்னை புறநகர் பொலிஸ் ஆணையாளரான ஜாங்கிட் தலைமையில் பெரும் காவலர் படையொன்று விமான நிலைய வாசலில் கொண்டு வந்து குவிக்கப்பட்டது.

10.15 மணி யளவில் வை.கோஷம் நானும் விமான நிலையத்திற்கு வந்த போது எங்களை உள்ளே விடாமல் அதிகாரிகள் தடுப்பதற்கு பெருமுயற்சி செய்தார்கள்.

முதலமைச்சரின் உத்தரவில்லாமல் அவர்கள் அவ்வாறு செய்திருக்க முடியாது. ஆக இதற்கு சில மணிநேரங்களுக்கு முன்பாகவே முதலமைச்சருக்கு உளவுத்துறையின் மூலம் தகவல் கிடைத்து அதன் பின்னர் தான் காவல்படை அனுப்ப அவர் உத்தரவிட்டிருக்க வேண்டும்.

2003 ஆம் ஆண்டில் தமிழக அரசின் சார்பில் மத்திய உள்துறைக்கு எழுதப்பட்ட கடிதத்தில் பிரகாரனின் பெற்றோர் இந்தியாவிற்குள் நுழைய தடை விதிக்க வேண்டும் என்று எழுதி அதன் காரணமாக அவர்கள் பெயர் கறுப்புப் பட்டியலில் இடம்பெற்றதாக முதலமைச்சர் கூறியிருக்கிறார்.

இது உண்மையானால் கருப்புப் பட்டியலில் இடம்பெற்றவருக்கு மலேசிய- இந்தியத் தூதுவர் அலுவலகம் இந்தியா வருவதற்கு ஆறுமாத கால விசா கொடுத்தது ஏன்? தவறுதலாகக் கொடுத்திருந்தால் அந்த அதிகாரி மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ? என்றார். (2-6)

## பிரிட்டிஷ் பிஸ்னஸ் ஸ்கூல் இன்று சாவகச்சேரியில் ஆரம்பம்

(கொழும்பு)

பிரிட்டிஷ் பிஸ்னஸ் ஸ்கூல் சாவகச்சேரி கம்பெஸ் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு சாவகச்சேரி பெரிய அரசடி தாமோதரம்பிள்ளை வீதியிலுள்ள (இந்து ஆரம்பப் பாடசாலை அருகில்) 11 ஆம் இலக்க கட்டடத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் மேற்படி நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக முன் பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.பாக்கியராஜா இந்துக்கல்லூரி அதிபர் அ.கைலாயபிள்ளை, டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தபாலன், இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் திருமதி சியாமளா கந்தசாமி சாவ. நகரசபை செயலாளர் செல்வி வி. சிவக்கொழுந்து, கிராம உத்தியோகத்தர் கே.வேலாயுதபிள்ளை ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (2-6)

## மூவினங்களும் சமமாக வாழும் நிலையை ஏற்படுத்துவேன்

### பா.ம.உறுப்பினர் சரத் வீரசேகர

(கொழும்பு)

மூவினங்களும் செறிந்து வாழும் அம்பாறை மாவட்டத்தில் இவ்வினங்க ளுக்கிடையேநல்லுறவையும் இம்மக்களுக்கான அடிப்படை வசதிகளையும் மாவட்டத்திலுள்ள சிரேஷ்ட அமைச்சர்களின் உதவியுடன் ஏற்படுத்த எண்ணியுள்ளேன் என அம்பாறை மாவட்டத்திலிருந்து தெரிவான பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் வீரசேகரவை வரவேற்கும் வைபவம் அண்மையில் அட்டாளைச்சேனையில் ஆசிரியரும், சட்டக்கல்லூரி மாணவனுமான எஸ்.எம்.எம். பைறூஸ் தலைமையில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையி லேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், நான் ஜனாதிபதியின் அனுமதியுடனேயே இம் மாவட்டத்தில் பாராளுமன்ற வேட்பாளராகப் போட்டியிட்டேன். அவ்வேளை எனக்கெதிரான பல துவேஷமான நடவடிக்கை கள் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன. ஆனால் மூவின மக்களும் அவைகளை புறந்தள்ளி என்னை அதிகூடிய வாக்குகளால் தெரிவு செய்தனர்.

அந்த வகையில் நான் என்றும் இம் மக்களுக்கான நன்றியுடையவனாக என்னாலான அத்தனை விடயங்களையும் இன, மத, பிரதேச வேறுபாடுகள் இன்றி செய்யவுள்ளேன்.

இம்மாவட்டத்தில் பலவருடங்களாக சிரேஷ்ட அமைச்சராக அதாவுல்லா இருந்து வருகிறார். அவருடன் பூரண ஒத்துழைப்பை வழங்கி அதன் மூலமாகவும் பல உதவிகளை செய்யவுள்ளேன்.

முக்கியமாக இம்மாவட்டத்தில் இன முரண்பாடுகள் களையப்பட்டு நல்லுறவை ஏற்படுத்துவதே எனது பிரதான இலக்காக அமையும். அந்த வகையில் மூவின மக்களும் சமமாக வாழக்கூடிய முன் மாதிரியான மாவட்டமாக இம்மாவட்டம் கட்டியெழுப்பப்படும் என்றார். (2-6)

## தேசிய டெங்குக்கட்டுப்பாட்டு வாரம்

நாடு முழுவதிலும் தற்போது பருவகால மழை பெய்து வருவதனால் டெங்கு நோயின் பரம்பல் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதனைக் கருத்தில்கொண்டு மத்திய சுகாதார அமைச்சினால் மே மாதம் 3ஆம் திகதி முதல் 9ஆம் திகதிவரையான வாரத்தினை தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலும் பல பகுதிகளிலும் மழைபெய்து வருவதனால் இங்கும் டெங்கு நோயின் பரம்பல் அதிகரிக்கலாம். மேலும் யாழ்.குடாநாட்டிற்கு தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து செல்கின்றனர்.

அதேபோன்று குடாநாட்டில் இருந்தும் தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் தென் பகுதிக்கு சென்று வருகின்றனர். இத்தகைய சூழ்நிலையில் டெங்கு நோயின் பரம்பல் யாழ். மாவட்டத்தில் மிக மோசமாக அதிகரிக்கலாம்.

எனவே யாழ். மாவட்டத்திலும் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை அடுத்த வாரத்தில் தீவிரப்படுத்த வேண்டும். இவ் வாரத்தில் பின்வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

1. ஒவ்வொரு பாடசாலையிலும் சிரமதான பணி மூலம் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்கள் அழிக்கப்படவேண்டும்.
2. ஒவ்வொரு நிறுவனத்திலும் திணைக்களத்திலும் ஊழியர்களின் பங்களிப்புடன் சிரமதானப்பணி இடம்பெறவேண்டும்.
3. ஒவ்வொரு தனியார் கல்வி நிலையமும் உரிமையாளர்களால் உடனடியாக துப்புரவு செய்யப்படவேண்டும்
4. பொது இடங்கள் உள்ளூராட்சி மன்றங்களால் உடனடியாக கிரமமாக துப்புரவு செய்யப்படவேண்டும்.
5. மத வணக்கத்தலங்கள் சம்பந்தப்பட்ட பரிபாலன சபையினரால் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் துப்புரவு செய்யப்பட வேண்டும்.
6. கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் அபிவிருத்தி சங்கங்கள், சனசமூக நிலையங்கள் தத்தமது கிராம மட்டத்தில் சிரமதானப் பணி மூலம் சுத்திகரிப்புப் பணி மேற்கொள்ளப்படவேண்டும்.
7. உள்ளூராட்சி மன்றங்கள் திண்மக்கழிவுகளை கிரமமாக அகற்றி சரியான முறையில் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும்.
8. கழிவுநீர் வடிகால்களில் நீர் தேங்காதவாறு தினமும் சுத்திகரிக்கப்பட வேண்டும்.
9. வீதியோரங்கள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களால் உடனடியாக துப்புரவு செய்யப்பட வேண்டும்.
10. ஒவ்வொரு வீட்டு உரிமையாளரும் குடியிருப்பாளரும் தத்தமது வீட்டு வளாகத்தில் சுத்திகரிப்பு பணி மூலம் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை அழித்தல் வேண்டும்.

இச் செயற்பாடுகளை அடுத்த ஒரு வார காலத்திற்குள் முன்னெடுத்துடெங்கு நோயை கட்டுப்படுத்த ஒத்துழைக்குமாறு அனைவரையும் வேண்டுகின்றேன்.

**வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன்**
**பிராந்தியப் பணிப்பாளர் ,சுகாதார சேவைகள் ,யாழ்ப்பாணம்.**

# வீழ்ச்சியடைந்து செல்லும் தொடர்புடக சுதந்திரம்

## கணிப்பீட்டில் தகவல்

(கொழும்பு)

உலகின் அனைத்துப் ப்பாகங்களிலும் தொடர்பூடக சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடுகள் அதிகரித்து வருவதாக ஃபிரீடர் ஹவுஸ் என்னும் சுயாதீன கண்காணிப்புக்குழுவின் கணிப்பீடு ஒன்றுகூறுகிறது.

கடந்த தொடர்ச்சியான 8 வருடங்களாக தொடர்பூடக சுதந்திரம் வீழ்ச்சியடைந்து வருவதாக 2009 ஆம்ஆண்டுக்கான தனது அறிக்கை யில் வாஷிங்டனை தளமாகக் கொண்டு செயற்படும் இந்த அமைப்பு கூறியுள்ளது.

உலகில் சராசரியாக 6பேர்களில் ஒருவர் மாத்திரமே தொடர் சாதன சுதந்திரத்துடன் இருப்பதாகவும் கூறுகிறது.

ஒவ்வொரு வருடமும் தொடர்பூடகங்கள் செயற்படுகின்ற அரசியல் மற்றும் சட்ட சூழ்நிலை குறித்து ஃபிரீடம் ஹவுஸ் ஆராய்கிறது.

தொடர்பூடகங்கள் எதிர்கொள்கின்ற பொருளாதார அழுத்தங்கள் குறித்தும் அது கவனம் செலுத்துகிறது.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு நாடும் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது உலக மட்டத்தில் கடந்த வருடத்தில் மீண்டும் ஊடக சுதந்திரத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமை தெரியக் கூடியதாக இருக்கின்றது என்று அந்த அமைப்பு கூறுகின்றது.

மிகவும் முக்கியமான மாற்றம் என்பது சகாராவுக்கு தென்பகுதியில் உள்ள ஆபிரிக்க நாடுகளில்தான் நடந்துள்ளது. 2008 இல் தென்னாபிரிக்காவும், நமீபியாவும் ஊடக சுதந்திரம் ஊள்ள நாடுகளாக பிரகடனப் படுத்தப்பட்டிருந்தன. ஆனால் தற்போது அங்கெல்லாம் பாதியளவிலான சுதந்திரமே காணப்படுகின்றது.

மெக்சிக்கோவில் ஊடக சுதந்திரம் கிடையாது என்ற நிலை எட்டப்படுவதுடன், லத்தின் அமெரிக்க கவலைகள் அதிகரித்துள்ளன.

ஹொண்டியூஸும் ஊடக சுதந்திரம் அற்ற நாடாகவே கணிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு தேர்தலின் போது செய்தியாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறையின் காரணமாக தனது பிராந்தியத்தில் ஊடக சுதந்திரம் பெரும் வீழ்ச்சியடையும் நாடாக ஈரான் பதிவாகியுள்ளது.

ஒருவர் இணையம் மூலம் தகவல் பெறுவதில் மேற்கொள்ளப்படும் கட்டுப்பாடுகள் அதிகரிப்பது குறித்தும் இந்த அறிக்கை எச்சரித்துள்ளது.

தகவலை தணிக்கை செய்யவும், இணையத்தில்இணைபவர்களை கண்காணிக்கவும் சீனா,ரஷ்யா மற்றும் வெனிஸ்ஸுவேலா ஆகிய நாடுகள் மிகவும் நுட்பமான பொறிமுறைகளைப் பயன்படுத்து வதாக அந்த அறிக்கை கூறுகிறது.

மேலும் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில், குறிப்பாக பூட்டான் மற்றும் வங்கதேசம் ஆகிய நாடுகளில் சிறப்பான ஊடக சுதந்திரத்தை நோக்கிய நகர்வுகள் குறித்தும் இந்த ஆய்வு சுட்டிக்காட்டியுள்ளது. (2-6)

# வன்னியில் 24 மணிநேர மருத்துவசேவைகளை ஏற்படுத்தியுள்ளதாக அரசு அறிவிப்பு

(கொழும்பு)

போர் முடிவுக்கு வந்து ஓராண்டுக்குப் பின் வன்னியிலும் மற்றும் முன்னாள் விடுதலைப்புலிகளால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலும் 24 மணிநேர மருத்துவமனை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

இதற்கமைய கிளிநொச்சி, முழங்காவில், மன்னார்,தலைமன்னார், பேசாலை மற்றும் மல்லாவி ஆகிய பகுதிகளில் உள்ள அரசு மருத்துவ மனைகளை மக்கள் எந்த நேரத்திலும் அணுகலாம் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

போரினால் இடம்பெயர்ந்து வாழ்ந்து வந்த மக்களுக்காக மருத்துவசேவைகளை ஆறு மருத்துவமனைகளில் 24 மணிநேர மருத்துவசேவைகள் மீண்டும் ஏற்படுத்தப் பட்டுள்ளதை அனைத்துலக அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையிலும் உறுதிப் படுத்தியுள்ளன.

இதுதவிர பகல் நேரங்களில் மக்கள் பளை, பூநகரி, உருத்திரபுரம்,வேரவில், மடு,அடம்பன்,மாங்குளம், ஒட்டு சுட்டான், நட்டன்கண்டல் மற்றும் துணுக்காய் ஆகிய பகுதிகளிலுள்ள அரசு மருத்துவ மனைகளையும் அணுகலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ பணியாளர்களின் பற்றாக் குறையே வடக்குப் பகுதிகளில் சுகாதார சேவைகளை மீண்டும் அமைப்பதில் சிறிது தாமதத்தை ஏற்படுத்தியதாகவும் தற்போது மாணிக்கம் பண்ணையில் பணியாற்றி வரும் பொது சுகாதார கண்காணிப் பாளர்களை மீண்டும் கொண்டு வருவதே மீள்குடியேறிய மக்களின் மருத்துவ நிவாரணப்பணிகளுக்கு சிறந்ததாகஇருக்கும்என உறுதிபடக்கூறியுள்ளது. (2-6)

# ஹொக்கி சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்தும் 7வீரர்கள் கொண்ட ஹொக்கிச் சுற்றுப்போட்டி -2010இன் இறுதிப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானத் தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈ.எஸ்.பி. அன்கோ நிறுவன உரிமையாளர் ஈஸ்.எஸ்.பி. நாகரத்தினம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையின் செயலாளர் கேட்டுக் கொள்கின்றார். (6)

# கட்சிக்குள் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்

## சஜித் பிரேமதாச எம்.பி

(கொழும்பு)

கட்சிக்குள் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் மறுசீரமைப்பு குறித்து ரணில் விக்கிரமசிங்கவிற்கும் சஜித் பிரேமதாஸவிற்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். கட்சிக்குள் வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதன் மூலம் உரிய நபர்களை உரிய பதவிகளில் அமர்த்த முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவுடனான பேச்சுவார்த்தையில் கபீர் ஹாசீம், ஜோன் அமரதுங்க ஆகியோரும் கலந்துகொண்டனர். பொது மக்களுக்கு ஏற்றவகை யில் கட்சியின் நோக்கங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டுமென சஜித் பிரேமதாஸ தெரிவித் துள்ளார்.(6)

# வவுனியா வடக்கில் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கான கூரைத்தகடுகள் பெற்றுக் கொடுத்தல்

## மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் நடவடிக்கை

(கொழும்பு)

வவுனியா வடக்குப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட குடியிருப்பு பகுதியில் அண்மையில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள சுமார் 800 குடும்பங்களுக்கு வழங்குவதற்கான கூரைத்தகடுகளுக்கு பற்றாக்குறை நிலவுவதாகவும் அவர்களுக்கு வழங்குவதற்கு தறப்பாள்கள் மாத்திரமே வழங்கப் பட் டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டதையடுத்து, அவற்றைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்ததி முரளிதரன் மேற்கொண்டுள்ளார்.

வவுனியாவுக்கு நேற்றுமுன் தினம் விஜயம் செய்த அவர் இடம் பெயர்ந்த மக்கள் மற்றும் மீளக் குடியமர் த் தப்பட்டுள்ள குடும்பங்களின் பிரச்சினைகள் குறித்து அதிகாரிகளுன் கலந்துரையாடிய போது, மீள்குடியேற்றம் செய்யப் படுபவர்களுக்கு கூரைத் தகடுகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பது குறித்து அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வரப்பட்டது. இதனைய டுத்து, கொழும்பில் உள்ள சம்பந் தப்பட்ட அதிகாரிகளுடன் வவுனியா செயலகத்தில் இருந்து உடன டியாக அவர் தொடர்புகொண்டு நடவடிக்கைகளை மேற்கொண் டார்.

எனினும் கொழும்பிலும் கூரைத் தகடுகள் கையிருப்பில் இல்லை என தெரிவிக்கப் பட்டதையடுத்து, அவற்றை இன்னும் சில தினங் களுக்குள் பெற்றுக்கொடுப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதாக தெரிவித்து ள்ளார்.

இதேவேளை, வவுனியா வடக்கு நெடுங்கேணிப்பிரதேச செயலகப் பிரிவினுள் பல விதவைகள் இருப்பதாகவும், இவர்களுக்குத் தொழில் வாய்ப்பில்லாத காரணத்தினால் குடும்பத்தைக்கொண்டு நடத்துவதில் அவர்கள் சிரமங் களை எதிர்நோக்கியிருப்பதகாத் தெரிவிக்கப் பட்டதையடுத்து, விதவைகளுக்கான மாதாந்த கொடுப்பனவு அல்லது தொழில்வாய்ப்புக்கான உதவி என்பவற்றில் ஏதாவது ஒன்றைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று முரளிதரன் உறுதியளித்துள்ளார்.

அத்துடன் 8 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள நெடுங்கேணி பிரதேச மக்களின் போக்குவரத்து வசதிக்காக இரண்டு பேருந்துகளை அங்குள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்க உதவவேண்டும் என்றும், நெடுங்கேணி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான 7 வாகனங்கள் யுத்த காலத்தில் வன்னிப் பிரதேசத்தில் விநியோக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த நிலையில் கைவிடப்பட்டிருப்பதாகவும்,

அவற்றை மீட்டுத்தருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அதிகாரிகளினால் கோரிக்கை விடுக்கப்பட்டது.இது தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதி அமைச்சர் உறுதியளித் துள்ளார். (2-60)




**Sales Executives - Tyre Business Unit**

**(For Jaffna & Vanni regions)**

**TVS Automotives (Pvt) Ltd is part of TVS Group of Sri Lanka, which is a joint venture between United Motors Lanka Ltd and TVS Iyengar & Sons Ltd, India.**
**TVS Automotives is engaged in import and distribution of world renowned MAK lubricants manufactured by Barath Petroleum India and well known brands of Tyres JK and TVS.**

**We are looking for dynamic individuals willing to reside in Jaffna for the above vacancy in our organization.**

**Job Profile**
Identify prospective Dealers/ Corporate customers, meeting sales targets through dealer network, enhance product image by improving ,service levels, co-ordinate field promotions and displays, Dealer Management etc.

**Candidate Criteria**
- Sound educational background with minimum GCE (O/L)
- Flair for public relations
- Ability to converse in Sinhala or English
- A high fluency in Tamil is a must
- Should possess a valid riding license
- Age below 35 years
- Previous experience in Automobile industry will be an advantage
- Preference will be given to residents in Northern Province

Selected candidates can look forward to an attractive remuneration package. Please apply within 7 days of this advertisement. Post applied should be indicated on the top left hand corner of the envelope.

TVS
TVS Automotives (Pvt) Ltd.
100 A, Hyde Park Corner, Colombo 02.
Tel: 0114334367
Email: career@tvslanka.lk
(C-181)
United Motors





# அறிவித்தல்

கோப்பாயில் வசிக்கும் அன்னை தெரேசா மடக் கன்னியர்கள் அல்லது அன்புபரப்பு சபை கன்னியர்கள் என அழைக்கப்படும் நாங்கள், எங்கள் பெயரிலோ, அல்லது அனாதைகள்,ஏழைகளின் பெயரிலோ நன் கொடை வசூலிக்க யாரையும் நாங்கள் அனுப்பவில்லை, அனுப்புவதுமில்லை. எனவே எங்கள் பெயரிலும் எந்த உதவியும் செய்யவேண்டாம் என பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். அப்படி யாராவது வசூலித்தால் அருகில் உள்ள காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவும்.

021 222 3702

அன்னை தெரேசா
மடக்கன்னியர்கள், கோப்பாய்

(இ)

# பங்களாதேஷில் உள்ளது போன்ற வாக்காளர் பட்டியல் முறைமை இலங்கையிலும்

## அறிமுகம் செய்ய ஜனாதிபதி விருப்பம் தெரிவிப்பு

(கொழும்பு)

பங்களாதேஷில் உள்ள தேர்தல் வாக்காளர் பட்டியல் போன்ற முறைமையை இலங்கையிலும் நடைமுறைப்படுத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விரும்புவதாக பங்களாதேஷிலிருந்து செயற்படும் த டெய்லி ஸ்ரார் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

சார்க் மாநாட்டுக்கு சென்றிருந்தபோது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசினா பங்களாதேஷ் தேர்தல் முறைமைகள் பற்றி கலந்துரையாடப்பட்டது.

பங்களாதேஷ் தேர்தல் முறைமையில் சட்டவிரோதமாக வாக்களிப்பு முறைமைகளைத் தடுக்கும் முறைகள் பல காணப்படுகின்றது. அங்கு தைக்கப்பட்ட ஆடைகள், புடவை உற்பத்தி, வங்கிச் சேவை கள் என்பவற்றில் இலங்கை முதலீடு செய்ய வேண்டும் என்ற பங்களாதேஷ் பிரதமரின் வேண்டுகோளுக்கு கொள்கையளவில் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார்.

இதேவேளை பங்களாதேசில் உற்பத்தி செய் யப்படும் மட்பாண்டம், மருந்து வகைகள், பிளாஸ்ரிக்பொருட்கள்என்பவற்றை இலங்கைக்கு இறக்குமதி செய்வது குறித்து ஜனாதிபதி பரிசீலிப்பதாகவும் அந்த செய்திச் சேவை மேலும் தெரிவித்துள்ளது. (2-9)

## VACANCY ANNOUNCEMENT

In response to the official request of the Government of the Democratic Socialist Republic of Sri Lanka, a Japan International Cooperation Agency (JICA) team is going to implement the Project for Development Planning for the Rapid Promotion of Reconstruction and Development in Jaffna District, or PDP Jaffna in short. To carry out the tasks of the project, the JICA team now invites applicants for local consultant positions specified below.

**Post titles:**

- Agriculture Development Specialist: 1 person
- Fishery Development Specialist: 1 person
- Community Development Specialist: 2 persons
- Civil Engineer: 2 persons
- Architect: 1 person
- Structure Engineer: 1 person
- Facility Engineer: 1 person
- Cost Estimation Specialist: 2 persons
- Document Specialist: 1 person
- Draft man:2 persons
- Site Engineer: 3 persons
- Administrative officers: 2 persons

**General Qualifications:**

Applicants for the positions above must have at least the following qualifications.

a) Proven ability to undertake research, analytical and evaluation work on well -defined tasks, collect and organize required data and information, and apply appropriate computer skills.

b) Excellent command of English in speaking and writing – capable to produce well organized reports.

c) Excellent command of Tamil language at least in speaking. Originating from or resident in Jaffna District is an advantage.

d) Bachelor's degree or above in the area of expertise or related areas, preferably from a renowned university. A master's or more advanced degree is an advantage.

e) Work experience with international donor organizations, bilateral development agencies, and projects supported by these organizations / agencies is an advantage.

For the further details of each position, please visit the following website.

http://pdpjsl.blogspot.com/

**How to Apply**:

To apply, please visit our website and send your CV to the following email address. pdpjaffna@gmail .com

Or send it to the following address.

PDP Jaffna office, 3rd Floor,
Register's Office Building,
District Secretariat, Jaffna.

Closing Date: Friday, 14th may 2010

**Only Short – listed candidates will be contacted. Submitted documents will not be returned to the applicants.**

(1291)

# அமெரிக்காவுக்கான புதிய விசா விண்ணப்ப நடைமுறைகள் தொடர்பான கருத்தரங்கு

(கொழும்பு)

அமெரிக்க வர்த்தக பணியகம் கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்துடன் இணைந்து அமெரிக்கவுக்கு விசா கோரி விண்ணப்பிப்பதற்கான புதிய நடைமுறைகள் குறித்து கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள குடியேற்றத்திற்கல்லாத விசா படிவங்களை உள்ளடக்கியதாக புதிதாக தயாரிக்கப்பட்டுள்ள டிஎஸ் 160 குடியேற்றத்திற்கல்லாத விசா விண்ணப் பப்படிவங்களை ஒரே பரஸ்பர செயற்பாட்டு ரீதியில் இணையத்தளத்தில் பயன்படுத்துமாறு அமெரிக்கத் தூதரகம் தற்பொழுது கோருகிறது.

அமெரிக்க தூதரகம் அதிகாரிகள் கருத்தரங்கில் சமுகமளித்து புதிய விசா விண்ணப்ப நடைமுறைகளை விளக்கு வதுடன் பொதுவான கேள்விகளுக்கும் விடையளிப்பார்கள். மேலும், அமெரிக்க வர்த்தக பணியக நிறைவேற்று அதிகாரி ப்ணியக உறுப்பினர்களுக்கு கிடைக்கும் பல அனுகூலங்களில் ஒன்றான பாதுகாப்புத் திட்ட உதவி முறைமை பற்றியும் ஆராய்வர்.

கருத்தரங்கு, எதிர்வரும் 5ஆம்திகதி காலை 9.30 மணி தொடக்கம் முற்பகல் 11.30 மணிவரை கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெறும்.கம்பனி பிரதம நிறைவேற்று அதிகாரிகள், மனிதவள முகாமையாளர்கள் மற்றும் ஏனைய சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகளுக்கு அமெரிக்க விசா நடைமுறைகள் பற்றிய சிறந்த விளக்கத்தை அளிப்பதே கருத்தரங்கின் நோக்கமாகும்.

புதிய டிஎஸ்160 விண்ணப்பப்படிவம் ஒன்றை பூர்த்தி செய்வதற்கு இலங்கையிலும் மாலைதீவிலும் அமெரிக்க விசா விண்ணப்பதாரர்கள் காவற்தூதர் எலக்ரோனிக் விண்ணப்ப நிலைய இணையத்தளத்துடன் (https://ceac.state.gov/GENNIV) தொடர்புகொள்ள வேண்டும்.

விண்ணப்பதாரர் புதிய விண்ணப்பப் படிவத்துடன் விசாவுக்கான புகைப்படம் ஒன்றையும் இணைக்கவேண்டும்.டிஎஸ். 160 இணையத்தள நடைமுறை அமுலுக்கு வருவதுடன் கடதாசி மூலம் விண்ணப்பிப்பது தவிர்க்கப்படுகிறது. அச்சிடப்பட்ட உறுதிப்படுத்தல் தாளை விண்ணப்பதாரர் நேர்காணலின் போது சமர்ப்பிக்கவேண்டும்.

டிஎஸ் 160 படிவம் பற்றிய முழு விபரங்களையும் புதிய விண்ணப்பத்தைப் பெறுவதற்கான தகவல்களையும் கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரக இணையத்தள முகவரி http://srilan-ka.usembassy.gov/ .யில் பார்வையிடலாம்.

அமெரிக்க வர்த்தக பணியாக அங்கத்துவ கம்பனிகளின் விசா அங்கீகார நடைமுறைகளைப் புரிந்து கொள்ளும் தன்மை மற்றும்அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையில் தொழில்,வர்த்தகம் ஆகியவற்றின் விருத்தி முதலியவற்றை மேம்படுத் இந்த கருத்தரங்கு உதவுமென நம்பப் படுகின்றது.

புதிய விபரங்களுக்கு அமெரிக்க வர்த்தக அலுவலக தொலைபேசி;இலக்கம் :233 60 73 அல்லது www.amcham.lk உடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# சரத்பொன்சேகா கைது தொடர்பில் அனைத்து பாராளுமன்றத்திடம் முறைப்பாடு

## ஐ.தே.கட்சி அறிவித்துள்ளது

(கொழும்பு)

ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் தலைவர், ஜெனரல் சரத் பொன்சேகா கைது விவகாரம் குறித்து அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியத்திடம் முறைப்பாடு செய்யவுள்ளதாக ஐக்கியதேசியக் கட்சி அறிவித்துள்ளது.

ஜெனீவாவில் அமைந்துள்ள பாராளுமன்ற ஒன்றியத்தின் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சரத்பொன்சேகா விவகாரத்தை எழுத்து மூலம் தெரியப்படுத்துமாறு, கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவிடம்,ஐக்கிய தேசியக் கட்சித்தலைவர் ரணில்விக்கிரமசிங்க கோரியுள்ளார்.

ரவி கருணாநாயக்க, சந்திராணி பண்டார, பாலித ரங்கே பண்டார மற்றும் எஸ்.பி. திஸாநாயக்க போன்றவர்கள் தங்களது பிரச்சினைகளை அனைத்து பாராளுமன்ற ஒன்றியத்திடம் முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறெனினும், ஐக்கிய தேசியக் கட்சியின் இந்தத் தீர்மானம் குறித்து தமக்கு எதுவும் தெரியாது என ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தவிடயம் குறித்து தமது கட்சியிடம் ஐக்கிய தேசியக் கட்சி ஆலோசனை பெற்றுக் கொள்ளவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சரத்பொன்சேகாவிற்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் நடவடிக்கை எடுக்கப்படும். எனினும் இந்த விவகாரங்களை ஊடக பிரசாரமாக தமதுகட்சி பயன்படுத்தாது என அனுர குமார திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

# வீடொன்றின் மீது பாரிய கற்பாறை வீழ்ந்ததில் இருவர் உயிரிழப்பு

## ருவன்வெல்லவில் சம்பவம்

(கொழும்பு)

ருவன்வெல்லை, தெஹிவத்து மகாகந்த பகுதியில் வீடொன்றின் மீது பாரிய கற்பாறை சரிந்து விழுந்ததில் 2பேர் உயிரிழந்துள்ளனர். அந்தப் பகுதியில் நேற்றுமுன்தினம் பெய்த அடைமழை காரணமாகவே கற்பாறை சரிந்து விழுந்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த அனர்த்தத்தில் 48 வயது, 28 வயதுடைய இருவரே உயிரிழந்துள்ளனர். அத்துடன் வீட்டிற்குள் இருந்த பெண் ஒருவரும் இந்த சம்பவத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (2-6)

# கௌரவிப்பும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் பழம் வீதி அருள் மிகு ஸ்ரீ ஞானவைரப் பெருமான் ஆலயத்தில் நடைபெற்றஅலங்கார உற்சவ காலங்களில் பதின்மூன்று தினங்களும் தெய்வீகம் பேருரைகளை வழங்கிய எம்.பி. அருளானந்தன், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியர் எஸ். காந்தரூபன் ஆகியோர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை மாலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அன்றைய தினமும் சைவத்தமிழர் கலாசாரம் என்ற தலைப்பில் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தனின் சொற்பொழிவும், ஆலய நிர்வாக சபையினரால் நடத்தப்பட்ட சைவநெறித் தேர்வுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (2)

# புற்று செல்களை கொல்லும் தாய்ப்பால்!




தாய்ப்பாலின் மகத்துவம் நாம் அறியாததில்லை. தாய்ப்பாலில் இருக்கும் குறிப்பிட்ட தாதுக்கள் புற்றுநோய் செல்களை தாக்கி அழிக்கும் தன்மை உடையவை என்று தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குழந்தைக்கு தாய்ப்பால் சத்துமிக்க ஆகாரம் என்பதோடு நோய் எதிர்ப்புத் தன்மை உடையது என்பதும் நாம் அறிந்ததே. தாய்ப்பாலில் இருக்கும் ஆல்பா லாக்டால்புமின் என்ற தாதுப்பொருள் புற்றுக்கட்டிகளையும் புற்று செல்களையும் அழிக்கும் தன்மை கொண்டது. இதற்கு காம்லெட் என்று பெயரிட்டுள்ளனர். ஹியூமன் ஆல்பாலேக்டால்புமின் மேடுலெத்தல் டூ டியூமர் என்பதன் சுருக்கம்தான் காம்லெட்.

சுவீடன் நாட்டில் உள்ள கோதன்பேர்க் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் இதை கண்டு பிடித்துள்ளனர். தாய்ப்பாலில் உள்ள தாதுப் பொருளை புற்று நோயாளிகளுக்கு கொடுத்தால் புற்று செல்கள் அழிக்கபட்டு சிறுநீரு டன் வெளித்தள்ளப்படுகிறது. இதனால் புற்று நோய் தீவிரம் குறைகிறது. ஆனால் புதிதாக புற்றுநோய் தாக்குதல் ஏற்படும் போது இந்த தாதுக்கள் உடலை பாதுகாப்பது இல்லை என்பதும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் இது தற்காலிகமாக நிகழ்ந்த கண்டு பிடிப்பாகும். தாய்ப்பாலில் பக்டீரியா எதிர்பொருள் இருக்கிறதா என்ற நோக்கில் தான் ஆய்வு நடத்தப்பட்டது. இடையில் 40 வகையான புற்று செல்களை அழிக்கும் தன்மை தாய்ப் பாலுக்கு இருப்பது கண்டறியப்பட்டது.

# மோப்பம் பிடிக்கும் செல்போன்...



குண்டு வெடிப்புச் சம்பவங்கள் மக்களை கதிகலங்கச் செய்யும்.காலமாற்றம் மற்றும் தொழில்நுட்பபுரட்சியால் சில நச்சுத்தன்மைகள் காற்றில் அதிகரித்து வருவதும் சாதாரணமாகி வருகிறது.

இதுபோன்ற ஆபத்துக்களில் இருந்து உங்களைக் காப்பாற்ற வருகிறது மோப்பம் பிடிக்கும் செல்போன். 'எலக்ட்ரோனிக் மூக்கு' எனப்படும் நவீன உணர்கருவி இதுபோன்ற ஆபத்துக்களைக் கண்டுபிடித்து எச்சரிக்கும். இந்தக் கருவியை தற்போது செல்போனுடன் இணைத்து வழங்குகிறது அமெரிக்க நிறுவனமான " ஹோம்லேட் செக்யூரிட்டி சயின்ஸ் அன்ட் டெக்னொலஜி"

இந்த அமைப்பு 'செல்–ஆல்' என்ற நவீன சென்சார் கருவியைத் தயாரித்துள்ளது. இதனை செல்போன்களில் பொருத்திக் கொண்டால் காற்றில் நச்சு ஆபத்துக்கள் இருந்தால் எச்சரிக்கும்.

நமக்கு தீமை விளைவிக்கும் குளோரின், சாரின் போன்ற விஷவாயுக்கள் இருந்தால் ஒலி எழுப்பும். ஒருவேளை நீங்கள் செல் போனை வைபிரேசனில் வைத்திருந்தால் எஸ்.எம்.எஸ்.அனுப்பும்.

அதேபோல் அதிக நச்சத்தன்மையை உணர்ந்தால்பலமாக ஓசை எழுப்பிஉங்களை மட்டுமல்லாது சுற்றி இருப்பவர்களையும் உஷார்ப்படுத்தும். அத்துடன் எந்த இடத்தில் இந்த நச்சுவாயு பரவிஇருக்கிறது என்ற தகவலை அவசர உதவி மையத்துக்கும் அனுப்பிவைக்கும்.

பயனுள்ள இந்தக்கருவி மிகச்சிறியதாக இருக்கவேண்டும். மிகக்குறைந்த விலையில் கிடைக்கவேண்டும் என்பதே தங்கள் நோக்கம் என்று இதை தயாரித்த நிறுவனம் கூறுகிறது.அதற்கேற்ப இதன் விலையும் ஒரு அமெரிக்க டொலருக்கும் குறைவு என்பது குறிப்பிடத்தக்கது.




# நலம் காட்டும் கடிகாரம்!



" என்ன நல்லா இருக்கீங்களா?'' இப்படி நலம் விசாரிப்பது நமது பண்பாடு. இனி யாரும் உங்களை இப்படிக் கேட்டால் நீங்கள் மணி பார்ப்பது போல் கடிகாரத்தைப் பார்த்து " நலமாகத்தான் இருக்கிறேன்'' என்று பதில் சொல்லலாம்.ஆமாம் நீங்கள் நலமாக இருக்கிறீர்களா என்பதைக் காட்டும் கடிகாரம் வந்து விட்டது.

ஐரோப்பிய ஆய்வுக்குழு ஒன்று நவீன கைக்கடிகாரம் ஒன்றை உருவாக்கி இருக்கிறது. இதில் எ்லக்ட்ரோனிக் பாலிமர் மற்றும் நவீன சென்சார் இருக்கும்.இதை வழக்கமான கடிகாரம் போல் கையில் அணிந்து கொள்ளலாம்.

இதில் இருக்கும் நவீன கருவிகள் நோய் அறிகுறிகளை ஆரம்பத்திலேயே கண்காணித்து அறிவிக்கும். வியர்வை, உடல் வெப்பம், இரத்த ஓட்டம் ஆகியவற்றை கண்காணித்து நோய்த் தொற்றை கண்டுபிடிக்கும்.இதற்காக எப்போதும் மின்காந்த அலைகளை உடலில் பரப்பிய வண்ணம் செயல்படும்.

மாரடைப்பு ஏற்படுவது,இரத்தம் உறைவது, ஈரப்பதம் குறைவது போன்ற பெரும்பாலான வியாதிகளின் அறிகுறிகளை மருத்துவ பரிசோதனைக்குச் செல்லாமலே காட்டி விடும்.

வியாதிகளை ஆரம்பத்திலே கண்டு பிடித்தால் எளிதில் குணமாக்கி நலமாக வாழலாம் தானே!

# உணர்வுகளை கடத்தும் 'பட்டு'!
## மூளை பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும்


நமது உடலில் உணர்வுக் கட்டுப்பாட்டுப் பகுதியாக இருப்பது மூளை . தண்டுவடப் பாதிப்பு , காக்காய்வலிப்பு நோய் மற்றும் சில பாதிப்பு இருப்பவர்களுக்கு உணர்வுகளை கடத்துவதில் மூளை சரியாக செயல்படாது.இதுபோன்ற பிரச்சினை உடையவர்களுக்கு பட்டு இழை உதவுகிறது.

பட்டு இழைகள் மின்சாரத்தைக் கடத்தும் தன்மை கொண்டவை. இந்தப் பட்டு இழையை சிறிய மின்கடத்தியாக மூளையுடன் இணைத்து செயல்படுத்தியதில் அது தகவல்களை சிறப்பாக கடத்தியது.

அமெரிக்காவிலுள்ள இல்லினாய்ஸ் பல்கலைக்கழகம் , டட்ஸ் பல்கலைக்கழகம் மற்றும் பென்சில்வேனியா பல்கலைக் கழகம் ஆகியவற்றின் ஆய்வாளர்கள் இணைந்து இந்த சோதனையில் ஈடுபட்டனர். ஆய்வின்போது பூனையை மயக்க நிலையில் வைத்து , பட்டு இழை மற்றும் பொருட்களைச் சேர்த்து செய்திருந்த மின் கடத்தியை அதன் மூளையின் மேற்பரப்பில் இளகச் செய்து பொருத்தியிருந்தனர்.

பூனையின் கண்கள் விழித்த நிலையில் இருந்தது. அது காட்சிகளை பதிவு செய்வது பட்டு இழை கடத்தியின் வழியாக கடத்தப்பட்டது.

மூளை தகவல் கடத்துவதில் குறைபாடு உடையவர்களுக்கு இது பட்டு இழை கருவியாகப் பயன்படுத்த முடியும் என்று தெரிய வந்தது. இது தலைமுடியை 5 மடங்கு தடிமனுடையது.உருகிய நிலையில் மூளையுடன் இணைந்துவிடும்.நெகிழும் தன்மையுடன் உறுதியும்கொண்டது. எனவே எளிதில் பயன்படுத்த முடியும் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள்.



# விளையாட்டு
## முதல் முதலாக!




குழந்தைகள் வெளியே போய் விளையாடினால் அம்மா திட்டுவார்.வெயிலில் போய் ஆடாதே.வீட்டிலேயே உட்கார்ந்து ஏதாவது விளையாடு! அப்படிச் சொல்லுவார்கள். அப்படி ஓடியாடி விளையாட முடியாத சமயங்களில் வீட்டிலேயே , உட்கார்ந்த இடத்திலேயே விளையாடுவதற்கென பல விளையாட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றின் வரலாற்றைத் தெரிந்து கொள்ளலாமா...!

கி.பி.எட்டாம் நூற்றாண்டில், கீழைத் தேச நாடுகளில் இருந்து சதுரங்கம் (Chess) மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பரவியது. இந்த ஆட்டம் பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தற்போதைய வடிவத்தை அடைந்தது.

1970 களில் முதல் முதலாக ' ஜிக்ஜா புதிர்" விளையாட்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

1892 இல் முதல் முதலாக இந்து மதத்தினால் காலம் காலமாக விளையாடப்பட்டு வந்த 'பரமபத' ஆட்டத்தின் மேற்கத்திய வடிவமான பாம்பு, ஏணி (Snake & ladders) அறிமுகமானது.

முதல் முதலாக 1913 களில் குறுக்கெழுத்துப் புதிர் உருவானது.

1936 இல் முதல் முதலாக இந்த நூற்றாண்டையே புரட்டிப் போட்ட விளையாட்டான " மோனோபோலி'' (ட்ரேட்) லண்டனின் வாடிங்டன் நகரில் உருவாக்கப்பட்டது.

1947 இல் முதல்முதலாக இங்கிலாந்தின் பீட்டர் அடால்ப் என்பவர், பேபிள் ஃபுட்போடல் ஆட்டத்தினை அறிமுகம் செய்தார். இவ் விளையாட்டு சுப்பூட்டியோ என்றழைக்கப் பட்டது.

இஸ்ரேலைச் சேர்ந்த மோர்டெகாய் லொயிக் ஆட்டமான " மாஸ்டர் மைண்ட்'' எனும் ஆட்டத்தினை 1970 -71 களில் அறிமுகம் செய்தார்.


1974 களில் முதல் முதலாக ஜப்பானின் பிரபல ' ஸ்டஜிக்' விளையாட்டான ஒத்தெல் லோவை... கோரோ ஹஸேகாவா உருவாக்கினார்.

மரத்துண்டுகளை வைத்து கட்டடங்களின் மாதிரியை உருவாக்கும் விளையாட்டை முதல் முதலாக 1930களில் லேகோ நிறுவனம் தயாரித்தது.

1947 களில் முதல் முதலாக பிளாஸ்டிக்கில் வார்த்தெடுக்கப்பட்ட துண்டுகளை விற்பனைக்கு அனுப்பியது.

1958 இல் லேகோ விளையாட்டுக்கான காப்புரிமத்தை டென்மார்க்கின் காட்ஃப்ரெட் கிறிஸ்டியன்சென் பெற்றார்.

1948 இல் முதன் முதலாகப் பறக்கும் தட்டை (Fly in Saucer) வால்டர் ஃபிரெட்ரிக்



மோரிசன் மற்றும் வாரென் ஃப்ரான்ஸ்சி யோனி என்ற அமெரிக்கர்கள் பிளாஸ்டிக்கில் வடிவமைத்தனர்.

1975 இல் உலகத்தையே ஆட்டிப் படைத்த க்யூப் விளையாட்டு, ஹங்கேரி நாட்டு பேராசிரியரால் அறிமுகப்படுத்தப்பட்டது. எர்னோ ரூபிக் இதற்கான காப்புரிமத்தைப் பெற்றார்.

1979 களில் மேற்கு ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் க்யூப் விற்பனைக்கு வந்தது.

1967 களில் லேகோ குழுமத்தின் டென்மார்க் கிளை,சிறுவர்களுக்கான பெரிய லேகோ பிரிக்ஸ்களை விற்பனை செய்தது.

1958 இல் முதல் முதலாக அமெரிக்காவின் வில்லி ஹிக்கின்பாதம் என்பவர் வீடியோ கேமை உருவாக்கினார்.

அமெரிக்காவின் ஸ்டீவ் ரஸ்ஸல் 1961-62 களில்முதல்முதலாக " ஸ்பேஸ்வார்" என்ற கம்ப்யூட்டர்வீடியோ கேமை வடிவமைத்தார்.

1972 ல் போங் எனப்படும் ஸ்கிரீன் டென்னிஸ் ஆட்டத்தை புஷ்னெல் வணிக ரீதியில் விற்பனை செய்து வெற்றி கண்டார்.

புஷ்னெல்லின் அடாரி நிறுவனம், ஹோம்போங் என்ற வீடியோ கேமை உருவாக்கியது.இது,முதல் ஹோம் போங் விளையாட்டாகும்.

1994 இல் முதல் முதலாக ஜப்பானின் சொனி நிறுவனம் தற்போது மிகவும் பிரபலமாக இருக்கும் 'ப்ளே ஸ்டேஷனை" உருவாக்கி விற்பனை செய்தது.



வடமாகாண சாரண ஆணையாளர் த.நா.போஜனின் மணி விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் உரையாற்றுவதையும், சாரண சிறுவர்கள் மாலை அணிவித்து கௌரவிக்கப்படுவதையும், விழா நாயகன் ஏற்புரை வழங்குவதையும் வலிகாம வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் விழா நாயகனுக்கு கேடயம் வழங்குவதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம்.

# எவரின் உத்தரவுகளுக்கும் நீதிமன்றம் அடிபணியாது

## கொழும்பு மாவட்ட நீதவான் தெரிவிப்பு

(கொழும்பு)

எவரின் உத்தரவுகளுக்கும் நீதிமன்றம் அடி பணிந்து செயற்படாது என கொழும்பு மாவட்ட நீதவான் சம்பா ஜானகி ராஜரட்ன தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தின் மீது எவரும் கட்டுப்பாடுகளையோ நிபந்தனைகளையோ விதிக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளித்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இராணுவ அதிகாரி ஒருவரை பிணையில் விடுதலை செய்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இராணுவ சூழ்ச்சித் திட்டம் மூலம் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

குறித்த இராணுவ அதிகாரிக்கு பிணை வழங்குவது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக் களம் நிபந்தனைகளை விதிப்பதாக சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி வெளியிட்ட கருத்திற்கு பதிலளிக்கும் வகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் வழக்கு விசாரணைகள் தொடர்பில் பொலிசாரின் நடவடிக்கைகள் திருப்தி அளிக்கும் வகையில் அமையப் பெற வில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2-6)

# தனியார் துறை ஊழியர் சம்பளத்தை 20-45 சதவீதம் அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

சம்பள நிர்ணய சபையில் அங்கம் வகிக்கும் தனியார்துறை ஊழியர்களின் சம்பளத்தை 20 முதல் 45 வீதம் வரை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்போவதாக தொழிலுறவுகள் திறன் அபிவிருத்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

சம்பள நிர்ணய சபையில் அங்கம் வகிக்காத ஏனைய ஊழியர்களின் தொழில் உரிமையைப் பாதுகாப்பதற்காக துரித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவித்த அமைச்சர் தனியார் துறை ஊழியர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு புதிய திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தப் போவதாகவும் தெரிவித்தார்.

தேசிய தொழில் அதிகாரிகள் சங்கத்தின் 59 ஆவது வருடாந்த மாநாடு நேற்று முன்தினம் கொழும்பு நாரகேன்பிட்டியிலுள்ள மேற்படி சங்கத்தின் தலைமையகத்தில் நடைபெற்றது.

தொழிலமைச்சின் செயலாளர் மஹிந்த மடிஹற ஹேவா, தொழில் ஆணையாளர் உபாலி விஜே வீர மற்றும் நாடாளாவிய ரீதியிலுள்ள தொழில் அதிகாரிகள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது.

தனியார் துறை தொழிலாளர்கள் நாட்டின் பொருளாதாரத்திலும் அபிவிருத்தியிலும் பெரும் பங்கு வகிப்பவர்கள். அவர்களின் தொழில் உரிமை, தொழில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும். தொழில் புரியும் காலத்தில் உரிமைகளைப் பாதுகாப்பது போன்று ஓய்வுபெற்ற பின்னரும் அவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் நடை முறைப்படுத்தப்படும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மஹிந்த சிந்தனைக் கொள்கைத் திட்டத்தின் கீழ் ஆசியாவின் உன்னத நாடாக இலங்கையைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளுக்குத் தொழிலமைச்சின் மூலம் உச்சளவிலான பங்களிப்பை வழங்க முடியுமெனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (2-6)

# நுவரெலியா மாவட்ட பொதுத்தேர்தல் வாக்குகள் மீள எண்ணப்படல் வேண்டும்

## நீதிமன்றில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

அண்மையில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் வாக்குகளை மீள எண்ணுமாறு கோரி மேன் முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட மயில்வாகனம் உதயகுமார் (உதயர்) மற்றும் சுப்பையா சதாசிவம் (சதர்) ஆகியோர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

தேர்தல் முடிவுகள் திருப்தி அளிக்கும் வகையில் அமையப் பெறவில்லை எனவும் வாக்கு எண்ணும் பணிகளில் குளறுபடிகள் காணப்படுவதாகவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க, நுவரெலியா மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி எஸ்.பி. குமாரசிறி, மேலதிக தேர்தல் ஆணையாளர் சமன் ஸ்ரீரத்நாயக்க, சட்டமா அதிபர், நுவரெலியா மாவட்டத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய வேட்பாளர்கள் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

வாக்கு எண்ணும் நடவடிக்கைகளின் போது பல்வேறு முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு நான்கு ஆசனங்களும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு மூன்று ஆசனங்களும் கிடைக்கப் பெற்றிருக்க வேண்டுமெனவும் எனினும், தேர்தல் செயலகம் ஆளும் கட்சிக்கு ஐந்து ஆசனங்களை ஒதுக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மாவட்டத்தின் சார்பில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் நியமனங்களை இரத்து செய்யுமாறு மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (2-6)

# வடக்கு -கிழக்கு மாகாண பாடசாலைகளின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

(கொழும்பு)

வடக்கு -கிழக்கு மாகாண பாடசாலைகளின் பழைய மாணவர்கள் சங்க சம்மேளனத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி முதல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி அதிபரும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலை வருமான செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் வடக்கு -கிழக்கு பகுதிகளிலுள்ள பாடசாலைகளின் குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகள் பற்றி சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

மேற்படி சம்மேளனத்தின் தலைவரான கந்தையா நீலகண்டன் தலைமையில் இந்த ஆண்டுப் பொதுக்கூட்டம் இடம்பெறும். (2)

# மீள் குடியேற்றத்தை துரிதப்படுத்தி உட்கட்டமைப்பை மேம்படுத்தவும்

## மன்னார் ஆயர் வேண்டுகோள்

(கொழும்பு)

இடம்பெயர்ந்தும் முகாம்களில் வாழும் வன்னி மக்களின் மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்தி அவர்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்தும்படியும் சுனாமியால் பாதிப்பு அடைந்த மக்களுக்கு அமைத்துக் கொடுத்த வீடுகளைப் போன்று இவர்களுக்கும் வீடுகள் அமைத்துக் கொடுக்க ஆவன செய்யும் படியும் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை புதிய மீள்குடியேற்ற அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

புதிய மீள்குடியேற்ற அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ அமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்ட பின் கடந்த புதன்கிழமை வவுனியாப் பகுதிக்கு விஜயத்தை மேற்கொண்டு அங்கு மெனிக் பாமில் தங்கியுள்ள மக்களைச் சந்தித்த பின் அவர் மன்னாருக்கும் சென்றிருந்தார்.

புதிதாக மீள்குடியேற்ற அமைச்சை பொறுப்பேற்றுக் கொண்ட பின் மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகையிடம் ஆசீர் பெறவே இந்த விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

இந்தச் சந்திப்பின் போதே மன்னார் ஆயர் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களின் மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்துவதுடன் அவர்கள் உட்கட்டமைப்பையும் மேம்படுத்தும்படி கேட்டுக் கொண்டார்.

அத்துடன் மீள்குடியேற்றப்படும் மக்களின் வீடமைப்புக்காக வழங்கப்படும் 3 1/2 இலட்சம் ரூபாவில் அவர்கள் ஓரளவு திருப்திகரமான வீட்டை அமைக்க முடியாத நிலை இருப்பதனால் சுனாமியால் பாதிப்பு அடைந்த மக்களுக்கு அமைத்துக் கொடுக்கப்பட்ட வீட்டைப் போல் இவர்களுக்கும் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (2-6)

# யுத்தம் காரணமாக கிழக்கு மாகாணத்தில் 49ஆயிரம் பெண்கள் கணவர்மாரை இழந்துள்ளனர்



(கொழும்பு)

யுத்தம் காரணமாக கிழக்கு மாகாணத்தில் 49 ஆயிரம் பெண்கள் தமது கணவர்மாரை இழந்துள்ளதுடன் இவர்களில் 25 ஆயிரம் பேர் 25 வயதுக்கும் குறைவான பெண்கள் என தெரியவருகிறது.

இந்த 25 ஆயிரம் பெண்களில் 12 ஆயிரம் பெண்களுக்கு குறைந்தது தலா மூன்று பிள்ளைகளோ அதற்கு மேலதிகமாகவோ இருக்கலாம் என சிறுவர் மற்றும் மகளிர் நல்துறை அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார். யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் பெண்களின் உளநல அபிவிருத்தியை ஏற்படுத்துவது குறித்து முக்கியத்துவம் வழங்கப்படும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார். (2-6)

# வங்கி, சுற்றுலா, உற்பத்தித்துறையில் அதிகம் முதலிடும் யாழ்ப்பாண மக்கள்

## பங்குத்தரகு நிறுவனங்கள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண முதலீட்டாளர்கள் வங்கி, சுற்றுலா, உற்பத்தி மற்றும் பெருந்தோட்டதுறை நிறுவனங்களின் பங்குகளில் முதலிட அதிகம் ஆர்வம் காட்டுவதாக யாழ்ப்பாணத்தில் செயற்படும் பங்குத் தரகு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பு பங்குச் சந்தையின் யாழ்.கிளைகடந்தவாரம்யாழ்ப்பாணம் பிரதானபஸ்நிலையம்முன்பாகவுள்ள கட்டிடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில் இதன் செயற்பாடு குறித்துக் கருத்துத் தெரிவித்த பங்குத் தரகு நிறுவனங்களே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளன.

இவ்வாறு கருத்துத் தெரிவித்த பங்குத்தரகு நிறுவனங்களில் ஒன்றான எஸ்.கே.எம்.லங்கா ஹோல்டிங்கின் செயற்பாட்டு முகாமையாளர் மஞ்சுல குமாரசிங்க,

யாழ்.கிளை ஆரம்பிக்கப்பட்ட அன்றைய தினமே 10 புதிய CDS கணக்குகள் (பங்குச் சந்தையில் ஈடுபட விரும்புவோர் முதலில் ஆரம்பிக்க வேண்டிய கணக்கு) ஆரம்பிக்கப்பட்டன. முதலீட்டாளர்கள் தமது முதலீட்டுக்கு வங்கிகளிலிருந்து பெற்றுக் கொள்வதை விட அதிக வருவாயைப் பெற்றுக் கொள்ள விரும்புகின்றனர். எனத் தெரிவித்த அவர், முதலீட்டாளர்கள் சந்தை நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டால் இது சாத்தியமானது எனவும் தெரிவித்தார்.

இதேபோல் பார்லீட் பங்குத் தரகு நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் ஆர்.முரளிதரன் கருத்துத் தெரிவிக்கையில்,

தமது நிறுவனத்தில் முதல் நாளில் 30 சி.டி.எஸ். கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

# சம்பத் வங்கி 558 மில்லியனை இலாபமாகப் பதிவு செய்துள்ளது

(கொழும்பு)

சம்பத் வங்கி 2010இன் முதல் காலாண்டில் 791.5 மில்லியன் ரூபாயை இலாபமாப் பெற்றுள்ளது. இது 93.3 மில்லியன் ரூபாய் அதிகரிப்பாகும் என்றும் வங்கி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை 2009 இல் 1741 மில்லியனாக இருந்த இலாபம், 447.85 மில்லியன் அதிகரித்து 2010 இல் 2199 மில்லியனாக அதிகரித்துள்ளது. இது 26.3 சதவீத அதிகரிப்பு எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# சிறிலங்கா ரெலிகொம்மின் தேறியலாபம் 609 மில்லியன்

(கொழும்பு)

சிறிலங்கா ரெலிகொம்மின், முடிபடைந்த காலாண்டுக்கான வரிக்குப் பிந்திய தேறிய லாபமானது 609 மில்லியன் ரூபாயாகுமென சிறில்ங்கா ரெலிகொம் 2010 மார்ச் 31 இல் வெளியிட்ட நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ரெலிகொம்மின் தலைவர் லிசா டி சில்வா சந்திரசேன தெரிவிக்கையில்,

தளம்பலான சந்தை நிலையிலும் எமது குழுமம் நல்ல அடைவைக் காட்டியுள்ளது. இது எமது சவால்களை எதிர் கொள்ளும் திறமைக்கு அடையாளம்.



எமது குழுமத்தைச் சேர்ந்த மொபிட்டலும் இந்த இலாப அதிகரிப்புக்கு உதவியுள்ளது. எமது குழுமத்தின் செயற்பாட்டு இலாபம் 12048 மில்லியனாகக் காணப்பட்டது எனவும் தெரிவித்தார்.



21 ஆவது சார்க் மத்திய வங்கி ஆளுநர்களின் சந்திப்பு அண்மையில் வாஷிங்டனில் இடம்பெற்றது. சார்க் பிராந்தியத்தின் பிந்திய அபிவிருத்தி மற்றும் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து கலந்துரையாடப்பட்ட இச் சந்திப்பில் இந்திய றிசேவ் வங்கியின் ஆளுநர் டாக்டர் டி.சுப்பராவ், இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், பாகிஸ்தான் வங்கி ஆளுநர் செவ்ட் சலீம் ராஸா ஆகியோர் சந்திப்பதைக் காணலாம்.

# தனியார் துறையினருக்கும் விரைவில் ஓய்வூதியத் திட்டம்

தனியார்துறை ஊழியர்களுக்கென புதியதொரு ஓய்வூதியத் திட்டத்தை இலங்கை மத்திய வங்கி விரைவில் அறிமுகம் செய்யவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தனியார் துறையில் பணியாற்றி வருகின்ற சுமார் 80 இலட்சம் ஊழியர்கள் இதனால் பயனடைவார்கள். இந்தத் திட்டம் அரசாங்க வங்கிகளின் மூலம் செயற்படுத்தப்படும். தனியார்துறை ஊழியர்கள் விரும்பும் போது, இளைப்பாற்று நிதியத்துக்குப் பங்களிப்புச் செய்ய வசதியாக ஒவ்வொருவரின் பெயரிலும் இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றில் இளைப்பாற்று நிதியக் கணக்கை ஆரம்பிக்க மேற்படி வங்கிகள் வசதி செய்து கொடுக்கும்.

நாட்டின் எப்பகுதியிலிருந்தும் இதைச் செயற்படுத்த முடியும் என்றும், வைப்பிலிடும் தொகை சிறு தொகையாக இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளைப்பாற்றுக் கணக்கை வைத்திருப்பவருக்கு வழங்கப்படும் தன்னியக்க இயந்திர அட்டையைப் பயன்படுத்தி அவர் பணத்தை வைப்பிலிடலாம். எவ்வாறாயினும் வாடிக்கையாளர் அவரது கணக்கிலிருந்து பணத்தை மீளப்பெற முடியாதிருப்பது இந்தத் திட்டத்தின் முக்கிய அம்சமாகும். இவ்வாறு சேரும் பணத்தின் தொகையை அடிப்படையாக வைத்து ஊழியர் 55 வயதை அடைந்ததும் சம்பந்தப்பட்ட வங்கிக்கு விண்ணப்பிப்பதன் ஊடாக அவர் வட்டியுடன் ஓய்வூதியத்தைப் பெறுவார்.

# சீனாவை இந்தியா மிஞ்சும்



அடுத்த 15 ஆண்டுகளில் பன்னாட்டு நிறுவனங்களின் எண்ணிக்கையில் சீனாவை இந்தியா மிஞ்சிவிடும் என பிரைஸ்வாட்டர் ஹவுஸ் கூப்பர்ஸின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எமர்ஜிங் மல்ரிநஷனல் என்ற பெயரில் வெளியாகியுள்ள இந்த அறிக்கையில் 2024 ஆம் ஆண்டுக்குள் 2 ஆயிரத்து 200 நிறுவனங்கள் வெளிநாடுகளில் கால்பதிக்கத் திட்டமிட்டுள்ளன. உலகமயமாக்கல், தகவல் தொழில்நுட்பப் புரட்சி காரணமாக கடந்த 5 ஆண்டுகளில் இந்திய நிறுவனங்கள் வெளிநாடுகளில் கிளை திறப்பது அதிகரித்துள்ளது என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 113.17 | 114.79 |
| பவுண்ட் (ஐக்கிய இராச்சியம்) | 172.97 | 176.52 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 149.11 | 152.59 |
| சுவிஸ் பிராங் | 103.92 | 106.46 |
| கனேடிய டொலர் | 112.05 | 114.89 |
| அவுஸ்திரேலிய டொலர் | 104.56 | 107.35 |
| சிங்கப்பூர் டொலர் | 82.37 | 84.22 |
| ஜப்பான் யென் | 1.19 | 1.22 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.56 | |
| ஐக். அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 31.03 | |

# வர்த்தக செய்தித் துளிகள்

## எச்.என்.பி., தியாகராஜாவுக்கு கியூ.எவ்.சி.விருது



ஹற்றன் நஷனல்வங்கியின்தலைமை நிறைவேற்று அதிகாரி இராஜேந்திரா தியாகராஜா, கட்டார் நிதி நிலைய (கியூ.எப்.சி.) விருதைப் பெற்றுள்ளார். ஆசிய அளவில் வழங்கப்படும் இவ் விருது, நிதித்துறையில் சிறந்த தலைமைத்துவப் பண்பு, எச்.என்.பியை இலங்கையில் சிறந்த வங்கிகளில் ஒன்றாக்கியமை, வங்கியின் விரிவாக்கம் மற்றும் சமூகப் பொறுப்பைக்கருத்தில் கொண்டு வழங்கப்பட்டுள்ளது.

## ஏர்டெல் நிகரலாபம் ரூ.2129 கோடி

இந்தியாவில் பார்தி ஏர்டெல், தொலைத்தொடர்பு சேவைத்துறையில் முன்னணி நிறுவனமாகத் திகழ்கிறது. இந்நிறுவனம் மார்ச் மாதத்துடன் நிறைவடைந்த காலாண்டில் ரூ.2 ஆயிரத்து 129 கோடியை (இந்திய ரூபாய்) நிகரலாபமாக ஈட்டியுள்ளது. இது இதற்கு முந்திய நிதியாண்டின் இதே காலாண்டில் ரூ.2074 கோடியாக இருந்தது. இதே காலாண்டுகளில் இந்நிறுவனத்தின் மொத்த வருவாய் ரூ. 9049 கோடியிலிருந்து ரூ.8944 கோடியாகக் குறைந்துள்ளது.

# பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | புள்ளி | அதிகரிப்பு/ குறைவு |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 4188.88 | 33.88 |
| மிலங்கா விலைச்சுட்டி | 4712.43 | 17.04 |
| புரள்வு (ரூபா.மில்லியன்) | 1095.78 | |

***உயர்வடைந்த பங்குகள்*** : த புக்கிட், ஹற்றன் நசனல், சம்பத் வங்கி, சிலோன் இன்வெஸ்மென்ட், டிஸ்ரிலரிஸ் கம்பனி.

***சரிவைக் காட்டிய பங்குகள்***: கார்கில்ஸ் (லங்கா), கண்டி ஹோட்டல்ஸ், கொழும்பு டெக்யாட், லங்கா ஐ.ஓ.சி., என்.டி.பி.

# ரி.வி.எஸ்.மோட்டார் நிகர லாபம் 178% வளர்ச்சி

(சென்னை)

ரி.வி.எஸ்.மோட்டார்கம்பனி, சென்ற மார்ச் மாதத்துடன் நிறைவடைந்த நிதியாண்டில் 86.49 கோடி இந்திய ரூபாயை நிகரலாபமாக ஈட்டியுள்ளது. இது, இதற்கு முந்தைய நிதி ஆண்டைவிட 178 சதவீதம் (ரூ.31.08 கோடி) அதிகமாகும்.

இதே நிதியாண்டுகளில் இந்த நிறுவனத்தின் நிகர விற்பனை 19 சதவீதம் வளர்ச்சி கண்டு ரூ.3670.92 கோடியிலிருந்து ரூ.4356.06 கோடியாக அதிகரித்துள்ளது.

இந் நிறுவனம் சென்ற மார்ச் மாதத்துடன் நிறைவடைந்த நான்காவது காலாண்டில் ரூ.20.29 கோடியை நிகரலாபமாகப் பெற்றுள்ளது.

இதே காலாண்டில் இந்நிறுவனத்தின் விற்பனை ஆயிரத்து 192 கோடியாக உயர்ந்துள்ளது.

சென்ற நிதியாண்டில் ரி.வி. எஸ். நிறுவனம் 15 லட்சத்து 20 ஆயிரம் இரு சக்கர வாகனங்களை விற்பனை செய்துள்ளதாகவும் ரி.வி.எஸ். நிறுவனம் தெரிவித்துள்ளது.

# ஹீரோ ஹோண்டா நிகர லாபம் 49% வளர்ச்சி

(மும்பை)

ஹீரோ ஹோண்டா நிறுவனம் சென்ற மார்ச் மாதத்துடன் நிறைவடைந்த காலாண்டில் 599 கோடி இந்திய ரூபாயை நிகரலாபமாக ஈட்டியுள்ளது. இது, இதற்கு முந்தைய இதே காலாண்டைவிட 49 சதவீதம் (ரூ.402 கோடி) அதிகமாகும்.

இதே காலாண்டுகளில் இந்நிறுவனத்தின் நிகர விற்பனை 20 சதவீதம் அதிகரித்து ரூ.3412 கோடியிலிருந்து ரூ.4093 கோடியாக அதிகரித்துள்ளது.

சென்ற நிதியாண்டுக்கு, இந் நிறுவனம் அதன் பங்குதாரர்களுக்கு 1500 சதவீத இறுதி டிவிடெண்டை வழங்க முடிபுசெய்துள்ளது. அதாவது ரூ.2 முகமதிப்புக் கொண்ட பங்கு ஒன்றிற்கு ரூ.30 இறுதி டிவிடெண்ட் கிடைக்கும்.

மார்ச் மாதத்துடன் முடிபடைந்த முழு நிதி ஆண்டில் ஹீரோ ஹோண்டாவின் நிகர லாபம் 74 சதவீதம் அதிகரித்து ரூ.1282 கோடியிலிருந்து ரூ.2232 கோடியாக அதிகரித்துள்ளது. இதே நிதியாண்டுகளில் இந்நிறுவனத்தின் நிகர விற்பனை 28 சதவீதம் வளர்ச்சி கண்டு ரூ.12319 கோடியிலிருந்து ரூ.15758 கோடியாக அதிகரித்துள்ளது. சென்ற முழுநிதியாண்டில் ஹீரோஹோண்டாவின் வாகன விற்பனை 24 சதவீதம் அதிகரித்து 46 லட்சம் என்ற எண்ணிக்கையில் உயர்ந்துள்ளது.

கு.முருகதாஸ்

# களம் பல கண்ட யாழ் கோட்டை

21

### 21, ஆகஸ்ட் 1976

யாழ்ப்பாணக் கோட்டைச் சிறைச்சாலை வாயிலுக்கு சிறையிலிருந்து விடுவிக்கப்படவிருந்த கிளிநொச்சி இளைஞர்களை வரவேற்பதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த அமிர்தலிங்கம், திருமதி அமிர்தலிங்கம், செல்லத்தம்பு, யோகேஸ்வரன் ஆகியோர் வேறு சில ஆதரவாளர்களுடன் வந்தனர். கோட்டை வாயிலிற் கடமைக்கிருந்த பொலிஸார் அவர்களை உள்ளே விடாது தடுத்தனர். பொலிஸ் அத்தியட்சகரின் அனுமதியின்றி



அமிர்தலிங்கம்

எவரும் கோட்டைக்குள் நுழைய முடியாது என அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

அமிர்தலிங்கம் குழுவினர் கோட்டை வாயிலிருந்து திரும்பி வரும்போது கோட்டையின் வெளி வாயிலோடு இருந்த பொலிஸ் பெறக்சில்(சின்னக்கோட்டையில் இருந்தன) இருந்து காருக்குள் கற்கள் வீசப்பட்டன. அமிர்தலிங்கம் பொலிஸ் அத்தியட்சகரிடம் இக் கல்லெறிச் சம்பவம் குறித்து முறைப்பாடு செய்வதற்காகப் பொலிஸ் நிலையத்திற்குள் ஏனையோருடன் நுழைந்தபோது வெளியே காரினுள் திருமதி அமிர்தலிங்கம் அமர்ந்திருந்தார். பொலிஸ் நிலையத்தில் அமிர்தலிங்கத்தின் முறைப்பாட்டையோ வரவையோ பொலிஸ் அத்தியட்சகர் செனேவிரத்ன கனம் பண்ணாது வேண்டாவெறுப்பாக நடந்து கொண்டார்.

றிசேவ் பொலிஸ் செல்லத்துரையை அழைத்து அமிர்தலிங்கத்தின் முறைப்பாட்டைப் பதியுமாறு கூறிவிட்டு வெளியேறினார். அமிர்தலிங்கம் முறைப்பாடு செய்து கொண்டிருந்தபோது பொலிஸ் பெறச்சிலிருந்து திருமதி அமர்தலிங்கம் அமர்ந்திருந்த காரைச் சூழ்ந்து கொண்டனர். தூஷணை வார்த்தைகளால் ஏசியதுடன் காரை அறைந்து உலுப்பினர். கலவரத்தை அறிந்து அமிர்தலிங்கம் வெளியில் விரைந்து வந்த போது அவர்களில் ஒருவரான ரணசிங்க காரின் முன் கண்ணாடியை அறைந்து நொறுக்கியதுடன் அமிர்தலிங்கத்தையும் ஓங்கி அறைந்தான். இக்கலவரத்தை கண்ணுற்ற ஏஎஸ்பி ஒருவர் விரைந்து காரடிக்கு ஓடி வந்ததால் மேற்கொண்டு அசம்பாவிதங்கள் நேராது தவிர்க்கப்பட்டது.

பின்னர் 107 பொலிஸாரைக் கொண்ட ஆளடையாள அணிவகுப்பு நடைபெற்றது. தாக்கியவனை ஆளடையாளம் காட்ட சாட்சிகளால் முடியவில்லை. ஆனால் பொலிஸ் நிலைய எழுதுவினைஞர் இருவர் ரணசிங்காவை அடையாளம் காட்டினர். விசாரணை நிகழ்ந்தது. இழுத்தடித்து ஒருவிதமாக 27 ஜனவரி 1978 இல் பதினைந்து மாதங்களின் பின்னர் ரணசிங்க சேவை நீக்கம் செய்யப்பட்டான்.

### 12 ஜூலை 1979

யாழ்ப்பாண மாவட்டத்தின் மீது அவசர காலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. பிரிகேடியர் வீரதுங்கவை அழைத்த ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன பயங்கரவாத பயமுறுத்தலை இந்தத் தீவிலிருந்து குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து அனைத்து வழிமுறைகளையும் கையாண்டு துடைத்து விடுக எனக் கட்டளை வழங்கினார். எவரையும் கைது செய்து விசாரிக்கவும் காலவரையின்றி தடுத்து வைக்கவும் அழித்து விடவும் இந்தச் சட்டம் வழி வகுத்தது.




பிரிகேடியர் வீரதுங்க ஜூலை 17 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து பொறுப்பேற்கவிருந்தார். அதற்கு முன் ஜூலை 13, 14 ஆம் திகதிகளில் அரசபயங்கரவாதம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகியது. 14 ஆம் திகதி அதிகாலை 1 மணிக்கு நவாலியைச் சேர்ந்த விஸ்வஜோதி இரத்தினம் (இன்பம்) என்ற இளைஞனை அவரோடு இருந்த அவரது மைத்துனர் ச.செல்வரத்தினத்தோடு கைது செய்து கோட்டைக்குக் கொண்டு வந்தனர். அதே நாள் அதிகாலை இந்த இருவரின் சடலங்கள் பண்ணைப்பாலத்தில் கிடந்தன. துரையப்பா கொலை வழக்கில் சந்தேகத்தின் மீது கை தாகி விடுதலையாகிவர் இன்பமாவார். அச் சடலங்கள் சூட்டுக்காயங்களுடன் அடையாளம் தெரியாதவாறு சிதைக்கப்பட்டிருந்தன.

இன்பம் கைதான அதே இரவு அதிகாலை வேறு நால்வர் வெவ்வேறிடங்களில் கைது செய்யப்பட்டனர். நவாலியில் ரி.எஸ். பாலேந்திரா ராஜகிளி என்ற இளைஞர்களும் சட்டநாதர் கோவில் வீதியில் எஸ்.பரமேஸ்வரன், எல்.ராஜேஸ்வரன் ஆகிய இருவர் பருத்தித்துறை வீதியில் ஐ.இந்திரராஜன் என்பவர் ட்ரக்குகளில் வந்த பொலிஸ்படையினரால் அழைத்துச் செல்லப்பட்டனர். ஐ.இந்திரராஜன் தவிர ஏனையோர் கோட்டைக்குள் காணாமல் போயினர். இந்திரராஜன் மட்டும் சித்திரவதைக் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தார்.அவரின் இடுப்பிற்குக் கீழ் பல காயங்களும் முகத்தில் சூட்டுக்காயங்களும் விரல் நகங்கள் பிடுங்கப்பட்டும் காணப்பட்டன.

ஜூலை 17, 1979 ஆம் திகதி பிரிகேடியர் வீரதுங்க யாழ்ப்பாணம் வந்து கோட்டை ராணி மாளிகையில் அமர்ந்தார். அன்றிலிருந்து கோட்டைக்குள் நிரந்தரமான இராணுவப்படையணி ஒன்று குடியேறியது.

### 10, ஜூலை, 1984

யாழ்ப்பாணக் கோட்டை முற்றுகையிடப்பட்டது. இது யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்பற் றும் நோக்கிலான முற்றுகையன்று. ஸ்ரீலங்கா இராணுவத்தை யாழ்ப்பாணக் கோட்டை யிலிருந்து வெளியேறாது தடுக்கும்



ஜே.ஆர்.ஜெயவர்த்தனா

முற்று கையாகும். இந்த முற்றுகைக்கு ஈழத்தமிழ் விடுதலைப்புலிகளின் யாழ்ப்பாணக்குடா நாட்டுத் தளபதி கிட்டு தலைமை தாங்கினார். யாழ்ப்பாணக் கோட்டை வரலாற்றில் மிக நீண்ட கால முற்றுகையாக இது இருந்தது. 03, ஓகஸ்ட், 1987 இந்திய அமைதிகாக்கும் படை யாழ்ப்பாணக்கோட்டைக்குள் பிரவேசிக்கும் வரை இந்த முற்றுகை தொடர்ந்திருந்தது. சரியாக மூன்றாண்டுகள் 23 நாட்கள் இந்த முற்றுகை நடந்தது.

யாழ்ப்பாணக் கோட்டை, கோட்டையை அடுத்துள்ள யாழ்.பொலிஸ் விடுதிகள் என்பனவற்றில் ஸ்ரீலங்கா இராணுவம் நிலை கொண்டிருந்தது. பின்னர் யாழ்ப்பாணம் தொலைத் தொடர்பு நிலையக்கட்டிடத்திலும் சிறிய முகாம் ஒன்றினை அமைத்துக்கொண்

**செங்கை ஆழியான்**

டது. யாழ்ப்பாணம் கோட்டைக்கு அப்பால் மண்டைதீவிலும் குருநகரிலும் இராணுவ முகாம்கள் இருந்தன. இவற்றிலிருந்து இராணுவத்தினர் வெளியேறாது விடுதலைப் புலிகள் அரண் அமைத்து காவல் காத்தனர்.

யாழ்ப்பாணம் கோட்டையின் புறச்சுற்று வீதியில் விடுதலைப் புலிகளின் அரண்களோடு புளொட் ,ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கக் குழுக்களின் கண்காணிப்பு அரண்களும் ஆரம்பத்தில் இருந்தன.

கொட்டடி, காங்கேசன்துறை வீதி, முனியப்பர் வீதி, நூல்நிலைய வீதி அந்த வீதிகளுக்கு இடையி லான அரச கட்டிடங்கள் என்பனவற்றில் எல்லாம் நிலை கொண்டு யாழ்ப் பாணக் கோட்டையிலிருந்து இராணுவத்தினர் வெளியேறாது கண் காணித்தனர்.

கோட்டைக்குள்ளிலிருந்து ஸ்ரீலங்கா இராணுவத்தினர் வெளியே வரமுயலும் வேளைகளில் பயங்கரமாக அவர்களைத் தாக்கி யாழ்ப்பாணக் கோட்டைக்குள் அவர்களை முடங்க வைத்தனர். அதனால் ஸ்ரீலங்கா அரசு யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து 1000 மீற்றர் பிரதேசத்தை பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியது. (தொடரும்)

# இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது

## ருவான் விஜேவர்தன தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தின் பிழையான நிதி முகாமைத்துவத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அல்பர்ட் கிரசன்டில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி ஊடக மத்திய நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிக்கையில்,


வருடாந்த வரவு செலவுத் திட்ட யோசனை ஒன்றை சமர்ப்பிக்க முடியாதளவிற்கு அரசாங்கம் பின்னடைவை எதிர்நோக்கி வருகின்றது.

தனியார் வங்கிகளிடமிருந்து அரசாங் கம் கடன்களைப் பெற்றுக் கொண்டுள்ளது. சர்ச்சைக்குரிய ஹெட்ஜின் கொடுக்கல் வாங்கலின் மூலம் மில்லியன் கணக்கான அமெரிக்க டொலர்கள் நட்டமேற்பட்டதாகவும் விரைவில் எரிவாயு விலை அதிக்ரிக்கப்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் எனக் கருதியே மக்கள் இந்த அரசாங்கத்திற்கு வாக்களித்துள்ளனர்.

தேர்தலுக்கு முன்னர் எரிவாயு மற்றும் பால் மா போன்றவற்றின் விலைகளை அதிகரிக்க வேண்டாம் என அப்போதைய நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்தன நிறுவனங்கள் மீது அழுத்தங்களை பிரயோகித்தார் எனினும் தேர்தல்கள் முடிவடைந்துள்ள நிலையில் விலையேற்றம் தொடர்பில் முன்பு காட்டிய அதே கரிசனை தொடர்ச்சியாக காணப்படுமா என்பது சந்தேகமே என்றார். (2-6)

# தேசியப்பட்டியல் ஆசனம் குறித்து ஐ.தே.மு. தலைவர்கள் நாளை பேச்சுவார்த்தை



(கொழும்பு)


தேசியப் பட்டியல் ஒதுக்கீடு தொடர்பில் ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்கள் நாளை பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னணியின் கூட்டணி கட்சிகளுக்கு இடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலைமைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் இந்த பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இதற்கமைய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவர் மனோ கணேசன் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர ஆகியோர் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவா ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்த உள்ளனர். தேசியப்பட்டியல் ஆசன ஒதுக்கீடு தொடர்பில் கூட்டணி கட்சிகளுக்கு இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனுக்கு தேசியப்பட்டியல் ஆசனம் வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆசனம் வழங்கப்படாத பட்சத்தில் பாராளுமன்றில் தனித்து செயற்பட்த் திட்டமிட்டுள்ளதாக கட்சி அறிவித்துள்ளது.

மேலும் ஜனநாயக மக்கள் முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவு ஆகியவற்றுக்கு தேசியப்பட்டியல் ஆசனங்களை வழங்குவதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் இரண்டு தேசியப்பட்டியல் உறுப்பினர்கள் பதவி விலகக் கூடுமென தகவல்கள் வெளியாகியுள்ளன. (2-6)






வலிகாமம் தெற்கு பிரதேச சபை சுன்னாகம், உள்ளூராட்சி மறுசீரமைப்புச் செயற்றிட்டத்தினால் உலக நாடக தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கலை விலாசம் கலைகளின் மாதாந்த ஆற்றுகை களம் நிகழ்வில் இடம்பெற்ற நாடக, நடனக் காட்சிகளைப் படங்களில் காணலாம்.

# ஜனநாயகம், மனித உரிமைகளை காக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ரணில் விக்ரமசிங்க தெரிவிப்பு



(கொழும்பு)

மக்களின் ஜனநாயக மற்றும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தனது மே தின வாழ்த்துச் செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச தொழிலாளர்கள் பெருமையுடன் மே தினக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டு வரும் சந்தர்ப்பத்தில் இலங்கை உழைப்பாளர்கள் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகவும் யுத்த காலத்தை விடவும் தற்போது தொழிலாளர்கள் கூடுதலான அர்ப் பணிப்புக்களை மேற்கொள்ள நேரிட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜீ.எஸ். பி. பிளஸ் சலுகைத் திட்டம் இழக்கப்பட்டமை தொழிலாளர்களுக்கு பல்வேறு வழிகளில் பாதிப்பினை ஏற்படுத்தும் எனவும் ஐரோப்பிய ஒன்றியத்துடனான உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யாத காரணத்தினால் இலங்கைக்கான சலுகைத் திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.'

மேலும் 'அரசாங்கத்திற்கு மக்கள் மீது மெய்யான கரிசனை காணப்படுமாயின் மனித உரிமைகளையும் ஜனநாயக உரிமைகளையும் பேணிப் பாதுகாக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (2-6)

# தேர்தல் முறைமை மாற்றத்தின் போது தற்போதைய தேர்தல் தொகுதிகளில் மீள் எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்படும்

## பிரதியமைச்சர் டிலான் பெரேரா தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டின் தேர்தல் முறைமை மாற்றியமைக்கப்பட்டு தொகுதி முறைமைக்கு செல்லும் போது தற்போதைய தேர்தல் தொகுதிகளில் மீண்டும் எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்படும் என்று பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் பிரதியமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

தேர்தல் முறைமை மாற்ற விவகாரம் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே டிலான் பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய விருப்புவாக்கு முறைமையில் அமைந்த தேர்தல் முறைமையில் மாற்றம் வேண்டும் என்று பெரும்பாலும் அனைத்து அரசியல் கட்சிகளும் விரும்புகின்றன.

முக்கியமாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் தேர்தல் முறைமை மாற்றத்தை விரும்பும் என்று நம்புகின்றோம். இதுதொடர்பில் எதிர்காலத்தில் சகல அரசியல் கட்சிகளுடனும் பேச்சுநடத்த அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

மேலும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் கடந்த அரசாங்கத்தில் பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அந்தக் குழுவின் பரிந்துரைகளும் புதிய தேர்தல் முறைமை மாற்றத்தின் போது கவனத் திற்கொள்ளப்படும். குறித்த குழுவின் பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவே அமைந்துள்ளன.

மேலும் தேர்தல் முறைமை மாற்றத்தின் ஊடாக தொகுதி முறைமைக்கு செல்லும் போது தற்போதைய தேர்தல் தொகுதிகளில் மீள் எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டியுள்ளது. அதற்கான செயற்பாடுகளையும் அரசாங்கம் எதிர் காலத்தில் மேற்கொள்ளும்.

இதேவேளை தொகுதிமுறைமையின் காரணமாக சிறுபான்மை பிரதிநிதித்துவங்கள் பாதிக்கப்படும் என்று நான் கருதவில்லை. அவற்றைப் பாதுகாக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். (6)

# பிரதம கொறடா பதவி தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியில் சர்ச்சை

(கொழும்பு)

ஐக்கியதேசியக்கட்சியில் பிரதம கொறடா பதவி நியமனம் தொடர்பில் சர்ச்சை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடவாக ஐக்கிய தேசியக்கட்சியின் சிரேஸ்ட உறுப்பினர் ஜோன் அமரதுங்கவை கட்சித் தலைமை தெரிவு செய்திருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு பிரிவு பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்லவை பிரதம கொறடாவாக நியமிக்குமாறு கோரிக்கை விடுவிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீண்டகாலம் பாராளுமன்ற உறுப்பினராக கடமையாற்றி வரும் காரணத்தினால் ஜோன் அமரதுங்கவிற்கு இந்தப் பதவி வழங்கப்பட்டதாக கட்சி தலைமை அறிவித்துள் ளது.

இதேவேளை, எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா பதவி தமக்கு கிடைக்க வேண்டுமென பல உறுப்பினர்கள் எதிர்பார்ப்பதாகவும், கட்சித்தலைமை எடுத்த முடிவு ஆச்சரியமளிக்கும் வகையில் அமையப் பெற்றுள்ளதாகவும் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். (2-6)

# புலிகளின் சர்வதேச வலையமைப்பை வீழ்த்த விரிவான நடவடிக்கைகள்

## பாதுகாப்பு செயலர் தெரிவிப்பு



(கொழும்பு)

நாடுகள் பலவற்றில் கட்டியெழுப்பப்பட்டுவரும் புலிகளின் சர்வதேச வலையமைப்பை வீழ்த்துவதற்காக புலனாய்வு நடவடிக்கைகளை விரிவுபடுத்தியுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆனையிறவு பிரதேசத்தில் நேற்று முன்தினம் வன்னி போரில் உயிரிழந்த இராணுவத்தினரின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபியை திறந்து வைக்கும் வைபவத்தில் உரையாற்றும் போதே பாதுகாப்புச் செயலாளர் இத்தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப்புலிகள் போர் ரீதியாக முழுமையாக தோற்கடிக்கப்பட்டுள்ள போதிலும் புலம்பெயர்ந்த தமிழர்கள் சர்வதேச நாடுகள் மற்றும் பல்வேறு அமைப்புக்களின் உதவியுடன் பிரபாகரனின் தமிழீழ அரசாங்கம் என்ற கொள்கைளை மீண்டும் விரிவுபடுத்துவதில் ஈடுபட்டுள்ளன. இதனை தடுத்து நிறுத்துவதற்காக இலங்கை வெளிவிவகார அமைச்சு மற்றும் புலனாய்வுப் பிரிவும் இணைந்து விசேட புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

இதனடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ள சில நாடுகளின் தூதரக சேவைகளில் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புலிகளின் வெளிநாட்டு செயற்பாடுகள் மற்றும் புலனாய்வில் சிறந்த தேர்ச்சி பெற்ற இராணுவ அதிகாரிகள் தூதரக சேவைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

விடுதலைப்புலிகளை முழுமையாக தோற்கடித்து நாட்டிற்கு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தி யுத்த வெற்றியின் முதலாவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 20 ஆம் திகதி கொழும்பில் கோலாகலமாகக் கொண்டாடப்படும் என்றும் வித்தியாசமான முறையில் போர் வெற்றியைக் கொண்டாடவுள்ளதாகவும் யுத்த வெற்றியின் நினைவு தினம் மே 18 ஆம்திகதி என்ற போதிலும் ஜனாதிபதி வெளிநாட்டு விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதால், அதனை 20 ஆம் திகதி நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார். (2-6)

# போலியான வாக்குறுதிகளினால் உழைக்கும் வர்க்கத்தினர் ஏமாற்றப்பட்டுள்ளார்கள்

## மேதின செய்தியில் ஜே.வி.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

போலியான வாக்குறுதிகளினால் உழைக்கும் வர்க்கத்தினர் ஏமாற்றப்பட்டுள்ளதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

நுகர்வுப் பொருட் களுக்கான விலைகள் வானளவு உயர்வடைந்துள்ளதாகவும் இதனால் தொழிலாளர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

உழைக்கும் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக போராடிய அனைவருக்கும் தமது வணக் கங்களைத் தெரிவித்து கொள்வதாக ஜே.வி.பி. தனது மே தினச் செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கும்போது,

அரசாங்கத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் சுமைகள் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க ஊழியர்களுக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா சம்பளம் வழங்குவதாகவும் தனியார் துறையினருக்கு சம்பளம் வழங்குவதாகவும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வாக்குறுதி வெறும் வாக்குறுதியாகவே காணப்படுகின்றது.

மக்களின் ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பதற்கு உழைக்கும் வர்க் கத்தினர் கூடுதல் முனைப்பு காட்ட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

ஒரே... புகைச்சல்
மகள் சமைக்கிறாள்...
வயசு 56 தான்

*****

ஏ மலைகளே!
ரொம்பக் காலமாய் நிற்கிறீர்களே
உட்கார்ந்து ஓய்வெடுங்களேன்

*****

ஏ... கொக்கே
உன் நிறத்தைக் கொடு
எனக்கு கல்யாணமாம்

*****

அவள் முன்புபோல இல்லை
யாரையும் கண்டுகொள்வதில்லை
இறந்து ஆறுமாதம் தான் ஆகிறது

*****

இப்பொழுதுதான் கட்டினார்கள்
பூச்சுவேலை கூட ஆகவில்லை
விழும்போதே உயிர் போய்விட்டது

*****

சூரியனே எழுந்துவா
அலாரம் அலறப்போகிறது

-குணபாலசிங்கம் நிசாந்தி-

### புகையை விழுங்கும் புகை

அம்மா இவள்
விழிக்கும் விடியல்கள்
அடுப்புப் புகைக்குள்
மூக்குளித்துக் கருகி
அப்பம் சுட்டு விற்றபணம்
பிள்ளையின் படிப்புக்காக
அள்ளிக் கொடுக்க
தேனீர்க் கடைகளிலும்
தெருச் சந்தி மதவுகளிலும்
குந்தியிருக்கும்
பிள்ளை வாயில்
வெள்ளைச் சுருட்டாகி
புகைகிறது

தென்னல்வை
அரிபுத்திரன்



### விழுந்தா வானம்

உரிமைக்காக ஊரை
மறந்தோம்
உறவைத் துறந்தோம்
உறவுக்காக அனலில்
குளித்தோம்
உடலைப் பிழிந்தோம்
உணவுக்காக பசியைத்
தடுத்தோம்
இரவைக் காக்க உறங்க
மறுத்தோம்
பகையைத்தேடி பல
பாதைகள் நடந்தோம்
விடியலுக்காக எமையே
இழந்தோம்
விழுந்தா வானம் இல்லை
வாழ்வில் தொடர்ந்ததே
சோகம்

-கஜா-

### விடியலுக்காக...

வெண்ணிலா ஒன்று
விம்மி அழுகிறது
விடியலுக்காக...
கலங்காதே!
பாரதி கண்ட
புதுமைப் பெண்ணே
புரிந்துகொள்வாய்
பத்து மாதம் சுமந்த
பத்தினியும் நீதான்
புலம்பித் தவிக்கும்
வெண்ணிலாவும் நீதான்
வரதட்சணைக்கு
வடிவம்கொடுக்கும்
வில்லியும் நீதான்
நிலையில்லாத
இந்த வையகத்தில்
எத்தனை அவதாரம் உனக்கு
அழுபவளும் நீதான்
அழ வைப்பவளும் நீதான்

க.தேவன்
புனர்வாழ்வு நிலையம் கைதடி

### இமயம் தொட...

தாய் தந்தையை மதி
உயிர் தந்த
உதிரத்தைப் பாலாக்கிய
கண்முன் உயிருடன்
உலாவும் தெய்வங்கள்
பயணம் தொடங்கு முன்
அவர் பாதம் தொழு
வெற்றிக்கு வழிசமைக்கும்

மாவை. நா.கஜேந்திரா

### அந்தரிக்கும் ஆத்மாக்கள்

இரத்தம் பாய்ந்த மண்மீது
சொகுசு பஸ்சில் சுற்றுலா...
கந்தகம் கலந்து கண்ணீரில் மிதக்கும் வடக்கில்
செவ்வாள் திருவிழா...
சதைத் துண்டுகளை கூட்டிப் புதைத்த மண்ணில்
சந்தோஷ பவனி
வாழ வேண்டிய இளம் மொட்டுக்கள் கருகிய இடத்தில்
உல்லாச கொண்டாட்டம்
கழுத்தறுந்து கையறுந்து காலிழந்து கதறிய தரையில்
களியாட்டங்கள்...
மண்ணாய் போன உறவுகள் கேட்கின்றன — எம்
ஆத்மாக்கள் சாந்தியடையுமா னெ...

துளசி
பூநகரி



## மௌனத்தின் தேடல் - 17

### இழப்புக்கள்

தொலைந்துபோன சொந்தங்களை
தேடுகின்ற பந்தங்களே
தொலைத்து விடாதீர் உங்கள்
சொந்தக் கால்களையும்
இழந்தவை இழக்கப்பட்டது தான்
இருப்பதையும் இழக்காதீர்

அ.மயூரதி
கல்வயல்

### பரிதாபம்

பச்சைக் குழந்தையும்
பள்ளி செல்ல வேண்டிய
பிள்ளையும் இங்கு
பரிதாபமாக ஏன் இந்த
குப்பை மேட்டில்

த.கேமா
கொக்குவில்

### தேடல்

உறவுகளை இழந்த
உள்ளங்கள் இவர்கள்
குப்பை மேட்டில்
எதைத் தேடுகிறார்கள்
உடன் பிறப்புக்களின்
உடலங்களையா?
அவர்கள் புதைக்கப்பட்டனரோ?
எரிக்கப்பட்டனரோ?
புதையுண்டனரோ?
எரியுண்டனரோ?
புரியாமல் தேடுகிறார்கள்
இவர்கள்

-கே.சரண்-

### எங்கே தேடுவது

கொடிய வானத்தின் நடுவில்
கொடூர சமர் நடந்த இடத்தில்
புதை குழியின் மேட்டிலே
புலம்பெயர்ந்த இளம் தளிர்களே
புலம்பலுடன் யாது தேடுகிறீர்
பிரிந்து போன உறவுகளையா
தொலைந்துபோன உடமைகளையா?

துவாரகா ஞானமுத்து
கைதடி மேற்கு

### பாழ்போகும் பிஞ்சுகள்

பின்விளைவு தெரியாது
பிணிகளின் பிறப்பகத்தில்
பாழாகிப்போகும் பிஞ்சுகள்

சி.சிவநேசன்
அல்வையூர்

---

ஏழைச் சிறார்கள் எமக்கு
பள்ளிசெல்ல வழியில்லை
இந்த குப்பைகளுக்குள்
கூடி விளையாடி
மகிழ்கிறோம்

சுப்பிரமணியம் ஜெயரூபன்
பருத்தித்துறை

---

குப்பை மேட்டில்
குன்றிமணிகள் இல்லை
குண்டுகளே! உள்ளன
குப்பைகளைக் கிளறாதீர்கள்

து.துவாரகா
சங்கானை

### விடியல் பிறக்கும்

குப்பைகளைக் குடைந்து குடைந்து
எந்தவகையில் தேடினாலும் உனக்கு
கிடைக்கப்போவதோ குப்பைகள்தான்
உனக்குள்ளேயே உன்னை
ஆழமாய்த் தேடிப்பார்
புதியதோர் விடியல் பிறக்கும்
புவனியிலே!

பொலிகை வாசன்
ஆ.சசிகரன்

---

எதிர்காலத்தின் வழிகாட்டிகளே
பிரிந்திட்ட உறவுகளைத் தேடி
பயணமா? அல்லது
புதிய வாழ்வமைக்க பசுமையான நிலத்தை
வன்னி மண்ணில் தேடுகிறீரா?
எங்கேயும் கிடைக்காது - ஏனெனில்
கந்தகப் புகையில் வன்னிமண்
கருகிவிட்டது

நா.தமிழ்ச்செல்வி
பூநகரி

### எத்தனை ஏக்கங்கள்...!

குப்பை பைகளிடையே
வயிற்றை நிரப்பி
வறுமைப் பசிபோக்க
வாரியடித்து ஓடிவரும்...!
வண்டுகளின் வதனத்தில்
வறுமையின் கொடுமையில்
எத்தனை ஏக்கங்கள்...!

பூலக்சி
கல்லுவம்

### வன்னிச் சுனாமி

மலரும் மொட்டுக்களையும்
மிதமாகத் தாக்கிய
வன்னிச் சுனாமி
வசைமொழி பேசியது
எம்மவர் உயிர்களை கருக்கி
எஞ்சிய எமையெல்லாம்
கேள்விக்குறியோடு இன்று
காலம் பார்க்கிறது

மருதங்கேணியூரான்
நலன்புரி நிலையம், கைதடி

---

குப்பை மேட்டில்
குறிஞ்சிப்பரல் நீ
மௌனமாய் தேடுவது
உணவையா? உன்
உறவுகளையா?

யோ.கௌதமி
சுதுமலை

## சங்குநாதம் மௌனத்தின் தேடல்- 18



அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 07.05.2010 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

## செம்மொழி மாநாட்டையொட்டிய
## உலகளாவிய கவிதைப் போட்டியில் பங்கேற்போருக்கான மின்னஞ்சல் அறிமுகம்

(சென்னை)

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டையொட்டி நடைபெறும் உலகளாவிய கவிதைப் போட்டியில் பங்கேற்போர் மின்னஞ்சலிலும் தங்களது கவிதைகளை அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கோவையில் ஜுன் மாதம் 23 ஆம் திகதி தொடங்கவுள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டையொட்டி சங்கத் தமிழ் அனைத்தும் தா என்ற தலைப்பில் உலகளாவிய கவிதைப் போட்டி நடத்தப்படுகிறது.

உயர்கல்வித் துறை அமைச்சர் பொன்முடிதலைமையிலான பொது அரங்க நிகழ்ச்சிகள் அமைப்புக் குழு சார்பில் இப்போட்டி நடத்தப்படுகிறது.

கவிதைகளை அனுப்ப வயது வரம்பு கிடையாது. ஒரு பக்க அளவில் 24 வரிகளுக்கு மேற்படாமல் கவிதை இருக்க வேண்டும். கவிதை மரபுக் கவிதையாவோ புதுக் கவிதையாகவோ இருக்கலாம். தபாலில் அனுப்ப வேண்டிய முகவரி குறித்து ஏற்கனவே தகவல் வெளியிடப்பட்டது.

இந்நிலையில் கவிதைகளை மின்னஞ்சலில் அனுப்புவோருக்கே என தனியாக மின்னஞ்சல் முகவரி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதற்கமைய தபால் மற்றும் மின்னஞ்சலில் அனுப்புவோர் மே 20ஆம் திகதிக்குள் கவிதைகளை அனுப்பி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மின்னஞ்சல் முகவரி Ulagalaviya kavithaipotti @gmail.com, pothuarangam@gmail.com (2-6)




## இந்திய- இலங்கை மீனவர்களிடையே நல்லுறவை மேம்படுத்த மாநாடு

இந்திய - இலங்கை மீனவர்களிடையே நல்லுறவை மேம்படுத்தும் விதமாக மாநாடு ஒன்றை நடத்த இலங்கை இந்திய மீனவ சமுதாய அடித்தளம் அமைப்பு முடிவு செய்துள்ளது.

சென்னையில் நடந்த இந்த அமைப்புக்கான கூட்டத்தில் இதற்கான தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. அதில் உரையாற்றிய அடித்தளம் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் அந்தோனி முத்து தெரிவிக்கையில்,

இரு நாட்டு மீனவர்களுக்கும் இடையே மீன் பிடிப்பதில் ஏற்படும் பிரச்சினையை களையவே இந்த மாநாடு. மேமாதம் இரண்டாம் வாரத்தில் இலங்கையில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது. அதன் பின்னர் இரு நாட்டு மீனவர்களிடையே பரஸ்பர ஒற்றுமை ஏற்படும்.

இந்த மாநாட்டில் இலங்கை மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த அரசியல் தலைவர்களும் கலந்து கொள்வார்கள் என்று தெரிவித்த அவர் கடல் எல்லைகளில்இந்திய- இலங்கை மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும் என்று ,இரு நாட்டரசுகளிடம் கோரிக்கையும் விடுத்துள்ளார்.

இவ்வாறு அனுமதிக்கப்பட்டால் இராமேஸ்வர மீனவர்கள் சுட்டுக்கொல்லப்படுவதும் இலங்கை மீனவர்கள் கைது செய்யப்படுவதும் எதிர்காலத்தில் தவிர்க்கப்படும் என்று மேலும் கூறினார். (2-6)

## பெண்கள் சிறையில் நித்தியானந்தா அடைப்பு

பொலிஸ் காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்காக நான்கு முறை நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்ட நித்யானந்தா நேற்று முன்தினம் மாலை ராம்நகர் கிளை சிறையில் பெண்கள் பிரிவில் அடைக்கப்பட்டார்.

ராம்நகர் கிளைச் சிறையில் இதுவரை பெண்கள் பகுதி எதுவும் கிடையாது. முதன் முறையாக குற்றம் செய்யும் பெண்களை சிறையில் அடைப்பதற்காக தனி பகுதி உருவாக்கப்பட்டிருந்தது. இந்த தனி சிறையில் தான் நித்தியானந்தா அடைக்கப்பட்டார். பாதுகாப்பு நலன் கருதி ஆண்களை அடைக்கப்பட்டிருக்கும் சிறை பகுதியில் அவர் அடைக்கப்படவில்லை. நித்தியானந்தாவுக்கு சிறையில் வி.ஐ.பி. அந்தஸ்து எதுவும் வழங்கப்படவில்லை. சாதாரண நபர் போன்று தான் கையாளப்பட்டார்.

சிறையில் அடைப்பதற்கு முன் நடந்த விசாரணையில் நீதிபதி நாராயண பிரசாத் கூறுகையில், நித்யானந்தாவுக்கு ஆச்சிரம உணவு வழங்க அனுமதி இல்லை. டாக்டர் கள் என்ன சொல்கின்றனரோ அதன்படி சிறையிலேயே சமைத்த உணவு வழங்கவேண்டும். வெளி உணவுகள் வழங்குவதற்கு அனுமதி கிடையாது என்றார். (2-6)

## உலகிலேயே அதிக செல்வாக்குள்ள நூறு பிரபலங்கள் பட்டியலில் மன்மோகன் சிங், டெண்டுல்கர்



(புதுடில்லி)

உலகத்திலேயே அதிக செல்வாக்கு ள்ள நூறு பிரபலமானவர்களின் பட் டியல் வெளியாகி உள்ளது. அதில் பிரதமர் மன்மோகன்சிங், கிரிக்கெட் ஜாம்பவான் டெண்டுல்கர் உட்பட ஒன்பது இந்தியர்கள் இடம் பெற்றுள்ளனர்.


பிரபல ஆங்கில இதழான டைம் உலகத்திலேயே அதிக செல்வாக்கு உள்ள பிரபலங்களின் பட்டியலை ஆண்டு தோறும் வெளியிட்டு வருகிறது. அதுபோல நடப்பு (2010) ஆண்டில் உலகத்திலேயே அதிக செல் வாக்கு உள்ள நூறு பிரபலமானவர்களின் பட்டியலை அந்த இதழ் அறிவித்தது.

அதில் இந்திய பிரதமர் மன்மோகன்சிங் உலகத்திலேயே செல்வாக்குள்ள தலைவர்களில் பத்தொன்பதாவது இடம் பெற்றுள்ளார். இந்தியாவில் பொருளாதாரத்தை பரவலாக்கி உலக அளவில் அதிக சக்தி வாய்ந்த நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இடம்பெற அவர் திறமையாக வழிநடத்தி செல்கிறார் என்று அவரை தேர்ந்து எடுத்ததற்கான காரணத்தை அந்த இதழ் குறிப்பிட்டுள்ளது.

இந்தியாவின் நீண்ட கால சரித்திரம் பல தலைவர்களை உருவாக்கித்தந்து பெருமை பெற்றுள்ளது. ஆனால் இந்திய ஜனநாயகத்தின் மிகக்குறுகிய வரலாறு ஏற்கனவே பல சிறந்த தலைவர்களை உருவாக்கி விட்டது. அவர்களில் 77 வயதான பிரதமர் மன்மோகன் சிங்கும் ஒருவர் என்று பெப்சி நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியான இந்தியாவைச் சேர்ந்த இந்திரா நூயி டைம் இதழில் மன்மோகன்சிங் பற்றி எழுதியுள்ளார்.

இங்கியாவின் மற்ற எட்டு பிரபலங்களின் பட்டியலில் கிரிக்கெட் உலகின் ஜாம்பவானான 37 வயது சச்சின் டெண்டுல்கர், பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு பெற்ற அமர்தியா சென் கண் டாக்டர் பெருமாள்சாமி, நம்பெருமாள்சாமி, மனிதாபிமான ஊழியர் சஞ்சித் புக்கர்ராய், எழுத்தாளர் சேத்தன் பகத், அமெரிக்காவில் வாழும் இந்திய டாக்டரும் ஹார்வர்டு பல்கலைக்கழக பேராசிரியருமான அதுல் குவாண்டே , அமெரிக்காவில் உள்ள டொரொண்டோ நகரத்தில் வசிக்கும் துணை மருத்துவ இயல் நிபுணர் ராகுல் சிங் , தொழில் அதிபர் கிரன் மஜும்தார் ஷா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

செல்வாக்குள்ள நூறு பிரபலங்களின் பட்டியலில், அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில்கிளின்டன் முதல் இடமும் தற் போதைய ஜனாதிபதி பராக் ஒபாமா 4ஆவது இடமும் பிரேசில் அதிபர் லூலா டா சில்வா 3 ஆவது இடமும் பெற்றுள்ளனர். அமெரிக்கத் துணை ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட்டு சாரா பாலின் ஐக்கிய அரபு எமிரேட் ஜனாதிபதி



ஷேக் கலிபா, பின் ஜெயத் அல் நஹ்யான், ஜப்பான் பிரதமர் யூகியோ ஹடோயாமா, பாலஸ்தீன பிரதமர் சலாம் பயாத் ஆகியோரும் இப்பட்டியலில் உள்ளனர். (2-6)

## அரசியலில் இருந்து ஓய்வு பால்தாக்கரே சூசகம்

(சென்னை)

விரைவில் அரசியலில் இருந்து ஓய்வு பெறப்போவதாக சிவசேனா கட்சித் தலைவர் பால் தாக்கரே சூசகமாக தெரிவித்துள்ளார்.

இந்த கைகள் ஒரு மாதகாலத்தில் மக்களுக்காக உழைத்தன. பின்னர் சமுதாய சீரழிவுகளைக் கண்டித்து குரல் எழுப்பின. அப்படிப் பட்ட கைகள் தற்போது தளர்வடைந்து விட்டன. அடிக்கடி உடல் நலக்குறைவு ஏற்பட்டு விடுகிறது அதுவும் நல்லதுக் என்று நினைப்போம் என்றார். 84 வயதாகும் பால்தாக்கரே வயதாகி விட்டது என்று கூறிவிட்டதன் மூலம் தீவிர அரசியலில் இருந்து விலகப்போவதாக சூசகமாக தெரிவித்துள்ளார். என்றும் கட்சியின் செயலாளராக உள்ள உத்தேவ் தாக்கரேவை தலைவராக்க அவர் திட்டமிட்டுள்ளதாகவும் அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர். (2-6)

## தமிழகத்தில் மருத்துவ சிகிச்சை பெற ஏற்பாடு செய்து தர வேண்டும்
## பிரபாகரனின் தாயார் கலைஞருக்கு கடிதம்

தமிழகத்தில் மருத்துவ சிகிச்சை பெற மலேசியாவில் இருந்து திருச்சி வருவதற்கு இந்திய தூதரகத்தின் மூலமாக ஏற்பாடு செய்து தருமாறு பிரபாகரனின் தாயார் பார்வதி தமிழக முதல்வருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அதில் நான் நீண்ட காலமாக பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு வலது காலும் கையும் செயலற்ற நிலையில் இருந்து வருகிறேன். நான் தமிழகத்தில் இருந்த காலத்தில் முசிறியில் உள்ள டாக்டர் ராஜேந்திரனிடம் வைத்தியம் பெற்று வந்தேன்.

ஆனால் 2003ஆம் ஆண்டு மே மாதம் இலங்கை சென்றதால் தொடர்ந்து வைத்தியம் செய்ய முடியாமல் போய்விட்டது. வன்னியியிலும் இராணுவ முகாமிலும் சரியான மருத்துவ வசதிகள் இல்லாதபடியால் எனது உடல்நிலை மேலும் பாதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் எளிதில் விசா எடுக்க முடியாத சூழ்நிலையில் எனது மகள் வினோதினி ராஜேந்திரன் என்னை மலேசியாவிற்கு வரவழைத்து அங்கு இந்திய விசா பெற்று என்னை சென்னைக்கு ஒரு பெண்ணின் உதவியுடன் அனுப்பி வைத்தார்.

எனது வைத்தியத்திற்கு டாக்டர் ராஜேந்தின் வேறு தகுதி வாய்ந்த மருத்துவர்களையும் ஏற்பாடு செய்வார் என்பதால் தயவு செய்து நான் கோலாலம்பூரில் இருந்து திருச்சிக்கு விமானத்தில் வருவதற்கு மலேசியாவில் உள்ள இந்திய தூதரகத்தின் மூலமாக ஏற்பாடு செய்து தருமாறு அன்போடு வேண்டுகிறேன்.

தங்கள் உதவியை என்றும் மறக்கமாட்டோம். நீங்கள் நீடூழி வாழ வாழ்த்துகின்றேன். இவ்வாறு கடிதத்ததில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடிதத்தின் கீழ் பகுதியில் நன்றியுடன் தங்கள் உடன்பிறப்பு எனக் குறிப்பிட்டு பார்வதியின் கைரேகை பதிக்கப்பட்டுள்ளது. பிரபாகரன் குறித்து கடிதத்தில் ஒரு வார்த்தை கூட குறிப்பிடப்படவில்லை.



மலேசியா தலைநகர் கோலா லம்பூரில் பார்வதி சிகிச்சை பெற்று வரும் டமாய் மருத்துவ மனையில் இருந்து சென்னையில் இயங்கி வரும் மனிதம் என்ற அமைப்பின் செயல் இயக்குனர் அக்னி சுப்பிரமணியம் மூலமாக இந்த கடிதம் தமிழகத்திற்கு வந்துள்ளதா கவும் அவர் மூலமாக கலைஞருக்கு நேற்று முன்தினம் சென்று சேர்க்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (2-6)

# சினிதுளிகள்

விஜய் நடிக்கும் "காவல்காரன்" படத்தில் ஒருவன் "மண்ணைக்காப்பவன் ஒருவன், விண்ணைக் காப்பவன் ஒருவன், என்னை உன்னைக் காக்கும் அவனே அவனே இறைவன்..." என்ற அறிமுகப் பாடல் இடம் பெறுகிறது.

தனுஷ்-தமன்னா ஜோடி நடிக்க, ஹரி இயக்கும் "அருவா" படப் பெயர் மாற்றப்படவுள்ளது.

அறிமுக இயக்குநர் விக்னேஷ் சிவாவின் "போடா போடி" படத்தை அடுத்து லிங்குசாமி இயக்கத்தில் நடிக்கிறார் சிலம்பரசன்.




## திரை விமர்சனம்



# ரெட்டைச்சுழி

பிளேக் அன்ட் வைட் காலத்தில் அரசியலும் காதலும் சேர்ந்து ஒரே கிராமத்தில் எதிர் எதிர் வீட்டில் வசிக்கும் பாலசந்தரையும் பாரதிராஜாவையும் பகைவர்களாக்குகிறது. ஈகோவால் இருவரும் முட்டிக்கொண்டேயிருக்கிறார்கள். பாரதிராஜா குடும்பத்துப் பெண், அஞ்சலியும் பாலசந்தர் குடும்பத்துப் பையன் ஆரியும் காதலிக்க, கிளர்ந்து எழுகிறது கிழட்டு சிங்கங்கள்.

இருவர் அணியிலும் உள்ள வண்டுகளும் பெருசுகள் மாதிரியே மோதிக் கொண்டிருக்கின்றன. ஒரு கட்டத்தில் இரு இளம் உள்ளங்களை இணைத்து வைக்க வண்டுகள் கூட்டம் கூட்டணி அமைக்கிறது. பெருசுகளை அன்பால் அடக்கி, காதலை ஜெயிக்க வைக்கலாம் என்று போராட்டத்தை ஆரம்பிக்கிறது மழலைப்பட்டாளம். வென்றது யார் என்பது மீதிக்கதை.

தமிழ்சினிமாவின் இமயத்தையும் சிகரத்தையும் இணைத்திருப்பதோடு அவர்களை பக்குவமாக பயன்படுத்தியிருப்பதிலும் வெற்றி பெற்றிருக்கிறார் இயக்குநர் தமிரா. கதரோடு பாலசந்தரும் சிவப்போடு பாரதிராஜாவும் நின்று விளையாடியிருக்கிறார்கள். பழைய பகையோடு இரத்தம் சிந்தாமல் இன்றைக்கும் மோதிக் கொண்டிருக்கும் கிராமத்துப் பெரியவர்களை அப்படியே கண் முன் கொண்டு வந்து நிறுத்துகிறார்கள். இவருடைய கரக்டரும் அவரவர்கள், உருவாக்கும் கரக்டர்களின் சாயலிலே அமைந்திருப்பது கச்சிதம்.

செத்துப் போய்விட்ட காதலியை நினைத்து பிரமச்சாரியாகவே வாழும் பாரதிராஜாவும் வறட்டுக் கௌரவத்துக்காக வாழ்ந்து சின்னக் குழந்தையின் ஒற்றை வார்த்தைக்காக கௌரவத்தை தூக்கி எறியும் பாலசந்தரும் அவர்கள் பாணி கரக்டராகவே வாழ்ந்திருப்பார்கள்.

நான் காதலிக்கிறதா வாய்விட்டுத்தான் சொல்லணுமா... என் கண்ணைப் பார்த்தா தெரியல? என்று கேட்கும் கிராமத்து டீச்சராகவே அஞ்சலி அசத்துகிறார். பெருசுகளுக்கு பயந்து காதலை மறைப்பதும் யாரும் இல்லாத நேரத்தில் உருகுவதுமாக கிராமத்து காதலை கண்ணியப்படுத்துகிறார்.


புதுமுகம் ஆரி மிடுக்கான பட்டாளத்துக்காரராக அறிமுகமாகி அப்புறம் காதலுக்காக விஆர்எஸ் கொடுத்துவிட்டு வந்து நிற்கிறார். நடிப்பதற்கு வாய்ப்புக் குறைவாக இருந்தாலும் கொடுத்ததை நிறைவாக செய்திருக்கிறார்.

சிரிப்பு பொலிஸாக வந்து கலகலப்பூட்டுகிறார் கருணாஸ். அவங்க பார்டர் பொலிஸ். நாங்க நாட்டு மிலிட்டரி என்று இராணுவத்தினரோடு அவர் காட்டும் ஈகோ, கலகல காமெடிரகம். குழந்தை நட்சத்திரங்களை யதார்த்தமாகவும் கலகலப்பாகவும் பயன்படுத்தி யிருக்கிறார்கள். 'என்ன தோழரே' என்ற பாரதிராஜாவை கலாய்க்கும் அட்சை கவனம் ஈர்க்கிறார்.

வன்முறை இல்லாத பகைமை, சின்ன குழந்தைகளின் வெள்ளந்தி மனசு, பிடிவாதத்தை பிடித்துக்கொண்டு வாழும் கிராமத்து வீராப்பு என்று புதுவண்ணம் பூசியிருக்கிறார் இயக்குநர் தாமிரா.

ஆனாலும் காட்சிகளை அடுக்கி கதை சொல்லும் பழைய பாணி நெளிய வைக்கிறது. கிளைமாக்ஸ் கல்யாணக் காட்சி உட்பட பல இடங்களில் நாடக வாசனை. 40வருட பகையாளிகள் ஒன்று சேரும் இடம் மனதை நெகிழ வைக்க வேண்டாமா? குழந்தைகள் லெட்டர் போட்டதும் ஹீரோ தன் கிராமத்திலேயே மிலிட்டரி காம்ப் போடுவதிலும் காதலுக்காக விஆர்எஸ் கொடுப்பதிலும் லொஜிக் மிஸ்சிங்.

மொத்தத்தில் "ரெட்டைச்சுழி" -கிழட்டு சிங்கங்களின் விளையாட்டு!



# போனிவர்மாவை மணக்கிறார் பிரகாஷ்ராஜ்



மனைவி லலிதா குமாரியுடனான விவாகரத்து வழக்கு முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து தனது காதலியும் நடன இயக்குநருமான போனி வர்மாவை திருமணம் செய்யவிருக்கிறார் நடிகர் பிரகாஷ்ராஜ். வித்தியாசமான வில்லத்தனத்தால் தமிழ் ரசிகர்களை மட்டுமல்லாது, தெலுங்கு, மலையாளம், இந்தி ரசிகர்களை கவர்ந்தவர் நடிகர் பிரகாஷ்ராஜ்.

சினிமாவில் நடிப்பதோடு மட்டுமல்லாமல் படங்கள் தயாரிப்பிலும் ஆர்வம் காட்டி வரும் பிரகாஷ்ராஜ் வாழ்க்கையில் புயலை புகுந்தவர் போனி வர்மா. பாலிவுட்டின் பிரபல டான்ஸ் மாஸ்டரான போனி வர்மா, பிரகாஷ் ராஜுடன் இணைந்து சில படங்களில் பணியாற்றியுள்ளார்.

அப்போது அவர்களுக்குள் உருவான நட்பு காதலாக மாறியது. இதனால் தனது காதல் மனைவியான லலிதா குமாரியை விவாகரத்து செய்யும் முடிவுக்கு வந்த பிரகாஷ்ராஜ், அதற்காக நீதிமன்றப் படியேறினார். எதிர்பார்த்தபடியே விவாகரத்தும் கிடைத்தது. இதையடுத்து காதலி போனி வர்மாவை, பிரகாஷ்ராஜ் திருமணம் செய்து கொள்ளப் போவதாக செய்தி வெளியானது. முதலில் இதனை மறுத்து வந்த பிரகாஷ்ராஜ், இப்போது தனது திருமணம் பற்றிப் பேசத் தொடங்கியிருக்கிறார்.

# இனி தமிழில் அசத்துவேன்.. ஐஸுக்கு 'ராவணன்' தந்த நம்பிக்கை!



இயக்குநர் மணிரத்னத்தின் "ராவணன்" மூலம் கிடைத்த அனுபவத்தால் இனி தமிழிலும் அசத்த முடியும் என்ற நம்பிக்கை வருவாகியிருக்கிறது என்கிறார் முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யாராய்.

இந்தியில் 'ராவண்' தமிழில் 'ராவணன்' என்ற பெயர்களில் வெளிவரும் படத்துக்காக ஒரே நேரத்தில் இரண்டு மொழிகளிலும் நடித்த அனுபவம் குறித்து பேட்டியளித்த ஐஸ்வர்யாராய், "எனக்கு மிகுந்த நடுக்கமாகவே இருந்தது. இறுதித் தேர்வு எழுதி விட்டு ரிசல்டுக்கு காத்திருப்பது போன்ற அனுபவம் அது.

மணிரத்னம் சில சமயம் கடைசி நிமிடத்தில் காட்சிகளை மாற்றி விடுவார். டயலொக்கை தமிழ், இந்தி என இரண்டிலும் மனப்பாடம் செய்வதற்கு சிரமப்பட்டு விடுவேன். விக்ரம் உள்ளிட்ட சக நடிகர்கள் மூலமும் தமிழை நன்றாக கற்றுக் கொள்ள முடிந்தது.

முடிவில், அடுத்தடுத்து தைரியமாக நிறைய நல்ல தமிழ்ப் படங்களில் நடிப்பதற் குரிய நம்பிக்கையை "ராவணனும்" மணிரத்னமும் தந்திருக்கின்றனர் என்கிறார் குதூகலத்துடன்.

ராவணனில் தனது கதாபாத்திரம் பற்றி குறிப்பிடுகையில், "என் கதாபாத்திரத்தின் பெயர் ராகினி. அவர் தைரியமானவள், உணர்வுபூர்வமானவள், மொத்தத்தில் முழுமையான பெண். அந்தக் கதாபாத்திரத்துடன் என்னால் பொருந்திப் போக முடிந்தது" என்று விவரிக்கிறார்.

இந்தி "ராவணன்" அபிஷேக் பச்சனுக்கு ஜோடியாகவும், தமிழ் ராவணன் விக்ரமுக்கு ஜோடியாகவும் வலம் வரும் ஐஸ்வர்யாராய் தற்போது ரஜனி - ஷங்கர் கூட்டணியில் உருவாகி வரும் எந்திரனில் பிஸியாக இருக்கிறார். அதைத் தொடர்ந்து, தமிழில் தொடர்ந்து நடிப்பது என முடிவெடுத்திருக்கிறாராம் ஐஸ்.

# இலங்கை சர்வதேச இந்திய திரைப்பட விழாவை புறக்கணித்த சுப்பர் ஸ்டார்கள் !



இலங்கையில் நடக்கவிருக்கும் சர்வதேச இந்தியத் திரைப்பட விழாவில் அமிதாப் குடும்பத்தினர் பங்கேற்கமாட்டார்கள் என்பது தெரியவந்துள்ளது. அவர்களின் இந்த முடிபுக்கு சுப்பர் ஸ்டார் ரஜினி முக்கிய காரணம் என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த விவகாரத்துக்கே பிள்ளையார் சுழி போட்டவர்கள் தமிழ்த் திரையுலகின் இருபெரும் கலைஞர்களான ரஜினியும் கமலும்தான். இலங்கைத் தூதரகத்திலிருந்து அழைப்பிதழ் என்ற தகவல் தெரிந்ததுமே அதனை எடுத்த எடுப்பில் நிராகரித்தவர்கள் இவர்களே. அதன் பின்னர் தான் மற்ற நடிகர்கள், கலைஞர்கள் இதனை விசேஷமாக நோக்கினர்.

இந்த உண்மை தெரிந்ததும் வைகோ, பழநெடுமாறன், சீமான் உள்ளிட்டோர் ரஜினிக்கும் கமலுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டதுடன் இந்த விவகாரத்தை பெரிதாக முன்னெடுத்தனர். சீமானின் நாம் தமிழர் இயக்கம் மும்பையில் அமிதாப் வீடுகளை முற்றுகையிட, அவரும் பிரச்சினையின் தீவிரத்தை உணர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்களை அழைத்துப் பேசினார். தமிழர் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் விதத்தில் முடிபெடுப்பேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், பிரச்சினையின் தீவிரத்தை உணர்ந்த அமிதாப், தனது நெருங்கிய நண்பரான ரஜனியிடம் இதுகுறித்து விரிவாக பேசியதாகக் கூறப்படுகிறது. அப்போது அமிதாப் மற்றும் ஐஸ்வர்யாராய் மீது தமிழ் இரசிகர்கள் வைத்துள்ள மதிப்புக்குறித்து ரஜினி எடுத்துக்கூறினாராம். குறிப்பாக ஐஸ்வர்யாராய் இந்தநேரத்தில் கொழும்பு செல்வது எத்தகைய வினைவுகளை தமிழகத்தில் ஏற்படுத்தும் என்றும் விளக்கியுள்ளார்.

இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை, வன்னிப் போரின் போது இங்கு திரையுலகம் மேற்கொண்ட போராட்டங்கள் குறித்தும் ரஜினி கூறியதாகத் தெரிகிறது. மேலும் மணிரத்னம் தரப்பிலும் ஐஸ்வர்யாராய்க்கு பிரச்சினையின் தன்மையைப் புரிய வைத்துள்ளனர். இதன் விளைவாக அமிதாப் குடும்பத்தினர் கொழும்பு விழாவுக்கு செல்லாமல் புறக்கணிப்பது கிட்டத்தட்ட உறுதியாகியுள்ளது.

இந்த விழாவில்சிறப்புக் காட்சியாக கொழும்பில் இளராவணன் படத்தைத் திரையிட திட்டமிட்டிருந்த மணிரத்னம், இப்போது அதனைக் கைவிட்டுள்ளார். இலங்கை விழாவுக்கும் இளராவணன் படத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று அவரது அலுவலகம் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# விஜய் படத்தில் நடிக்க மறுத்த தியாகராஜன்




நயன்தாரா அப்பாவாக தியாகராஜன் நடித்த மலையாள படம் பாடி கார்ட். தமிழில் அவரது வேடத்தை ராஜ்கிரண் ஏற்றுள்ளார். முதலில் தியாகராஜனையே நடிக்க கேட்டார்களாம். பிரசாந்த் இரு வேடங்களில் நடிக்கும் பொன்னர் சங்கர், மம்பட்டியான் படங்களை இயக்கி தயாரிப்பதால் நடிக்க மறுத்து விட்டாராம். "பல மொழிகளில் நடிக்க கேட்கிறார்கள். கடைசியாக துரோகி படத்தில் நடித்து முடித்துள்ளேன். டைரக்ஷனில் பிஸியாக இருப்பதால் நடிப்பதை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளேன் என்றார்.

# டில்லியில் இருக்கும் அமெரிக்கர்கள் மிகவும் உசாராக இருக்க வேண்டும்

## அமெரிக்கா எச்சரிக்கை

(வோஷிங்டன்)



டில்லியில் தங்கி இருக்கும் அமெரிக்கர்கள் உஷாராக இருக்க வேண்டும் என மீண்டும் ஒரு முறை அமெரிக்க எச்சரித்துள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஏப்ரல் 21ஆம் திகதி ஒரு அமெரிக்க வெள்ளை மாளிகை வட்டாரம் இந்தி யாவில் குண்டு வெடிக்கும் அபாயம் இருப் பதாக செய்தி வெளியிட்டது. குறிப்பாக டில்லியில் மக்கள் நடமாட்டம் உள்ள சந்தைப் பகுதியில் இந்த தாக்குதல் இருக்கும் என்றும் தெரிவித்திருந்தது.

நேற்று மீண்டும் ஒரு முறை எச்சரித்துள்ளது. இதன்படி அமெரிக்க நாட்டவர்கள் தங்களை பாதுகாத்து கொள்ளவும் உள்ளூர் செய்தி போக்கை தெரிந்து கொள்ளவும் அறிவுறுத்தியுள்ளது.

டில்லியில் சாந்தினி சவுக், கனாட்டபலஸ், கிரேட்டர் கைலாஸ், கரோல்பாக், சரோஜினி நகர், மெக்ராலி உள்ளிட்ட பகுதிகளில் இந்த தாக்குதல் இருக்கும். குறிப்பாக உலக அளவில் கொண்டு செல்லும் அளவிற்கு இந்த தாக்குதலை நடத்த பயங்கரவாதிகள் திட்டமிட்டிருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கன்வே அவுஸ்திரேலியாவும் கனடாவும் இது போன்று தங்களுடைய நாட்டவர்கள் இந்தியா செல்ல வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டுள்ளது. அமெரிக்காவின் இந்த எச்சரிக்கையை அடுத்து டில்லியில் பலத்த பாதுகாப்புக்கு உத்தரவிட்டுள்ளது.

இதற்கிடையில் காஷ்மீர் பகுதியில் நுழைய முயன்ற பயங்கரவாதிகளை இந்திய எல்லையோர பாதுகாப்பு படையினர் துப்பாக்கியால் சுட்டு விரட்டினர். அங்கு இருந்த பாக் இராணுவத்தினரும் இந்திய் படையினரை நோக்கி சுட்டுள்ளனர்.

பயங்கரவாதிகள் 3 பேர் கொல்லப்பட்டனர். இந்திய படையினர் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. (2-6)

# இந்திய எல்லையில் இருந்து ஒரு இலட்சம் பாக்.படை வீரர்கள் ஆப்கான் எல்லைக்கு மாற்றம்

பாகிஸ்தான் கிழக்கு பகுதியில் இந்திய எல்லையில் தனது படையை குவித்து வைத்துள்ளது. தற்போது அங்கிருந்து ஒரு இலட்சம் இராணுவ வீரர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். அவர்கள் மேற்கு பகுதியில் உள்ள ஆப்கானிஸ்தான் எல்லைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

தற்போது பாகிஸ்தானில் உள் நாட்டு தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் அதிகரித்துள்ளது. அல்கொய்தா பாகிஸ்தான் தலிபான்கள் லஸ்கர் இ தொய்பா என 3 தீவிரவாத அமைப்புகள் கூட்டணி அமைத்துள்ளன. இவர்களுடன் குவெட்டா சுரா, தலிபான் ஹெஷ்ப் -இ இஸ்லாமி குல்புதீன், ஹப்பி நெட்வொர்க் போன்றவற்றின் தீவிரவாதிகளும் சேர்ந்துள்ளனர். இவர்கள் ஆப்கானிஸ்தானில் இருந்து பாகிஸ்தானுக்குள் ஊடுருவி தீவிரவாத நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். எனவே ஆப்கானிஸ்தானில் இருந்து பாகிஸ்தானுக்குள் ஊடுருவுவதை தடுக்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த தகவல் அமெரிக்காவின் இராணுவ மையமான பென்டகன் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. மேலும் அதில் கூறியிருப்பதாவது,

ஆப்கானிஸ்தானில் பாதுகாப்பும் ஸ்திரத்தன்மையும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அதே வேளையில் பாகிஸ்தான் மலை பகுதியில் தலிபான் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையில் 1இலட்சத்து 30 ஆயிரம் இராணுவ வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று அதில் கூறப்பட்டுள்ளது. (2-6)

# அரசியல் கட்சி தொடங்குகிறார் பாகிஸ்தான் முன்னாள் அதிபர்




பாகிஸ்தான முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷாரப் அரசியல் கட்சி ஒன்றை தொடங்க திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அதிபர் பதவியிலிருந்து விலகியவுடன் லண்டன் சென்றுவிட்டார். அங்கிருந்தபடியே பல்வேறு நாடுகளுக்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார்.

இந்நிலையில் அவரது ஆட்சிக் காலத்தில் எடுத்த சில முடிபுகள் தொடர்பாக அவர் மீது வழக்குகள் பாய்ந்ததும் அதிலிருந்து தம்மை பாதுகாத்துக்கொள்ள மீண்டும் பாகிஸ்தானுக்கு திரும்பி அரசியல் கட்சியை தொடங்கப்போவதாக ஒரு செய்தியை பரவ விட்டார்.

இந் நிலையில் அவர் மீதான வழக்கு விவகாரங்கள் அமுங்க தொடங்கியதும் கட்சி தொடங்கும் திட்டத்தையும் கிடப்பில் போட்டார். ஆனால் தற்போது பாகிஸ்தானில் தற்போதுள்ள சர்தாரி ஆட்சி மீது மக்கள் மத்தியில் அதிருப்தி நிலவுகிறது. இதனால் இப்போது அரசியல் கட்சி தொடங் கினால் பெரும்பாலான மக்கள் தனக்கு ஆதர வாகி விடுவார்கள் என்றும் முஷரப் கருதுவதாக கூறப்படுகிறது. இதனை உறுதிப்படுத்தும் விதமாக தனிக்கட்சி தொடங்குவதற்காக தனது சார்பில் தேர்தல் ஆணையத்திடம் தமது சார்பில் முஷாரப் மனு கொடுத்துள்ளதாக முஷாரப்பின் சட்ட ஆலோசகர் முகமது அலி சயீப் தெரிவித்துள்ளார்.(-26)




# உடல் எடை கூடிய அமெரிக்கர்களினால் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்



உடல் எடை கூடிய அமெரிக்கர்களினால் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. அண்மைக்காலமாக அமெரிக்காவின் இளைய தலை முறையில் அதிகமானோர் மித மிஞ்சிய உடல் எடையுடன் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இவ்வாறு அதிக உடற் ப்ருமனுடன் காணப்படுபவர்களை யுத்த நடவடிக்கையில் ஈடுபடுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக அமெரிக்காவின் இரண்டு சிரேஸ்ட ஜெனரல்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதனால் எதிர்வரும் காலங்களில் அமெரிக்க பாதுகாப்புப் படையை பலப்படுத்த போதியளவு ஆளணி வளத்தை திரட்டுவதில் சிக்கல் நிலைமை ஏற்படக் கூடுமென சுட்டிக்காட்டப்படுகிறது.25 வீதத்திற்கும் அதிகமான அமெரிக்க இளைஞர், யுவதிகள் உடற்பருமனுடையவர்களாகக் காணப்படுகின்றனர். இதனால் அமெரிக்கப் பாடசாலைகளில் போசாக்கான உணவுப் பழக்கவழக்கத்தை ஊக்குவிக்கும் வகையிலான சட்டங்கள் உருவாக்கப்படவேண்டுமென கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இனிப்பு, உப்பு மற்றும் கொழுப்பு செறிந்த உணவுப் பொருட்களை அதிகமாக உட்கொள்வதனை தடுக்க வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சிறுவர் போசாக்கு தொடர்பில் உடனடியாக சட்ட மூலமொன்றை நிறைவேற்ற வேண்டுமென அமெரிக்காவின் முன்னாள் இராணுவ ஜெனரல்கள் இருவர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இரண்டாம் உலகப் போரின் போது நாட்டில் அமுல்படுத்தப்பட்ட சட்ட திட்டங்கள் மீளவும் அமுல்படுத்தப்படவேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எதிர்வரும் நாளில் எமது குழந்தைகள் இந்த நாட்டை பாதுகாக்க வல்லமை உடையவர்களாக காணப்படவேண்டியது மிகவும் இன்றியமையாதென அவர்கள் கோரியுள்ளனர். (2-6)

# பிரிட்டன் தேர்தல் ஆளும் கட்சி தேறுமா?

(லண்டன்)

பிரிட்டனில் நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் ஆளும் தொழிலாளர் கட்சி வெற்றி பெற வாய்ப்பில்லை என கருத்து கணிப்புகள் தெரிவிக்கின்றன.

பிரிட்டன் பாராளுமன்ற தேர்தல் எதிர்ப்பு வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது. ஆளும் தொழிலாளர் கட்சி சார்பில் பிரதமர் கார்டன் பிரவுனும் எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கட்சி சார்பில் டேவிட் கேமரூனும் ஜனநாயக விடுதலை கட்சி சார்பில் நிக்லெக்கும் போட்டியிடுகின்றனர். ஒரே மேடையில் தங்கள் கருத்துக்களை இந்த தலைவர்கள் விவாதித்தனர்.

கடந்த வியாழக்கிழமை மூன்றாவது சுற்று விவாதம் நடந்தது. பொருளாதார நிலையை நிலைநிறுத்த கார்டன் பிரவுன் சரியாக செயல்படவில்லை என டேவிட் கேமரூன் குறை கூறி பேசினார். டேவிட்டுக்கு சரியான பதிலடி கொடுக்க முடியாமல் பிரதமர் கார்டன் பிரவுன் திணறினார்.

நடைபெறவுள்ள தேர்தலில் கார்டன் பிரவுனின் தொழிலாளர் கட்சிக்கு அதிக வரவேற்பிள்ளை என கன்சர்வேடிவ் கட்சி சார்பில் டேவிட் கேமரூன் பிரதமராகும் வாய்ப்புள்ளது அல்லது தொங்கு பார்லிமெண்ட் அமையக்கூடும் என கருத்து கணிப்புகள் தெரிவிக்கின்றன. (6)

# மெக்ஸிகோ வளைகுடாவில் கசிந்து வரும் எண்ணெயால் பாதிப்பு

அமெரிக்காவின் மெக்ஸிகோ வளைகுடா கடல் பகுதியில் கடலில் கசிந்து வரும் எண்ணெய் லுயுசியான மாகாணக் கடலோரப் பகுதிகளில் கடலோரப் பகுதிகளில் கரை ஒதுங்க ஆரம்பித்துள்ளது.

தற்போது ஒதுங்கிவருவதைவிட மேலும் அடாத்தியான எண்ணெய்த் திட்டு கரையோரத்தில் இருந்து எட்டு கிலோமீற்றர் தூரம் வரை நெருங்கிவிட்டது. கடலடியில் இருந்து எண்ணெயைத் தோண்டியெடுக்கும் இயந்திர மேடை கடந்த வாரம் வெடித்து கடலில் மூழ்கியதிலிருந்து குழாய் உடைப்பெடுத்து கடலில் எண்ணெய் கசிந்து வருகிறது.

மெக்ஸிகோ வளைகுடா பகுதி கரையோரம் என்பது சுற்றுச்சூழல் ரீதியில் எளிதில் பாதிக்கப்படக்கூடிய ஒரு இடமாகும். மீன் வளம் மிக்க இந்தப் பகுதி அமெரிக்காவின் கடலுணவு வழங்கும் முக்கிய பிரதேசமாகவும் விளங்குகிறது. எண்ணெய் திட்டால் கரையோரப் பகுதியில் பாதிப்பு ஏற்படுமானால் மீன்பிடித் தொழில் துறையும் கணிசமாகப் பாதிக்கப்படும்.

குழாய் உடைப்பிலிருந்து ஒரு நாளைக்கு ஐயாயிரம் பீப்பாய்கள் என்ற அளவில் தொடர்ந்து எண்ணெய் கடலில் கசிந்து வருகிறது என்பது அந்தக் கசிவைத்தடுத்து நிறுத்துவது என்பது பெருங்கஷ்டம் என்றும் பிபிசி செய்தியாளர் கூறுகிறார்.

எண்ணெய்க் கசிவு ஏற்படும் இடத்தை அடைத்து கசிவை முழுமையாகத் தடுத்து நிறுத்துவதற்கு நாற்பத்து ஐந்து முதல் தொண்ணூறு நாட்கள் வரை ஆகலாம் என்று இந்த எண்ணெய் தோண்டியெடுக்கும் மேடையை குத்தகைக்கு எடுத்து நடத்தும் நிறுவனமான பிரிட்டிஷ் பெற்றோலியம் கூறுகிறது.

எண்ணெய்த் திட்டு பரவாமல் தடுக்கும் வேலைகளில் அமெரிக்க கடற்படைப் படகுகளும் ஈடுபட்டுள்ளன. வழங்கப்படக்கூடிய அனைத்து உதவிகளையும் வழங்கி உள்நாட்டு பாதுகாப்புக்கான அரசாங்க செயலர் உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகளும் இப்பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள் என அதிபர் ஒபாமா உறுதியளித்துள்ளார்.

இந்தப் பிரச்சினையின் எதிரொலியாக மெக்ஸிகோ வளைகுடாவில் மற்ற இடங்களில் ஆழ்கடலில் இருந்து எண்ணெய் எடுக்கும் வேலைகளையும் அமெரிக்க அரசாங்கம் நிறுத்தச் சொல்லி உத்தரவிட்டுள்ளது. (6)

# தலிபான் தலைவர் உயிருடன் இருக்கிறார் பாகிஸ்தான் உளவுப்படை புதிய தகவல்

அமெரிக்க ஏவுகணை தாக்குதலில் பலியானதாக கருதப்படும் தலிபான் தலைவர் உயிருடன் இருப்பதாக பாகிஸ்தான் உளவுப் படை கூறியுள்ளது.

தலிபான் தலைவர் பைதுல்லா மெசுத்துக்கு பிறகு அந்த இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றவர் ஹகி முல்லா மெசுத். இவர் இந்த ஆண்டின் தொடக்கத்தில் பாகிஸ்தானில் அமெரிக்கா நடத்திய ஏவுகணை தாக்குதலில் பலியானதாக கருதப்பட்டது. பாகிஸ்தான் உளவுப்படையான ஐ.எஸ்.ஐ.யும் இத்தகவலை தெரிவித்திருந்தது.

இந்நிலையில் ஹகிமுல்லா மெசுத் உயிருடன் இருப்பதாக ஐ.எஸ்.ஐ. தெரிவித்துள்ளது. தலிபான் இயக்கத்துக்குள்ளேயே ஐ.எஸ்.ஐ.க்கு உளவு சொல்பவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சொன்ன தகவல்கள் மற்றும் ராடார் உள்ளிட்ட கண்காணிப்பு சாத னங்களில் கிடைத்த விபரங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த முடிவுக்கு வந் துள்ளது. இத்தகவலை ஐ.எஸ்.ஐ. அதிகாரி கள் 4 பேர் தெரிவித்தனர்.

அதே சமயத்தில் தலிபான் இயக்கத்தில் ஹகிமுல்லா தொடர்ந்து மாபெரும் சக்தியாக திகழ வாய்ப்பு இல்லை என்றும் அவரை வலியுர் ரகுமான் உள்ளிட்ட இதர தலிபான் தளபதிகள் ஓரம் கட்டிவிட்டதாகவும் ஒரு உயரதிகாரி தெரிவித்தார்.

இதற்கிடையே ஹகிமுல்லா உயிருடன் இருப்பதாக கூறப்படுவது குறித்து அமெரிக்க இராணுவ தலைமையமான பென்டகன் செய்தித் தொடர்பாளர் ஜயோப் மோரலிடம் நிருபர்கள் கேட்டனர்.

அதற்கு அவர் தலிபான் இயக்கத்தை வழி நடத்திச் செல்லும் நிலையில் இல்லை. இவ்வாறு அவர் கூறினார். (2-6)

# கிளி.கிருஸ்ணர் கோவிலில் பூசை வழிபாடுகளை மேற்கொள்ள உதவவும்

## பரிபாலனசபையினர் வேண்டுகோள்

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றான கிளிநொச்சி அருள் மிகு கிருஷ்ணர் ஆலயத்தைத் திறந்து பூசை வழிபாடுகளை மேற்கொள்ளவும். ஆலயத்திற்கு அருகிலுள்ள பிரபலமான சமய நிறுவனமான கிளிநொச்சி திருநெறிக் கழக காணி கட்டத்தையும் கழக நிர்வாகத்திடம் கையளிக்குமாறும் கிருஷ்ணர் ஆலய பரிபாலன சபையின் செயலாளர் கிளிநொச்சி அரச அதிபர், கரைச்சி பிரதேச செயலரையும் இந்து சமய திணைக்களத்தையும் கேட்டுக் கொண்டுள்ளார்.


இவ்வாலய சுற்றாடலில் படைத்தரப்பு நிலை கொண்டுள்ளது. அவ்வாறே திருநெறிக் கழக காணி கட்டமும் படையினர் வசமாக உள்ளது. பொது மக்களது அயல் காணிகளிலும் படையினர் தங்கியுள்ளனர்.

இக்காணிகளும் இதுவரை கையளிக்கப்படவில்லையெனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. கிளிநொச்சியில் முருகன் ஆலயம், பழைய பஸ் நிலைய பிள்ளையார் ஆலயம் மற்றும் முறிகண்டி பிள்ளையார் ஆலயம் முதலானவை பூசை வழிபாட்டிற்கு படைத்தரப்பால் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் கிளிநொச்சி கிருஷ்ணர் ஆலயத்தையும் பரிபாலன சபையிடம் கையளித்து பூசை வழிபாட்டிற்கு ஏற்பாடு செய்ய முன்வருமாறு இவ்வாலய பரிபாலனசபை கேட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (2-6)

# அடுத்த உள்ளூராட்சிமன்ற தேர்தல் புதிய முறைமைக்கமையவே நடைபெறும்

## லக்ஸ்மன் யாப்பா தெரிவிப்பு



(கொழும்பு)

அடுத்த உள்ளூராட்சி மன்ற தேர்தல் புதிய தேர்தல் முறைமைக்கு அமையவே நடைபெறும். உள்ளூராட்சிமன்ற தேர்தல் முறைமையை மாற்றியமைப்பதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம் இல்லை என்று பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தல் குறித்து தகவல் வெளியிடுகையிலேயே பிரதியமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார். அவர் இவ்விடயம் குறித்து மேலும் கூறுகையில்,

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தல் பெரும்பாலும் புதிய தேர்தல் முறைமையிலேயே நடைபெறும் சாத்தியம் உள்ளது. காரணம் எந்தத் தேர்தலிலும் விருப்பு வாக்கு முறைமை இருப்பதை மக்கள் விரும்பவில்லை.

எனவே உள்ளூராட்சி தொகுதி முறைமையின் அடிப்படையிலேயே இந்த தேர்தல் நடைபெறும். மக்களுக்கு நேரடியாக பொறுப்புக்கூறக்கூடிய பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது. எனவே அதற்கான சந்தர்ப்பத்தை அமைத்துக்கொடுக்க வேண்டும்.

இங்கு முக்கியமான விடயம் என்னவெனில் உள்ளூராட்சிமன்ற தேர்தல் முறைமையை மாற்றியமைப்பதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியமில்லை.

எனவே அதனை மேற்கொள்வதில் அரசாங்கத்துக்கு தடையிருக்காது. காரணம் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு அரசாங்கத்துக்கு தற்போது 144 ஆசனங்கள் உள்ளன என்றார். (2-6)

# தாவரங்களில் இருந்து வைரஸ் கொல்லி மருந்து

சென்னை மாநிலக் கல்லூரியின் மைக்ரோ பயாலஜி மற்றும் பயோடெக்னாலஜிதுறை சார்பில் தாவரங்களிலிருந்து சின்னம்மை, அக்கி, ஹெர்பிஸ், பால்வினை நோய்களுக்கு வைரஸ் கொல்லி மருந்து கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகிறது. இதற்காக இதில் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை ஒரு கோடியே 80 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கியுள்ளது.

மாநிலக் கல்லூரி, மைக்ரோ பயாலஜி மற்றும் பயோ டெக்னாலஜி துறை, தமிழக கால் நடை மற்றும் விலங்கு அறிவியல் பல்கலைக் கழகம், தேசிய ஒருங்கிணைந்த மருத்துவக் கழகம், அரவிந்த் மருந்துக் கம்பனி இணைந்து நடத்தவுள்ள இந்த ஆராய்ச்சிக்கான ஒப்பந்தம் சென்னையில் நேற்று முன்தினம் கையெழுத்தானது.

நிகழ்ச்சியில் அறிவியல் தொழில்நுட்பத் துறை ஆலோசகர் சமாதானம் கூறியதாவது,

நம்நாட்டு உள்ளூர் பிரச்சினைக்கு பன்னாட்டு நிறுவனங்களை நாம் சார்ந்திருக்கக் கூடாது. நம் நாட்டில் ஏற்படும் நோய்களுக்கு மருந்து கண்டுபிடிக்கும் முயற்சியில் நாம் ஈடுபட வேண்டும். இன்னும் இரண்டு, மூன்று ஆண்டுகளில் இந்திய மருந்துகள் உலக சந்தையில் பிரபலமடையும். மாநிலக் கல்லூரியில் மேற்கொள்ளப்படும் ஆய்வு குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மத்திய அறிவியல் தொழில் நுட்பத் துறையின் நிதியுதவியுடன் பெருங்குடலில் ஏற்படும் புற்று நோய்க்கு மருந்து கண்டுபிடிக்கும் முயற்சி நடந்து வருகிறது. புற்றுநோயால் இறக்கும் நிலையில் உள்ள நோயாளி இம் மருந்தை உட்கொண்டால் எட்டு வாரம் உயிர் வாழலாம்.

தற்போது இம்மருந்து மனிதர்களிடம் இரண்டாம் கட்ட சோதனை நிலையில் உள்ளது என்றார். (6)

# முச்சக்கரவண்டி ரயிலுடன் மோதி வயோதிபப் பெண் பலி

## நீர்கொழும்பில் சம்பவம்

(கொழும்பு)

நீர்கொழும்பு கட்டுவ பகுதியில் ,பாது காப்பற்ற ரயில் கடவை ஒன்றில் முச்சக்கரவண்டியொன்று ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் வயோதிபப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். விபத்தில் மேலும் 2 பேர் காயமடைந்து நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் குறிப்பிடுகின்றது.

சம்பவத்தில் 64 வயதுடைய வயோதிபப் பெண்ணொருவரே உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த விபத்து நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றதுடன் விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான முச்சக்கர வண்டி சாரதி கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கொழும்பு கோட்டையிலிருந்து மாதம்பை நோக்கிப் பயணித்த ரயிலுடனேயே முச்சக்கர வண்டி மோதி விபத்துக்குள்ளானது. (ச-3)

# மரமுந்திரிகை பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதற்கான புதிய திட்டம்

(கொழும்பு)

நாட்டின் மரமுந்திரிகை உற்பத்தியை மேம்படுத்துவதற்காக புதிதாக 50 ஆயிரம் ஏக்கரில் புதிதாக மரமுந்திரிகை பயிர் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஒரு ஏக்கருக்கு வழங்கப்பட்டு வந்த மானியத் தொகை 9 ஆயிரத்து 500 ரூபாவில் இருந்து 25 ஆயிரம் ரூபாவாக மரமுந்திகைக் கூட்டுத்தாபனம் அதிகரித்துள்ளது.

இதன் முதல் கட்டமாக அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 60 ஆயிரம் மரமுந்திரிகைக் கன்றுகள் பயிர்ச்செய்கையாளர்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டன.

ஒரு வருடத்துக்கான நாட்டின் மரமுந்திரிகைத் தேவை 14 ஆயிரம் மெட்ரிக் தொன் ஆகும். எனினும் தற்போதைய உற்பத்தி 12 ஆயிரம் மெட்ரிக் தொன் ஆகும். நாட்டுக்குத் தேவையான முழுமையான உற்பத்தியை 2016 ஆம் ஆண்டளவில் பெறுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. (2-6)

# பிறிமா கோதுமை மாவின் விலையை உயர்த்த அந்நிறுவனம் தீர்மானம்

(கொழும்பு)

பிறிமா கோதுமை மாவின் விலையை உயர்த்துவதற்கு அந்த நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் பிறிமா கோதுமை மாவின் விலை 3 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந் நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். முன்னதாக பிறிமா கோதுமை மாவின் விலை ஒரு கிலோ 52 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. புதிய விலை அதிகரிப்பின் படி கோதுமைமா ஒரு கிலோ 58.55 ரூபாவாக விநியோகிக்கப்படவுள்ளது.

எனினும் சந்தையில் பிறிமா கோதுமை மாவின் விலை நிலையாக காணப்படுவதில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்படி வர்த்தகளால் கோதுமை ஒரு கிலோ கிராம் 55 - 57 மற்றும் 60 ரூபாய்களாக விநியோகிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அதேவேளை செரண்டிப் நிறுவனமும் கோதுமைமாவின் விலையை நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் 3 ரூபாவால் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (2-6)

# ஆட்டோவொன்றில் மர்மமாக உயிரிழந்திருந்த சாரதி

## பம்பலப்பிட்டியில் சம்பவம்

தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஆட்டோவொன்றில் மர்மமான முறையில் உயிரிழந்திருந்த நிலையில் சாரதி யொருவரின் சடலம் மீட்கப்பட்ட சம்பவமொன்று பம்பலப்பிட்டி லொறிஸ் வீதியில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றுள்ளது.

பம்பலப்பிட்டி பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்றதகவலொன்றை அடுத்து மீட்கப்பட்ட இந்த சடலம் தொடங்கொட உடவத்தை வீதியைச் சேர்ந்த நாகுரன் ஆறுமுகன் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்நிலையில் மீட்கப்பட்ட சடலத்தின் உடலில் எவ்வித காயங்களும் இல்லை என்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சருமான பிரஷாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் 6.15 மணியளவிலேயே இந்த நபரது சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. இருப்பினும் இவரது மரணத்துக்கான காரணம் இதுவரையில் கண்டு பிடிக்கப்படவில்லை.

சடலம் தொடர்பான நீதிவான் விசாரணைகள் இடம்பெற்றதுடன் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக களுபோவிலை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பம்பலப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-6)

# இதழியல் கற்கை நெறியை ஆரம்பிக்க கிழக்குப் பல்கலையின் புறநிலை அலகு விண்ணப்பங்களை கோரியுள்ளது

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இதழியல் கற்கைநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத் தலைவர் மேற்படி பல்கலைக்கழக உபவேந்தரிடம் இதழியல் கற்கைநெறியை ஆரம்பிக்குமாறு விடுத்த வேண்டுகோளின் பயனாகவே இக்கற்கை நெறியை ஆரம்பிப்பதற்கு கிழக்கு பல்கலைக் கழக புறநிலை கற்கைகள் அலகு விண்ணப்பங்களை கோரியுள்ளது.

இதழியல், அலுவலக முகாமைத்துவம், தொடர்பாடலுக்கான ஆங்கிலம், ஆற்றுப்படுத்துகை, உளவளத்துறை பால் நிலை அபிவிருத்தி, அனர்த்த முகாமைத்தவம், வாழ்வின் விழுமியக் கல்வியும் ஆன்மீகமும், உளவியலும் ஆளுமை விருத்தியும் ஆகிய கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவை மூன்று மாத கற்கை நெறிகளுக்கும் வார இறுதி நாட்களில் விரிவுரைகள் நடைபெறும். இவற்றுக்கான விண்ணப்பப் படிவங்களை கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலா சார பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஊடகவியல் துறையை ஆரம்பிக்குமாறு கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தலைவர் மகஜர் மூலம் விடுத்த வேண்டுகோளை ஏற்று கிழக்கு புல்கலைக்கழக கலை கலாசாரபதில் பீடாதிபதி ஏற்கனவே பதில் அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்குது.

தற்போது இதழியல் கற்கை நெறி ஆரம்பிக்கப்படுவதற்கு நன்றி தெரிவித்து மேற்படி சங்கத் தலைவர் உபவேந்தருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். (2-6)

ஒருவன் கீழே விழுந்தால் இந்த உலகமே அவன் மீது ஓடத்தொடங்கும்.
~அமெரிக்கா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு பகிரங்க மடல்

நாடாளுமன்ற உறுப்பினர்களாக யாழ். மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட தங்கள் அனைவருக்கும் முதற்கண் வாழ்த்துக்கள்.

வாழ்த்துக்கள் தெரிவிப்பது தமிழர் பண்பாடு என்ற அடிப்படையிலேயே வாழ்த்துக்கள் அமைகின்றன.

மாறாக உங்கள் தொடர்பிலும் தமிழ் மக்கள் தொடர்பிலும் நீங்கா மனக்கவலை எம்மில் உண்டென்பதை உங்களுக்கு சொல்லித்தானாக வேண்டும்.

தேர்தல் காலங்கள் கடந்து விட்டன. ஆயினும் நீங்கள் அச்சடித்து வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனங்கள், துண்டுப்பிரசுரங்கள், பத்திரிகை விளம்பரங்கள் அத்தனையும் எம்மிடம் ஆவணமாகவுள்ளன.

உரிய நேரத்தில் அவற்றை பிரசுரித்து உங்களுக்கும் மக்களுக்கும் நினைவுபடுத்தும் திட்டமொன்றும் எம்மிடம் உள்ளதென்பதைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

தமிழர்களின் உரிமை சார்ந்த விடயங்களை முன்வைத்தே நீங்கள் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தைப் பெற்றீர்கள். எனவே உங்கள் பதவிக் காலத்தின் பெரும்பகுதியை யாழ்ப்பாணத்தில் செலவிடுவீர்கள் என்ற நம்பிக்கை உண்டு.

தேர்தல் காலத்தில் நீங்கள் எங்ஙனம் வீடு வீடாகச் சென்று கூப்பிய கரத்தினராய் மக்களைச் சந்தித்தீர்களோ அந்தச் சந்திப்பை பதவிக்குப் பின் நிறுத்தி விடாதீர்கள்.

பேச்சுக்கள், காரசாரமான அறிக்கைகளுடன் உங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி மட்டுப்படுத்தப்படுமாயின் அது தமிழ் மக்களுக்கு நீங்கள் செய்யும் மிகப்பெரும் அநீதியாகும்.

எனவே களத்தில் இறங்குங்கள். மக்களைத் தேடிச் செல்லுங்கள். அவர்கள் மீது அன்பு செலுத்துங்கள். அவர்களோடு சேர்ந்து திட்டமிடுங்கள். செயற்படுத்துங்கள்.

அப்போதுதான் மக்கள் மறைமுகமாக அனுபவிக்கின்ற அரசியல் துன்பங்கள் வெளிவரும்.

ஆம், அரச மரத்தடியில் புத்தர் சிலை, முறிகண்டியில் தென்பகுதி மக்களுக்கான காணி ஒதுக்கீடு, காங்கேசன்துறை மற்றும் மாவிட்டபுரத்தில் கல் அகழ்வு, ஏ-9 வீதி எங்கும் தென்பகுதி உணவகங்கள்.

கொழும்பு-யாழ் வீதியூடாக இரவுநேர பஸ் பயண இருட்டில் நடக்கும் வேதனை சம்பவங்கள் எனப் பலதும்.

ஆகவே அன்புக்குரிய யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களே! மக்களைத் தேடிவாருங்கள். அவர்கள் அனுபவிக்கும் துன்பங்களை அறியுங்கள். அந்தத் துன்பப் பட்டியலுடன் கட்சி பேதமின்றி பொது இடமொன்றில் கூடுவோம்.

எங்கள் துன்பத்தை எப்படி நீக்கலாம் என்று ஆய்வு செய்வோம்; திட்டமிடுவோம்;பகிரங்கப்படுத்துவோம்;செயல்வழிப்படுத்துவோம்; இது விடயத்தில் நீங்கள் ஒற்றுமைப்பட வேண்டும்.

உரிமை கேட்ட நாம் இப்போது சில்லறைப் பிரச்சினைகள் பலவற்றை எதிர்கொண்டுள்ளோம். இவை உடனடியாக நீக்கப்பட வேண்டும்.

புதிய பிரச்சினைகள் உருவெடுக்காமல் நாம் உசார் நிலையில் இருப்பதும் அவசியம். எங்கே பார்க்கலாம்.

# சுரங்கப் பாதையில் விஷவாயு செலுத்தி நான்கு கடத்தல்காரர்கள் கொலை

எகிப்து நாட்டின் எல்லையில் சுரங்க பாதைகளை அமைத்து அதன் வழியாக இஸ்ரேல் நாட்டில் உள்ள காஷா பகுதிக்கு ஆயுதங்கள் மற்றும் பொருட்களை பாலஸ்தீன தீவிரவாதிகள் கடத்தி வருகின்றனர். இதனால் எகிப்து நாட்டில் தேவையற்ற பிரச்சினைகள் உருவாகி வருகின்றன.

எனவே அந்த சுரங்க பாதைகளை முற்றிலும் அடக்க எகிப்து அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. ஆனால் இதற்கு தீவிரவாதிகள் முட்டுக்கட்டை போட்டு வருகின்றனர்.

இதை தொடர்ந்து சுரங்க பாதைக்குள் திடீரென விஷவாயு பரவியது. இதில் மூச்சுத் திணறி 4 தீவிரவாதிகள் பலியானார்கள். ஆபத்தான நிலையில் இருந்த பலர் மீட்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவத்துக்கு எகிப்து இராணுவமே காரணம் என தீவிரவாதிகள் குற்றம் சாட்டியுள்ளனர். சுரங்க பாதைகளில் அவர்கள்தான் விஷவாயுவை செலுத்தியுள்ளனர் என தெரிவித்துள்ளனர்.

ஆனால் இந்த புகாரை எகிப்து இராணுவம் திட்டவட்டமாக மறுத்துள்ளது. பாலஸ்தீன தீவிரவாதிகளால் ஏற்படுத்தப்பட்ட நூறுக்கணக்கான சுரங்க பாதைகளை எகிப்து இராணுவம் அடைத்து வருகிறது.

அவ்வாறு செய்தபோது ஒக்சிசன் இன்றி மூச்சித் திணறி கடத்தல்காரர்கள் இறந்திருக்காலம் என கருதப்படுகிறது. கடந்த 3 ஆண்டுகளில் இது போன்று 145 கடத்தல்காரர்கள் பலியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-6)

# சிறைக்குள் தியானம், சிறப்பு பூஜை செய்ய நித்தியானந்தருக்கு அனுமதி

பாலியல் மற்றும் மோசடி குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நித்தியானந்தா சாமியாரை கர்நாடக பொலிஸார் கடந்த வாரம் கைது செய்தனர். அவரை கர்நாடக பொலிஸார் காவலில் எடுத்து 8 நாட்கள் தொடர்பில் விசாரணை நடத்தினார்கள். நேற்று விசாரணை முடிந்தது.

நேற்று மாலை நித்தியானந்தா மீண்டும் கோர்ட்டில் ஆஜர் படுத்தப்பட்டார். ராம்நகர் மாவட்ட நீதிபதி அவரை 13ஆம் திகதி வரை காவலில் வைக்க உத்தரவிட்டார். இதையடுத்து நித்தியானந்தா ராம்நகர் ஜெயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

அவரது அறையில் அவரது சீடர்களில் ஒருவரான நித்ய பக்தானந்தாவும் அடைக்கப்பட்டுள்ளார். சிறை அறைக்குள்தான் தியானம் செய்ய அனுமதி தர வேண்டும் என்று கோர்ட்டில் நித்தியானந்தா கேட்டார். அதை ஏற்று நீதவான் அனுமதி வழங்கினார்.

இதனால் நேற்றுக் காலை நீண்ட நேரம் சிறை அறைக்குள் நித்தியானந்தா தியானத்தில் ஈடுபட்டார். அறைக்குள் சிறப்பு பூஜைகள் நடத்தவும் நித்தியானந்தாவுக்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. அவருக்கு பூஜை பொருட்களும் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கிடையே பொலிஸ் விசாரணைக்கு நித்தியானந்தா நன்கு ஒத்துழைத்தது தெரிய வந்துள்ளது. பொலிஸார் கேட்ட பெரும்பாலான கேள்விகளுக்கு அவர் பதில் அளித்துள்ளராம். சில சிக்கலான கேள்விகளுக்கு மட்டும் அவர் எந்த பதிலும் சொல்லாமல் மௌனமாகி விட்டதாக கூறப்படுகிறது.

நித்தியானந்தாவிடம் விசாரணை நடத்திய பொலிஸ் அதிகாரிகள் அனைவரும், நித்தியானந்தா மிக மிக புத்திசாலியாக உள்ளார். அவரது சில பதில்கள் சிந்திக்க வைத்தன என்றனர். இவ்வளவு புத்திசாலியான நீங்கள் ஏன் புகார்கள் கூறப்பட்டதும் தலைமறைவாக இருந்தீர்கள்? என்று ஒரு பொலிஸ் அதிகாரி கேட்டாராம். அதற்கு நித்தியானந்தா கூறுகையில், பத்திரிகை நிருபர்களை நினைத்து பயந்து விட்டேன். அவர்கள் கேட்கும் ஏடாகூடமான கேள்விகளுக்கு எப்படி பதில் சொல்வது என்பது புரியாததால்தான் தலைமறைவாக இருந் தேன் என்றார். (2-6)

## போதியவசதிகளின்றி வன்னியில் மீள்குடியேறிய மக்கள் சிரமம்

(கொழும்பு)


வன்னியில் போரினால்இடம்பெயர்ந்து முகாமில் வைக்கப்பட்டு குடியேற்றப்படும் மக்கள் தொடர்ந்தும் பல இன்னல்களுக்கு உள்ளாகி வருவதாக வன்னியில் இருந்து வெளியாகும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இறுதியாக கடந்த இருவாரங்களுக்கு முன்னர் குடியேற்றப்பட்ட மக்கள் பலர் சரியான நிவாரண உதவிகள் மற்றும் தற்காலிக குடியிருப்புக்கள் இன்றி மிகவும் அவதிப்படு வதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களுக்கு இதுவரையில் நிவாரணமாக வெறும் 5 ஆயிரம் ரூபா பணமே வழங்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய அடிப்படைத் தேவைகள் மற்றும் சுகாதார வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

வன்னேரிக்குளம் மற்றும் முல்லைத்தீவின் பல் பகுதிகளில் இவ்வாறு மக்கள் அவதிப்படுவதாகவும் அவர்களுக்கான நிவாரண உதவிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டிய தேவைகள் இருந்தும் அதை செய்வதற்கு அரச கட்டுப்பாடுகள் இருப்பதால் அதை செய்ய முடியாமல் உள்ளதாக தொண்டு பணியாளர்கள் தெரிவித்துள்ளனர். (2-6)

# புதிய எருசலேம்



நட்புக்குச் சிறந்த நிலை எதுஎன்றால் எப்போதும் வேறுபடுதல் இல்லாமல் முடியும் போதெல்லாம் உதவிசெய்து தாங்கும் நிலையாகும்.

ஆம், இந்த உலகில் உள்ள பொருட்களின் தன்மையை அறிய அளவுகோல்கள் உள்ளன. அதேபோல மனிதனை அளப்பது அவன் அடுத்தவரிடம் காட்டுகின்ற அன்பு. இந்த அன்பை அளப்பது அவன் பிறரிடம் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற நட்பு.

ஆம், இன்று உலகம் புதிது புதிதாய் அனைத்தையும் செய்து கொண்டிருக்கிறது. எங்கும் புதுமை, எதிலும் புதுமை, புதிய பஷன்கள், புதிய டிசைன்கள், புதிய சிந்தனைகள் எந்த செயலைச் செய்தாலும் புதுப் பார்வையில் புதுக்கோணத்தில் செய்ய நினைக்கின்றது.

சரி, பொருட்களிலும் மாடல்களிலும் நாகரீகத்திலும் புதுமையைத் தேடுகின்ற மனிதன் ஏன் வாழ்க்கை முறையில் மட்டும் இன்னும் புதுமையிலே இருக்கின்றான்? இது ஒரு நிரந்தரமான கேள்வியாகவே மனதில் தொக்கி நிற்கின்றது.

ஆம், மனித வாழ்வின் அடிப்படைஆணிவேராக இருக்கின்ற உறவும் அந்த உறவின் மேல் காட்டப்பட்ட நம்பிக்கையும் சிதைந்து சின்னாபின்னமாகிக் கிடக்கின்றன. குடும்பத்திலும் சமூகத்திலும் இன்று இந்த உறவுகள் சிதைந்து காணப்படுகின்றன.

இதற்கெல்லாம் ஒரே காரணம் ஒவ்வொரு மனிதனின் உள்ளத்தில் ஏற்பட்ட ஆன்மீக வறட்சி, ஆன்மீக தாகம் போய் ஆன்மீக வறட்சி கண்டுவிட்டது. இந்த வறட்சி நிலையை களைவதற்கு என்ன வழி என்பதை இன்றைய நற்செய்தி வாசகம் தெளிவுபடுத்துகின்றன.

## பரமபிதா காட்டிய பாதை

அன்பு சமூகங்களைக் கட்டியெழுப்புவதின் வழி தான் இன்றைய ஆன்மீக வறட்சியைப் போக்க முடியும். ஆன்மீக வறட்சியை போக்கிவிட்டால் வாழ்க்கையின் வளர்ச்சி தானாக வந்துவிடும்.


ஆம், எங்கு மானிட சமூகம் அன்பு சமூகமாக மாறுகிறதோ அங்கு வேதனைகளுக்கு ஆறுதல் கிடைக்கும், பரஸ்பரநம்பிக்கை பிறக்கும், ஊக்கு வித்தல் ஏற்படும். இறைவனிடம் ஒருவர் ஒருவருக்காகச் செபிக்கின்ற நிலை உருவாகும்.

இவ்வாறு எங்கு அன்பு, சமூகம் புதியஎருசலேம் உண்டாகிறதோ அங்கு இனி வேதனைகள் இல்லை, கவலை இல்லை, துன்பம் இல்லை, நோய் இல்லை, சாவில்லை, திருவெளிப்பாடு இதை அழகாக படம் பிடித்துக் காட்டுகிறது.


ஆம், அங்கே மனித உள்ளங்கள் திறந்தன. கோவில் கதவும் திறந்தது. தெய்வம் அவர்கள் நடுவில் வாழ்ந்தார். அவர்கள் வாழ்வும் அன்பினால் ஒன்றிணைந்தது. ஆம் நாமும் நம்மிடம் இருக்கின்ற ஆணவத்தை, பழமை வாதங்களை, பகைமையை அழிப்போம். அன்பினால் இணைவோம். அன்பின் சமூகத்தைக் கட்டியெழுப்புவோம். அங்குதான் புதிய எருசலேம் உருவாகும்.

*ஜோன் றொபேர்ட்*

# "தாய்லாந்தில் தொடரும் கலவரம்"



கடந்த ஒரு மாதமாக் தாய்லாந்தின் தலைநகரான பாங்காக் ஸ்தம்பித்துவிட்ட நிலைமை அதன் முக்கிய கடை வீதிகள் செஞ்சட்டைப் படையினர் என்று தங்களை வர்ணித்துக் கொள்ளும் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டக்காரர்களின் கட்டுப்பாட்டில்



இருக்கின்றன. பாங்காக் நகரின் நட்சத்திர ஹோட்டல்களும் சரி மால்கள் என்றழைக்கப்படும் முக்கியமான பலபொருள் அங்காடிகளும் சரி மூடிக்கிடக்கின்றன.


அன்றாட வாழ்க்கை முற்றிலுமாக பாதிக்கப்பட்டிருப்பதுடன் நின்றுவிடவில்லை. இராணுவம் மற்றும் பொலிஸாருக்கும் அரசுக்கு எதிரான செஞ்சட்டை ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே நடக்கும் போராட்டம் மிகப் பெரிய அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தி இருக்கிறது. கடந்த ஒரு மாதத்தில் மட்டும் சுமார் 26 பேர்கொல்லப் பட்டிருக்கிறார்கள். ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்திருக்கிறார்கள். பாங்கொக் நகருக்கள் ஏனையப் பகுதிகளில் இருந்து பொலிஸ்துறையினரோ இராணுவமோ வரவழைக்கப்படுவதைத் தடுக்கும் விதத்தில் நெடுஞ்சாலைகளில் தடைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சொல்லப்போனால் பொலிஸ் மற்றும் இராணுவத்தில் உள்ள பலரும் செஞ்சட்டை ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு ஆதரவாகச் செயல்படுவதாகக் கூறப்படுகிறது. 6 மாதங்களில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படும் என்கிற அரசின் வாக்குறுதியை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏற்றுக்கொள்வதாக இல்லை. உடனடித் தேர்தல் என்பது எப்படி சாத்தியம் என்று கையைப்பிசைகிறது.

இராணுவமும் அரசும் தாய்லாந்திரல் இப்போது காணப்படும் அரசியல் நெருக்கடிக்கு முன்னாள் பிரதமர் தாக்ஸின் ஷினாவத்ராதான் காரணம் என்பது உலகறிந்த உண்மை. ஒரு பொலிஸ் அதிகாரியாக தனது வாழ்க்கையைத் தொடங்கி அரசின் உதவித் தொகை பெற்று அமெரிக்காவில் குற்றவியலில் முது நிலைப் பட்டம் பெற்றுத் திரும்பிய தாக்ஸினின் கவனம் தகவல் தொலைத் தொடர்புத் துறையில் திரும்பியது..

ஷின்கார்ப் என்கிற தகவல் தொலைத் தொடர்பு நிறுவனம்.ஒன்றைத் தொடங்கி தாய்லாந்தின் மிகப் பெரிய தொழில் அதிபராக மாறிய தாக்ஸினின் அரசியல் பிரவேசம் தாய்லாந்தின் முன்னணிக் கட்சியான ஜனநாயகக் கட்சிக்கு மிகப் பெரிய சவாலாக மாறியது மட்டுமல்ல 2001 இல் ஆட்சி மாற்றத்துக்கும் வழி கோலியது. முழுமையாக 5 ஆண்டுகள் தொடர்ந்து பதவியைத் தொடர்ந்த பிரதமர் என்கிற பெருமைக்குரியவராக வலம் வந்த தாக்ஸின் பல பொருளாதாரச் சீர்திருத்தங்களுக்கும் வழி கோலினார் என்பது தான் உண்மை.

இந்தியாவில் மன்மோகனா மிக்ஸ் என்று கூறுவது போலத் தாய்லாந்தில் தாக்ஸினா மிக்ஸ் என்று அவரது பொருளாதாரத் திட்டங்களை பத்திரிகைகள் வர்ணித்தன. ஒரு புறம் உலகமயமாக்கல் பொருளாதார தாராளமயமகாக்கல் கொள்கைகளுடன் கிராமப்புற ஏழை விவசாயிகளுக்கும் பல நன்மைகளைச் செய்ய முற்பட்ட பிரதமர் தாக்ஸின் மக்களின் நன்மதிப்பைப் பெற்றதில் ஆச்சரியமில்லை. இராணுவ உதவியுடன் நடைபெறும் பிரதமர் அபிசித் வெஜாஜிவாவின் ஆட்சியில் மக்கள் வெறுப்படைந்துவிட்டனர். விவசாயிகளும் கிராமப்புற மக்களும் கொதிப்படைந்து இருக்கும் நிலைமை பணக்காரர்களும் பெரும் முதலாளிகளும் பன்னாட்டு நிறுவனங்களும் இப்போதைய ஆட்சியாளர்களை கைப்பாவையாக வைத்து செயல்படுகின்றனர் என்கிற குற்றச்சாட்டு பரவலாகவே கேட்கிறது.

ஒரு புறம் தாய்லாந்தின் பொருளாதார வளர்ச்சி உலகையே வியக்க வைக்கிறது. இன்னொரு புறம் பெருகி வரும் வேலையில்லாத்திண்டாட்டமும் கிராமப்புறங்களில் தொழில் விவசாயம் எதுவும் செய்வதில்லை. வேலையில்லாமல் அரை வயிற்றுக் கஞ்சிக்கு மட்டும் உத்தரவாதம் கிடைத்தால் போதுமா? ஒரு தலைப்பட்ச வளர்ச்சியின் விளைவால் வாழ்க்கைத் தரத்தில் மிகப் பெரிய இடைவெளி ஏற்பட்டிருப்பது இப்போதைய உள்நாட்டுக் குழப்பத்தின் அடிப்படைக்காரணம். நகர்ப்புறங்களின் வாழ்க்கைத்தரத்துக்கும் வளர்ச்சிக்கும் கிராமப்புறங்களின் நிலைமைக்கும் மலைக்கும் மடுவுக்குமான வேறுபாடு கிராமப்புற விவசாயிகள் செஞ்சட்டை ஆர்ப்பாட்டக்காரர்களாகி இருக்கிறார்கள்.



தாய்லாந்தின் அன்னியச் செலாவணி இருப்பு மிக மிக அதிகம். ஏற்றுமதியும் ஏராளம். ஆனால் வேலையில்லாத் திண்டாட்டமும் வாழ்க்கைத் தர இடைவெளியும் உள்நாட்டுக்கலகத்துக்கு வழிகோலியிருக் கின்றன. இந்தியாவுக்கு மட்டுமல்ல பல வளர்ச்சி அடையும் பொருளாதாரங்களுக்குத் தாய்லாந்து ஒரு முன்னுதாரணம். நாம் சுதாரித்துக்கொள்ள வேண்டிய தருணம் இது!



## முற்றாக அழிவடைந்த கிளி.மாதாவ இல்ல புனரமைப்புக்கு பங்களிப்பு செய்யவும் இல்லத்தலைவர் வேண்டுகோள்

கடந்த கால போர் அனர்த்தங்களினால் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மாதவ ஆச்சிரம சைவச் சிறார்(ஆண்-பெண்) விடுதி முற்றாக அழிவடைந்துள்ளது. இதனால் 58 மில்லியன் ரூபா பெறுமதியான சொத்து, தளபாடம் மற்றும் கட்டங்களுக்கு இழப்பேற்பட்டுள்ளது என வடக்கு மாகாண பிரதம செயலாளரும் மாதவ ஆச்சிரம சைவ சிறுவர் இல்ல தலைவருமான தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார். மேற்படி விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் ,

1989 ஆம் ஆண்டு முதல் மாதவ ஆச்சிரம சைவ சிறுவர் இல்லம் சிறுவர்களின் வளர்ச்சி அபிவிருத்திக்காக செயற்பட்டு வரும் பாரிய நிறுவனம். கடந்த கால போர் அனர்த்தங்களினால் மேற்படி சிறுவர் இல்லம் முற்றாக அழிவடைந்துள்ளது.

இதனால் 58 மில்லியன் ரூபாவுக்கு மேல் அழிவு மதிப்பிடப்படப்பட்டுள்ளது. தற்போது முதற்கட்டமாக மகளிர் ஆச்சிரம விடுதி வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திர சிறியின் நிதி ஒதுக்கீட்டிலும் புலம் பெயர்ந்த தமிழ் உறவுகளினதும் இந்த மா மன்றம், துர்க்கை அம்மன் ஆலய நிதி பங்களிப்பில் மீள்புனரமைப்பு பணிகள் இடம்பெறுகின்றன.

இதுவரை 1130 ஆயிரத்து நூற்றி முப்பது சிறுவர்கள் கிளிநொச்சி - முல்லைத்தீவு பகுதிகளில் கைவிடப்பட்ட நிலையில் அநாதைகளாக இனம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் முதற்கட்டமாக ஜெயந்தி நகரில் ஆரம்பிக்கப்படவுள்ள மாதவ ஆச்சிரம மகளிர் பிரிவில் 140 பெண்கள் (சிறுவர்) அனுமதிக்கப்படவுள்ளனர்.

மேற்படி ஆச்சிரமங்களில் சேர விரும்புவோர் கிராம அதிகாரி, நன்னடத்தை அதிகாரி, உதவி அரச அதிபர் ஆகியோரின் சிபார்சுடன் எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் ஜெயந்தி நகர் பெண்கள் சிறுவர் மாதவ ஆச்சிரம இல்லத்தில் விபரங்களை வழங்குமாறு கேட்டுள்ளார். அடுத்த கட்டமாக ஆண்கள் சிறுவர் வீடுதி மீள புனரமைக்கப்படவுள்ளது.

இதன் பின்னர் முதற்கட்டமாக 200 ஆண்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். இதே வேளை கடந்த காலங்களில் மாதவ ஆச்சிரம நிலையத்தில் வசித்த சிறுவர்கள் தொடர்ந்து இங்கு வசிக்கலாம் எனவும் இவர்கள் எவ்வித பதிவிகளையும் மேற்கொள்ள தேவையில்லையெனவும் கேட்டுள்ளார்.

இதே நேரம் தற்போது மீளப் புனரமைக்கப்பட்டு வரும் கிளிநொச்சி மாதவ ஆச்சிரம நிலையத்திற்கு நிதிப் பங்களிப்பு செய்ய விரும்புவோர் கிளிநொச்சியிலுள்ள இலங்கை வங்கிக் கிளையில் கணக்கு இலக்கம் 46896, வவுனியா இலங்கை வங்கிக் கிளை கணக்கு இலக்கம்8899363 என்ற கணக்கிற்கு பங்களிப்புச் செய்யலாமென கேட்டுள்ளார்.(2-6)

## உலக வங்கியின் நிதி உதவியுடன் இங்குறானை சீனித்தொழிற்சாலை புனரமைப்பு வேலைகள் ஆரம்பம்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்திலுள்ள இங்குறானை சீனித் தொழிற்சாலை உலக வங்கியின் நிதி உதவியுடன் புனரமைப்புச் செய்யும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

இதேநேரத்தில் கந்தளாய், பெல்வத்தை, செவனகலை ஆகிய சீனித்தொழிற்சாலைகளும் நவீன மயப்படுத்தப்படுகிறது. இதன் மூலம் இந்த வருட இறுதிக்குள் சீனி உற்பத்தி வேலைகள் நான்கு தொழிற்சாலைகளிலும் ஆரம்பமாக இருக்கின்றன.


இந்தத் தொழிற்சாலைகளுக்கு ஏற்கனவே கரும்பு உற்பத்தி செய்து வழங்கி விவசாயிகள் மீண்டும் கரும்பு உற்பத்தி செய்வதற்கு வங்கிக் கிளைகள் மூலம் கடன் உதவிகளும் தொழில் நுட்ப ஆலோசனைகளும் வழங்கப்படவிருக்கின்றன.

அம்பாறை மாவட்டத்தில் கல்லோயா குடியேற்றவாசிகள் 11188 ஏக்கர் நிலத்தில் கரும்புச் செய்கையில் ஈடுபடவிருக்கிறார்கள். கல்லோயா அபிவிருத்திச் சபையினால் 1959ஆம் ஆண்டு இலங்கையின் முதன் முதல் சீனித் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டு சீனியும் மதுசாரமும் மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டது.

கல்லோயா அபிவிருத்திச்சபை ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையாக மாற்றம் செய்யப்பட்டு உடவலைப் பகுதியில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளச் சென்ற போது இங்குறானை கந்தாய் ஆகிய சீனி உற்பத்தி ஆலைகள் தனியாரிடம் கொடுக்கப்பட்டதினால் இந்த இரு ஆலைகளும் செயல் இழந்துள்ளன.

உடவளைப்பகுதியில் உள்ள செவனகல, பெல்வத்தை ஆகிய இரு ஆலைகளும் இன்று வரை சீனி உற்பத்தி செய்துவருகின்றன.

தற்போது நான்கு ஆலைகளையும் புனரமைப்பு செய்து சீனி உற்பத்தி செய்யும் போது நாட்டுக்குத் தேவையான சீனியின் ஒரு பகுதியினை பெற்றுக்கொள்வதுடன் நெல் உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளை கரும்பு உற்பத்திகளில் ஈடுபடுத்த முடியும் என தெரியவருகிறது. (2-6)



# கடைக்குட்டி ஆப்கானிஸ்தான் அணியை இலகுவாக வீழ்த்தியது இந்திய அணி

## அறிமுக வீரர் முரளி விஜய் அசத்தல்

(சென்லூசியா)

அஷிஸ் நெகரா, முரளி விஜய்யின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் இந்திய அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அறிமுக அணி ஆப்கானிஸ்தானை வீழ்த்தியது.

மேற்கிந்தியத்தீவுகளில நடைபெற்று வரும் ஐ.சி.சி. மூன்றாவது இருபது-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் நேற்று சென்லூசியாவில் நடைபெற்ற லீக் சுற்றின் 3 ஆவது போட்டியில் சி பிரிவைச் சேர்ந்த இந்தியா-ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித்தலைவர் மகேந்திர சிங் தோனி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களையிழந்து 115 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் நூர்அலி 48 பந்துகளில் (4 பவுண்டரிகள் அடங்கலாக) 50 ஓட்டங்களையும் அஸ்கார் ஸ்ரானிக்சை




33 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 30 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அஷிஸ் நெகரா 4 ஓவர்கள் பந்துவீசி 19 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் பிரவீன் குமார் 2 விக்கெட்டுக்களையும் சகீர்கான், ஜடேஜா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 116 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலகுவான இலக்குடன் துடுப்பெடுத்தாடிய் இந்திய அணி முரளி விஜய்யின் அதிரடியின் மூலம் 14.5 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 116 ஓட்டங்களை குவித்து 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் அறிமுக வீரர் முரளி விஜய் 46 பந்துகளில் (2 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 48 ஓட்டங்களையும் யுவராஜ் சிங் ஆட்டமிழக்காமல் 22 பந்துகளில் (ஒரு சிக்ஸர் உட்பட) 23 ஓட்டங்களையும் அணித்தலைவர் தோனி ஆட்டமிழக்காமல் 6 பந்துகளில் (2 சிக்ஸர்கள் அடங்கலாக) 15 ஓட்டங்களையும் ரெய்னா 18 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் டாங்லாட் அகமட்ஷா, சாமியுல்லா ஷேன்வாரி, ஹாமிட் ஹசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இப் போட்டியில் இந்திய அணியின் வெற்றிக்கு அடித்தளம் அமைத்த அஷிஸ் நெகரா ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் இந்திய அணிக்கு 2 புள்ளிகள் கிடைத்தது. இந்திய அணி இன்று நடைபெறும் 5ஆவது லீக் போட்டியில் தென்னாபிரிக்க அணியை சந்திக்கின்றது.

# நியூசிலாந்து திரில் வெற்றி; இலங்கை அணி ஏமாற்றம்



(கஜானா)

பந்துவீச்சில் சோபிக்கத்தவறிய இலங்கை அணி 2 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணியிடம் வீழ்ந்தது.

ஐ.சி.சி. மூன்றாவது இருபது-20 உலகக் கிண்ணத் தொடர் மேற்கிந்தியத்வுகளில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இத் தொடரின் முதலாவது லீக் போட்டி நேற்று முன்தினம் கஜானாவில் நடைபெற்றது. இப் போட்டியில் பி பிரிவிலுள்ள இலங்கை, நியூசிலாந்து அணிகள் மோதின. இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு ஆரம்பத்தில் திலகரட்ண டில்சான் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

அடுத்து களமிறங்கிய அணித்தலைவர் சங்கக்காரவும் 4 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து ஆட்டமிழந்து வெளியேற இலங்கை அணி 8.2 ஓவர்களில் 44 ஓட்டங்களை எடுத்து 2ஆவது விக்கெட்டையிழந்தது.

எனினும் 3 விக்கெட்டுக்காக இணைந்த மஹேல ஜெயவர்த்தன-தினேஷ் சண்டிமால் ஜோடி சிறப்பான ஆட்டத்தை வழங்கினர்.

இதில் ஆரம்ப முதலே அதிரடியை வழங்கிய மஹேல ஜெயவர்த்தன 33 பந்துகளில் தனது மூன்றாவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார்.

இந்த ஜோடி மூன்றாவது விக்கெட்டுக்காக 59 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது அறிமுக வீரர் தினேஷ் சண்டிமால் 23 பந்துகளில் (ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட) 29 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய கபுகெதர பொறுப்புடன் துடுப்பெடுத்தாட மறுமுனையில் மஹேல ஜெயவர்த்தனா 51 பந்துகளில் (8 ப்வுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 81 ஓட்டங்களைக்குவித்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த வீரர்களும் சோபிக்காத நிலையில் இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களையிழந்து 135 ஓட்டங்களை எடுத்தது.

இதில் கபுகெதர 10 பந்துகளில் (ஒரு சிக்ஸர்கள் உட்பட) 11 ஓட்டங்களை எடுத்தார். பந்து வீச்சில் ஷேன் பொண்ட் 2 விக்கெட்டுக்களையும் மக்குலம், சௌத்தி, ஓரம், ஸ்ரைரிஸ் ஆகியோ்ர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 136 ஓட்டங்களை எடுத்தால் வெற்றிஎன்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணிக்கு பிரண்டன் மக்குலம் பூச்சியத்துடன் ஆட்டமிழந்து சொதப்பினார்.

அடுத்து இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த ரைடர், குப்தில் ஜோடி பொறுப்பான ஓட்டத்தை வெளிப்படுத்தியது.

இந்த ஜோடி இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்து 61 ஓட்டங்களை எடுத்தபோது ஜெசி ரைடர் 27 பந்துகளில் (3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 42 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து ரெய்லர் களமிறங்க மறுமுனையில் குப்தில் 24 பந்துகளில் (ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட) 19 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ரோஸ் ரெய்லர் 09, ஸ்ரைரிஸ் 17, ஓரம் 15 ஓட்டங்களுடனும் ஹோப் கின்ஸ் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழந்து நீண்ட நேரம் நிலைக்கவில்லை.

இறுதி ஓவரில் 10 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற நிலையில் முதலிரண்டு பந்துகளில் நாதன் மக்குலம், விக்டோரி தலா ஒரு ஓட்டங்களை எடுத்தனர்.

மூன்றாவது பந்தில் நாதன் மக்குலம் பவுண்டரி அடிக்க கடைசி மூன்று பந்தில் 4 ஓட்டங்கள் தேவைப்பட்டது.

நான்காவது பந்தில் இரண்டு ஓட்டங்களுக்கு ஆசைப்பட்ட அணித்தலைவர் டானியல் விக்டோரி 15 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட) 17 ஓட்டங்களை எடுத்து ரண் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் 2 பந்தில் 3 ஓட்டங்களை எடுக்க வேண்டிய நிலையில் நாதன் மைக் குலம் சிக்ஸர் அடித்து வெற்றியை உறுதி செய்தார்.

நியூசிலாந்து 19.5 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களையிழந்து 139 ஓட்டங்களைக்குவித்து இரண்டு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதில் நாதன் மக்குலம் ஆட்டமிழக்காமல் 6 பந்துகளில் (ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட) 16 ஓட்டங்களை எடுத்தார்.

பத்து வீச்சில் முத்தையா முரளிதரன் 2 விக்கெட்டுக்களையும் மத்யூஸ், வெலகெதர, மெண்டிஸ், ஜெயசூரியா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இப் போட்டியில் நியூசிலாந்து அணியின் வெற்றிக்கு சகல துறையிலும் ஜொலித்த நாதன் மக்குலம் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் நியூசிலாந்து அணி 2 புள்ளிகளைப் பெற்றது. இதேவேளை இலங்கை அணி சிம்பாவே அணியுடன் மோதும் போட்டியில் வெற்றி பெற்றால் மாத்திரமே சுப்பர்-8 வாய்ப்பை பெறமுடியும்.

# தடகளப் போட்டியின் இறுதி நிகழ்வு இன்று

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு கழகங்களுக்கிடையிலான தடகளப் போட்டியின் இறுதிப் போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு உடுப்பிட்டி இமையாணன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் எஸ்.கிருபாகரனும், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண விளையாட்டு திணைக்கள உதவிச் செயலாளர் எஸ்.அண்ணாத்துரை மற்றும் யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி ஜெ.ஜெயரூபசிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வின் இறுதியில் வெற்றி பெற்ற கழகங்களுக்கிடையிலான பரிசளிப்பு வைபவமும் இடம்பெறவுள்ளது. (ந-5)

# மேற்கிந்தியத்தீவுகள் அணி அயர்லாந்து அணியை வீழ்த்தியது



(கஜானா)

சமியின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் மேற்கிந்தியத்தீவுகள் அணி 70 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அயர்லாந்து அணியை வென்றது.

மேற்கிந்தியத்தீவுகளில் நடைபெற்று வரும் ஐ.சி.சி. மூன்றாவது இருபது-20 உலகக் கிண்ண தொடரில் நேற்று முன்தினம் கஜானாவில் நடைபெற்ற இரண்டாவது லீக் போட்டியில் டி பிரிவைச் சேர்ந்த மேற்கிந்தியத் தீவுகள், அயர்லாந்து அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களையிழந்து 138 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சமி 17 பந்துகளில் (2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 30 ஓட்டங்களையும் சர்வான் 24 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட) 24 ஓட்டங்களையும் பிளேட்சர் 19, அணித்தலைவர் பிரவே 10 பந்துகளில் (2 சிக்ஸர்கள் உட்பட) 18 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் டோக்ரேல் 3 விக்கெட்டுக்களையும் ரான்கின், குசாக், போத்தா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 139 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி 16.4 ஓவர்களில் 68 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகலவிக்கெட்டுக்களையுமிழந்து 70 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் வில்சன் 17 ஓட்டங்களை எடுத்ததுடன் ஏனைய வீரர்கள் இரட்டை இலக்கு ஓட்டங்களைக்கூட எடுக்கவில்லை. உதிரியாக 19 ஓட்டங்களை வழங்கியது மேற்கிந்தியத்தீவுகள் அணி.

பந்துவீச்சில் சமி 3.4 ஓவர்கள் பந்துவீசி 8 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் ராம்போல் 3 ஓவர்கள் பந்து வீசி 17 ஓட்டங்களைக்கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் அணித்தலைவர் பிரவோ 2 விக்கெட்டுக்களையும் ரோச், மில்லா தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி வெற்றிக்காக சகலதுறையிலும் ஜொலித்த சமி ஆட்டநாயகனாகத் தெரிவானார். இவ் வெற்றியின் மூலம் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு 2 புள்ளிகள் கிடைத்தது.





கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்ட அரசியல் தலைவர்கள் அமர்ந்திருப்பதையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேடைக்கு வருவதையும் கலந்து கொண்ட மக்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## யுத்த வெற்றியின் ஓராண்டு...

கொண்டுள்ள பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அங்கு ஊடகவியலாளர்களுடன் கலந்துரையாடும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது, மே மாதம் 12 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரை போர் வீரர்கள் வாரமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

விடுதலைப்புலிகளுடனான போரில் வெற்றியீட்டுவதற்காகப் பாடுபட்டு உயிர் நீத்த மற்றும் உயிருடன் வாழும் வீரர்களுக்காகவே இந்த ஒரு வார காலம் பிரகடனப்படுத்தப்படவுள்ளது.

இந்த வாரத்தின் இறுதி வைபவம் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளதுடன் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அணி வகுப்பு நிகழ்வு கூட்டுப் படைகளின் தளபதியான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் காலி முகத்திடலில் இடம்பெறும்.

இதனைத் தொடர்ந்தும் நாடாளுமன்றத் திடலில் அமைக்கப்பட்டுள்ள உயிரிழந்த இராணுவத்தினரின் நினைவுத் தூபியில் போரில் உயிரிழந்த இராணுவ வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கான நிகழ்வொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ந-5,9)

## தமிழ்த்...

புக்களை மேற்கோள்காட்டி இந்திய அரசாங்கமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து செயல்பட வலியுறுத்தும் என அந்த ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அரசாங்கம் முன்வைக்கும் அரசியல் யாப்பு மாற்றத்தில் தமிழர்களுக்கான சாதகத்தன்மையை ஏற்படுத்த வாய்ப்பாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

## ஈழத்...

யோரைச் சந்திக்கவிருப்பதாகக் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்புக்களின்போது இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அரசியல் தீர்வு குறித்து முதல்வர் கலந்துரையாடுவார் என அவர் தெரிவித்துள்ளார். (ந-5)

## நாவலப்...

கெடுப்பு நடத்தப்பட்டது. சார்க் மாநாட்டில் கலந்து கொள்ளும் நோக்கில் பூட்டானுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி நாடு திரும்பியதன் பின்னர் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதேவேளை குற்றச் செயல்களுடன் தொடர்புடைய எந்தவொரு உறுப்பினருக்கும் ஆளும் கட்சியில் பதவி வழங்கப்படாதென ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ந-5)

## கோதுமை...

நிறுவனங்கள் எமது சங்கத்துக்கு நேற்று முன்தினம் அறிவித்தனர்.

இந் நிலையில் பாண் உள்ளிட்ட பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலையை அதிகரிக்கத் திட்டமிட்டு வருகின்றோம் என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை கோதுமை மாவிற்கான இறக்குமதி வரியை அரசாங்கம் அண்மையில் குறைத்த போது கோதுமை மாவின் விலை குறைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## நாமல்...

எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கல்வி அபிவிருத்தி, மனித வள மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தாருன்யட ஹெடக் அமைப்பு காத்திரமான பங்களிப்பினை நல்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

கணனித் தொழில் நுட்பத்தைக் கிராமங்களுக்கு அறிமுகம் செய்வதில் நாமல் ராஜபக்ஷ முக்கிய பங்காற்றியுள்ளார் என சப்ரகமு மாகாண சபை உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (ந-5)

## அரசுடன் இணைந்து செயற்படுமாறு எதிர்க்கட்சிக்கு ஜனாதிபதி அழைப்பு

நாட்டை அபிவிருத்தி செய்வதில் அரசுடன் இணைந்து செயற்பட முன்வருமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சிக்கு அழைப்பு விடுத்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஜனா திபதி உரையாற்றினார்.

இதன்போது எதிர்ப்பது என்பதற்காக எல்லாவற்றுக்கும் அரசாங்கத்தை எதிர்க்கக் கூடாது என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார். நாட்டு மக்களின் நலன்கருதி அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்றும் ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார். (ந-5)

## நாட்டின்...

அறிவித்துள்ளது.

மேலும் நாட்டின் பல பாகங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (ந-5)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பி...

யுத்தத்திற்குப் பின்னர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு இலங்கை அரசை வலியுறுத்தி வரும் இந்திய மத்திய அரசு, இலங்கையில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலுக்குப் பின்னர் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் அதி கூடிய அழுத்தத்தை இலங்கை அரசுக்குக் கொடுத்து வருவதாக அரச வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

கடந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவின் உதவியுடன் அரசியல் தீர்வைமுன் வைப்பதென்ற உறுதியை தேர்தல் பிரசாரத்தில் முன்நிறுத்தியதோடு இந்தியாவின் உதவியுடனேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் எனவும்கூறியிருந்தது.

இந் நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசுடன் இணந்து செயற்படுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இந்திய மத்திய அரசு ஆலோசனை வழங்கியுள்ளதாக வெளியான செய்திகளின் மத்தியில் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விரைவில் இந்தியாவுக்கு அழைத்து அவர்களுடன் பிரதமர் மன்மோகன் சிங் பேச்சு நடத்துவார் என நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது இவ்வாறிருக்க சார்க் மாநாட்டின் போது பிரதமர் மன்மோகன் சிங், மகிந்த ராஜபக்ஷவிடம் இனப்பிரச்சினைத் தீர்வுகுறித்து வினாவியதாகவும் இதன்போது இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைப்பதற்குத் தாம் தயாராகவிருப்பதாகவும் ஜனாதிபதி உறுதியளித்ததாகவும் தகவல்கள் கசியத் தொடங்கியுள்ளன. (ந-5)


# மரண அறிவித்தல்

## சுஜீந்திரன் தரண்ஜா



மல்லாகத்தை பிறப்பிடமாகக் கொண்ட சுஜீந்திரன் தாரணி தம்பதியினரின் பாசமிகு சிரேஷ்ட புதல்வி தரண்ஜா கடந்த (29.04.2010) வியாழக் கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் சாருஜன், சாருஜா ஆகியோரது பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் சுலோஜனாதேவி, பரராஜசிங்கம்-சறோஜினி தேவி, கனகநாயகம்(ரஞ்சனாஸ் புடவையகம்)- நிர்மலாதேவி, பாலகிருஸ்ணன்-பத்மாகினிதேவி, சண்முகானந்தன், காலஞ்சென்ற பமிலா மற்றும் அன்னலிங்கம்-திருப்பதி, சேக்கிழார்-வதனி ஆகியோரது பாசமிகு பேர்த்தியும்.

மதனமோகன், குகதாஸ், வைகுந்தன், கஜேந்திரன், பகீரதன், நிஷாந்தன் (பெஷன்பார்க்), பிரசாந்தன், சுஜாந்தன், ரஜீந்தன், தனோஜன், லதன், மதிவதனி ஆகியோரது பெறாமகளும் தயாபரன், ஜெயராஜ், கார்த்திகா, கம்சாஜினி, கம்சாரமணி, சர்மிளா, சாஜினி, பிரகீர்த்தனா ஆகியோரது மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி இன்று (02.05.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக ஏழாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:

தேவிவாசா, மல்லாகம்.

சுஜீந்திரன்-தாரணி (அப்பா, அம்மா)

077 2871200, 021 5100204

(1307)

வசந்தம் T.V, சக்தி T.V புகழ்

பிரண்ட்ஸ் இசைக்குழுவினர் யாழ். மண்ணில்...

கொழும்பின் முன்னணிப் பாடகர் M.மகிந்தகுமார், சக்தி Suppar star கலைஞர்கள், J.R. சுகுமார், யாழ். முன்னணி பிரண்ட்ஸ் பாடக பாடகிகளும் ஜேம்ஸ் அன்ரனின் இசையில் சங்கமிக்கின்றார்கள்.

உங்கள் முதல் தெரிவுகளுக்கு முந்துங்கள்.

(1309)

தொடர்புகளிற்கு:
இயக்குநர்:0776366038
0770871689
அறிவிப்பாளர்:0776510375

'பிரண்ட்ஸ் இசைக்குழு'
11,A.V. றோட்,
கொழும்புத்துறை.

றெமோ போன்சொப்
சிவன் கோவில் வீதி,
பருத்தித்துறை.

ஆத்ம ஈடேற்றப் பிரார்த்தனை



02.04.2010 அன்று
இறைபதம் அடைந்த
யாழ்ப்பாணத்தின் தலை
சிறந்த சிற்பக் கலைஞர்
நடராஜா
ஸ்ரீ ஆனந்தராஜன்
அவர்களின் ஆத்மா சாந்தி
யடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
வலம்புரி
நிர்வாகம்.

BITSMANS
கல்வி நிறுவனம் மானிப்பாய்.
அனேக மாணவர்கள்
பெற்றோர்களின்
வேண்டுகோளுக்
கிணங்க புதிய பிரிவு
பிரிவு 2
O/L Day Class
(NO. 1 SUPER GRADE ஆசிரிய குழு)
ஆரம்பம்: 3/MAY/2010 திங்கள் 8.00 A.M
'எமது கல்வி நிறுவனத்தின் தரத்திற்கு
கடந்த கால பெறுபேறுகள் 'சான்றாகும்'
(1306)

யாழ் நகரின் No 1 கல்வி நிறுவனம்!
நாவலர்
O/L பிரிவு 2
Day Class
(Mon-Fri
8.30-1.30Pm)
ஆரம்பம்
May 3


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.